
மருத்துவமனை சிற்றூழியர் நேற்று கவனவீர்ப்புப் போர் பக். 5


நிலச்சரிவில் சிக்கி 60 பேர் சாவு பக். 7


சாரங்கன் ஹட்ரிக் கோல் வென்றது பருத்தித்துறை பக். 24


சென்னை சுப்பர் கிங்ஸ் தடை செய்யப்படுமா? பக். 25


இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 27 °c
குறைந்த வெப்பநிலை 22 °c
பனி கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

பக்கம் : 34
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 078 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 30, புதன் 12.02.2014


## மாங்குளத்தில் கோர விபத்து 2 சிறுவர் உட்பட ஐவர் சாவு

### *6 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் நேற்று அதிகாலை ஏ- 9 வீதியில் சம்பவம்*

கிளிநொச்சி, பெப் 12
மாங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் 2 சிறுவர்கள் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். 6 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
ஏ-9 வீதியில் மாங்குளம் பழையமுறிகண்டியை அண்மித்த 232 ஆவது கிலோமீற்றர் பகுதியில் நேற்று அதிகாலை 3.15 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
ஹைஏஸ் வாகனம் ஒன்று டிப்பருடன் மோதியதில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க



*விபத்தில் மோசமாகச் சேதமடைந்து உருக்குலைந்த ஹைஏஸ் வாகனம்*

## நேற்று மட்டும் 7 பேர் விபத்துக்களில் சாவு

முல்லைத்தீவு, பெப் 12
புதுக்குடியிருப்பு மற்றும் மாங்குளம் ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர். மாங்குளத்தில் இடம்பெற்ற விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் தாயும் அவரது மகளும் உயிரிழந்துள்ளனர். மற்றுமொ

23 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவப் பிரசன்னத்தால் வடக்குப் பெண்கள் பாதிப்பு

### *அமெரிக்க அதிகாரிக்கு விளக்கம்*

கொழும்பு ,பெப் 12
வடக்கு மாகாணத்தின் அதிகரித்த இராணுவப் பிரசன்னம் காரணமாகப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பெண்கள் விவகாரங்களுக்கான சிறப்புத் தூதுவர் கத்தரின் ருசெல்லுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்கள் அமைப்பினால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.
இலங்கைக்கு, நுழைவிசைவு (விஸா) மறுக்கப்பட்ட, கத்தரின் ருசெல் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலுள்ள அமெரிக்கன் நிலையத்தில், உள்

23 ஆம் பக்கம் பார்க்க

## சுவர் இடிந்து விழுந்ததில் சிப்பாய் சாவு

யழ்ப்பாணம், பெப் 12
பலாலிப் படைத் தலைமையகத்தில் பணியாற்றிய சிப்பாய் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.
பலாலியில் உள்ள கட்டடம் ஒன்றின் சுவர் திடீரென இடிந்து விழுந்தமையால் அதில் அகப்பட்டு அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
இதில் கண்டி வலப்பனையைச் சேர்ந்த எஸ்.பண்டார

23 ஆம் பக்கம் பார்க்க

# தனித் தமிழீழம் கோரி ஐ.நா. முன் முற்றுகை

### *இன்று நடத்துகிறது மே 17 இயக்கம்*

நியூயோர்க்,பெப்ரவரி 12
சுதந்திர தமிழீழத்துக்கான வாக்கெடுப்பு நடத்துமாறு கோரி நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமைச் செயலகம் முன்பாக இன்று புதன்கிழமை முற்றுகைப் போர் இடம்பெறவுள்ளதாக மே 17 இயக்கம் அறிவித்துள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத் தொடர் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. இதன்போது இலங்கைக்கு எதிராகக் கடுமையான பிரேரணையொன்றைக் கொண்டுவரும் செயற்பாடுகளில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்தப் பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் அமெரிக்கா ஆராய்ந்து வருகின்றது.
இவ்வாறானதொரு நிலையிலேயே மே 17 இயக்கம் அமெரிக்காவின் பிரேரணையை வலுவூட்டும் விதத்தில் இன்று முற்றுகைப் போரை நடத்தவுள்ளது.
ஈழத்தில் போர் முடிவடைந்து 4 வருடங்கள் கடந்துள்ள நிலை

23 ஆம் பக்கம் பார்க்க

**காணாமற்போனோர் விசாரணைகளில் நம்பிக்கை இல்லை**

விவரம் 2 ஆம் பக்கத்தில்

## 59

மன்னார்.பெப் 12
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று மேலும் ஒரு மனித எலும்புக் கூடு மீட்கப்பட்டதுடன் ஒரு தொகுதி மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.
மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரட்ண தலைமையில் 21

23 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் முன்னேறுவதற்கு 3 ஆம் தரப்பு வேண்டும்

### *வடக்கு முதலமைச்சர் கூறுகிறார்*

யாழ்ப்பாணம்,பெப்.12
மூன்றாம் தரப்பொன்றின் ஒத்துழைப்புடனேயே தமிழ் மக்கள் முன்னேறமுடியும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்குக்கு நேற்று வருகை தந்த ஐ.நாவின் உதவிச் செய

23 ஆம் பக்கம் பார்க்க



*ஐ.நா. பிரதிச் செயலருடன் வடக்கு முதலமைச்சர்*

## காணாமற்போனோரின் உறவினர்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம்,பெப்.12
காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி) காணாமற்போனோரின் உறவுகள் கிளிநொச்சி பொலிஸ்

23 ஆம் பக்கம் பார்க்க

## புலிச் சந்தேக நபர் கட்டுநாயக்காவில் நேற்றுக் கைது

கொழும்பு,பெப்.12
தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நேற்று மாலை கைது செய்துள்ளனர்.
இது தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரு

23 ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழையில் சிகரெட் வெள்ளியன்று கிடையாது

வலி வடக்கு பெப். 12
நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சிகரெட் உட்படப் புகைத்தல் பொருள்களை விற்பனை செய்வதில்லை என்று பிரதேச

23 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் குறித்த விசாரணைகள் நம்பிக்கைக்குரியனவாக அமையவில்லை

## *சிவில் அமைப்புக்கள் குற்றச்சாட்டு; ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவருக்கும் மனு*

கொழும்பு, பெப்.12

காணாமற் போனோர் தொடர்பில் விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முதல் அமர்வு கிளிநொச்சியில் நடைபெற்ற பின்னர் அது தொடர்பிலான தமது கவலையை வடக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த சிவில் சமூகத்தினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

சிவில் சமூகத்தின் கவலைகள் தொடர்பான மனு ஒன்று ஆணைக்குழுவின் தலைவரிடம் இன்று கையளிக்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காணாமற்போனோருடைய குடும்பங்களின் மனக்குறைகளை அணுகியமைக்கும், காணாமற்போனோரின் தற்போதைய நிலை என்ன என்பதை உறுதிப்படுத்தி அவர்களின் குடும்பங்களுக்குத் தெரியப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதிக்கு நாம் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்

எனினும் எமது முன்னைய கடிதத்தில் (06.11.2013 திகதியிட்ட) தெரிவிக்கப்பட்டுள்ள சில பிரச்சினைகள் தொடர்பாக இன்னமும் பொருத்தமான அணுகுமுறை மேற்கொள்ளப்படவில்லை என்பதை நாம் தெரியப்படுத்தியாகவேண்டும். குறிப்பாக நாம் நினைவூட்டுகின்றோம். அதாவது 1990 2009 வரைக்குமாக எடுக்கப்பட்ட காலத்துக்கு அப்பால் முழு இலங்கையையும் உள்ளடக்கிய விசாரணைக்காக ஆணைக்குழுவின் பணியை விரிவுபடுத்தல், ஐக்கிய நாடுகளின் பலவந்தமான மற்றும் தன்னிச்சையான காணாமற் போதலுக்கான குழுவை அமைத்தல், ஆணைக்குழுவின் பணியை நிறைவேற்றும் செயற்பாடுகளுக்குப் போதிய நிதியைப் பெற்றுக் கொடுத்தல், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புக்கான சட்டவாக்கம் ஒன்றை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம்.

இதேவேளை கிளிநொச்சியில் கடந்த ஜனவரி 18 முதல் 21ஆம் திகதி வரை நடந்த விசாரணைகள் தொடர்பான எமது அவதானிப்புக்கள் மற்றும் அதனுடன் தொடர்புள்ள விடயங்கள் சார்பாக எமது கருத்துக்களையும் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

இந்த விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அதே மாவட்டத்தில் பிறிதொரு தெளிவற்ற செயன்முறை மூலம் காணாமற்போனோருக்கான மரணச் சான்றிதழ் மற்றும் நட்டஈடு வழங்கியமை தொடர்பாக உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றோம்.

முக்கியமாகக் காணாமற் போனோர் குடும்பங்கள் கூட்டாக பின்வரும் விடயங்களைத் தங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றோம்:

1. நவம்பர் 2013 இல் இருந்து ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் எனத் தம்மை அடையாளப்படுத்திய சில இராணுவ அதிகாரிகள் காணாமற்போனோரின் குடும்பங்கள் பற்றிய தகவல் சேகரிப்பு மற்றும் அவர்களைப் பதிவு செய்தலுடன் உள்ளடக்கம் என்ன என்று விளங்கிக்கொள்ள முடியாத ஆங்கில படிவங்களில் கையொப்பம் இடுமாறு கோரப்பட்ட செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இராணுவ அதிகாரிகளின் தலையீடு எந்த ஒரு நடவடிக்கையிலும் இருக்கமாட்டாது என ஆணைக்குழு உறுதிப்படுத்த வேண்டும். இந்நிலையில் கிராம சேவகர்கள் பணிக்கமர்த்தப்பட்டுக் குடும்பங்களுக்குத் தேவையான தகவல்களை எவ்வாறு வழங்கவேண்டும் என்னும் பயிற்சி அளிக்கப்படவேண்டும். தற்போதைய நிலையில் இராணுவ அதிகாரிகளுக்கு காணாற்போனோரின் குடும்பங்களில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் இலகுவாக இருப்பதனால் சாட்சிகள் பாதுகாப்பு ஒரு கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படுதல் வேண்டும். இராணுவத்தினரே இந்தக் காணாமற் போதலுடன் தொடர்புபட்டிருக்கும் பட்சத்தில் இந்தக் கட்டமைப்பு முக்கியமான தொன்றாகும்.

2. சட்ட உதவி ஆணைக்குழு குழுவினர் உத்தியோகபூர்வமாக ஆணைக்குழுவால் அழைக்கப்பட்டாலும் அவர்கள் விசாரணைகளைக் கேட்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை என்பதை நாம் அவதானித்துள்ளோம். ஜனவரி 18 ஆம் திகதி முதல் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகள் என அடையாளப்படுத்திக் கொண்ட அதிகாரிகள் சட்ட உதவி ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணையை பார்வையிட அனுமதி மறுத்ததை நாம் அவதானித்துள்ளோம். ஒரு சுயாதீன விசாரணையை நிலைநிறுத்தி முடிவுகள் எட்டப்படுவதில் ஏகபோன அதிகாரத்தை ஆணைக்குழு கொண்டிருக்க வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும்

3. எவ்வகையான முறைப்பாடுகள் ஆணைக்குழு முன்னிலையில் கொண்டுவரப்படவேண்டும் என்னும் தெரிவுக்கான விதிகள் மற்றும் முக்கியப்படுத்ததலுக்கான நடைமுறைகள் பற்றி ஆணைக்குழு தெளிவுபடுத்தவோ தொடர்பு கொள்ளவோ இல்லை. எந்த அடிப்படையில் முறைப்பாடுகள் தெரிவு செய்யப்பட்டன என்றும், சகல முறைப்பாடுகளையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கான விரிவான கால அட்டவணையை உருவாக்கி அதனைப் பொது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

4. விசாரணைகளின் பொழுது குடும்பங்கள் வழங்கிய தகவல்களை ஒருங்கிணைக்க உதவிய சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சார்ந்த அரச சட்டத்தரணிகளே அரசு சார்பாகவே ஆட்கொணர்வு வழக்குகளில் முன்னர் தோன்றியதை நாம் அவதானித்துள்ளோம். இது நீதி கிடைப்பதற்கான நேர்மையான நடைமுறையில் தீங்கு விளைவிக்க கூடிய முரண்பாட்டுத் தன்மைகளை உருவாக்கும். இதற்காக, வருங்காலத்தில் பாகுபாடு அற்ற முறையில் நியாயமான நடைமுறைகளுக்கான சட்டவிதிகளைப் பாதுகாக்கும் வகையில் அதிகாரிகளைப் பணிக்கு அமர்த்த ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைக்கின்றோம்.

5. விசாரணைகளின் போது ஆணைக்குழு போதுமான அளவு தமிழ் பேசும் அதிகாரிகளைப் பணிக்கமர்த்தவில்லை என்பதுடன் தகவல் சேகரிப்பை பெருமளவில் பாதிக்கும் முன் தயாரிப்பு அற்ற மொழி பெயர்ப்பாளர்கள் இருந்தார்கள் என்பதையும் அவதானித்தோம். முக்கியமாக மொழிபெயர்ப்பாளர்கள் எண்ணிக்கை குறைவு என்பதுடன் அவர்களின் மொழிபெயர்ப்பு முழுமையற்றதும் திருப்தியற்றதுமாக இருந்தது. கேள்விகளுக்கு முன்னர் விடைகளைத் தெரிவித்ததையும்; முறைப்பாட்டாளர்களுடன் தர்க்கித்ததையும், வாக்குமூலம் அளித்த குடும்பங்களுக்கு விரோதமாக நடந்து கொண்டதையும் அவதானித்தோம். வாக்குமூலங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையில் ஆங்கிலத்தில் பிரதியிடப்பட்டமையானது குடும்பங்கள் தாம் வழங்கிய வாக்குமூலத்தை பரீட்சிப்பதைத் தடுத்துள்ளது.

விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கையில் பிறிதொரு இடத்தில் நடந்த காணாமற்போனோருக்கான மரணச் சான்றிதழ் மற்றும் நட்டஈடு வழங்கிய நிகழ்வு தொடர்பாகக் கீழ்வரும் விடயங்களை உங்கள் கவனத்துக்கு நாம் கொண்டுவர விரும்புகின்றோம்;:

கடந்த ஜனவரி 13 மற்றும் 17ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் உள்ள காணாமற்போனோரின் குடும்பங்ககளின் வீடுகளுக்கு ஆணைக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துபவர் எனச் சாட்டப்பட்ட சிலர் சென்றுள்ளதை நாம் அவதானித்துள்ளோம். அந்த அதிகாரிகள் காணாமற்போனோர் தொடர்பான பிரத்தியேகத் தகவல்களைக் கோரியதுடன் அவற்றைப் பதிவு செய்துள்ளனர். பின்னர் அந்தக் குடும்பங்கள் கிளிநொச்சி நகரின் ஒற்றுமை நிலையத்துக்கு ஜனவரி 21 ஆம் திகதி வருமாறு அழைக்கப்பட்டுக் காவல்துறையினரின் பாதுகாப்பில் பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அங்கு அவர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு, புனர்வாழ்வு மற்றும் சொத்துக்கள் கைத்தொழில் புனருத்தாபன அதிகாரசபை, சமுர்த்தி அதிகாரசபை, தொழில் திணைக்கள பிரதிநிதிகள், மற்றும் ஆட் பதிவு திணைக்கள அதிகாரிகளை சந்தித்துள்ளனர். காணாமற் போன குடும்ப நபருக்கான நட்டஈட்டு தொகையானது குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் 100000 முதல் 300000 வரை நட்டஈடு பெற்றுக் கொள்வதற்காக புனர்வாழ்வு மற்றும் சொத்துக்கள் கைத்தொழில் புனருத்தாரண அதிகாரசபையால் வழங்கப்பட்ட படிவத்தை நிரப்பும்படி கோரப்பட்டுள்ளனர். எங்களுக்குக் கிடைத்த தரவுகளின்படி ஒன்பது குடும்பங்கள் மட்டுமே அந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து நட்டஈட்டுடன் மரணச் சான்றிதழ் பெற்றுக்கொண்டுள்ளனர். அதே நாள் இந்தக் குடும்பங்கள் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் கிளிநொச்சிக்கான சுதந்திரக் கட்சி அமைப்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றிய நிகழ்வு ஒன்றுக்காகக் கிளிநொச்சி இரணைமடுவுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வில் சில குடும்ப உறுப்பினர்களுக்கான ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒற்றுமை நிலையத்தில் நடைபெற்ற இந்த அனைத்து நடைமுறைகள் தொடர்பாக ஆணைக்குழு தெரிந்துள்ளதா எனவும்; இது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணைகளில் ஒன்றா எனவும் நாம் அறியத் தலைப்பட்டுள்ளோம். இது தொடர்பாகப் பொதுமக்களுக்கு உத்தியோகபூர்வமான தகவல் வழங்கப்படவில்லை என்பதுடன் இந்த நடைமுறை தொடர்பான சட்ட ஒழுங்கு முறை என்ன எனக் கேள்வி எழுப்பத் தலைப்பட்டுள்ளோம்.

முடிவாக, இடம்பெற்ற இந்த விசாரணைகள் தொடர்பான தகவல்களைச் சரிபார்க்கத் தேவையான தொடர் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட தகவல்களை தெரியப்படுத்தவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம், அத்துடன் இது தொடர்பான ஆணைக்குழுவின் பொறிமுறையையும் கால அட்டவணையையும் நாம் அறிய ஆவலாக உள்ளோம். கிளிநொச்சியில் நடந்த விசாரணைகளின் அடிப்படையில், மிகக்குறைந்த அளவான முறைப்பாடுகள் அதாவது 150 இற்கு குறைவானவையே விசாரணைக்கு எடுக்கக் கூடியதாக இருந்தது என்பதை நாம் அவதானித்துள்ளோம்..

சர்வதேச தரத்துடனான நடைமுறைகள் பின்பற்றப்பட்டால் மாத்திரமே உண்மைகளை ஆவணப்படுத்த, காணாமற் போனோர் குடும்ப உறவுகள், குடும்பங்களின் அமைப்புக்கள், பொதுமக்கள் அமைப்புக்கள் ஆகியவை ஆணைக் குழுவுடன் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளன என்பதை நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றுள்ளது.(த)

## வடமராட்சி மீனவர்கள் ஐவர் இந்தியக் கடற்படையால் கைது

வடமராட்சி,பெப்.12

வடமராட்சி வடக்கு இன்பருட்டியைச் சேர்ந்த 5 மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த காளியன் நடராஜா (48 வயது) வேலுப்பிள்ளை சிவராஜலிங்கம் (38 வயது) இளங்கொடி கார்த்திக் (38 வயது) முத்துலிங்கம் ஜெயசீலன் (26வயது) குணசீலராஜா இளையராஜா (28 வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

எல்லை தாண்டி மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரவு வேளையில் கைதான 5 மீனவர்களும் தமிழகத்தில் உள்ள நாகபட்டினத்தில் இந்திய கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களுக்கும் கடற்றொழில் சங்கங்களுக்கும் தகவல்கள் கிடைத்துள்ளன.

(த-17-173)

## கடலாமை பிடித்தவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.12

மண்டைதீவுக் கடற்பகுதியில் கடலாமை பிடித்த ஒருவரை நேற்றுப் பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் ஆமையும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

ஆமை பிடித்தவர் உடனடியாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சட்ட விரோதமாகப் பிடிக்கப்பட்ட இந்தக் கடலாமையைக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் மேற்பார்வையில் கடலில் விடுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஆமை பிடித்தவருக்கு 3 ஆயிரம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

(த-17)

# வடக்கு அபிவிருத்திக்கு ஐ.நா. முழுமையாக ஒத்துழைக்கும்

## *முதல்வரிடம் ஐ.நா. உதவிச் செயலாளர் உறுதி*

யாழ்ப்பாணம்,பெப்.12

வடக்கின் அபிவிருத்திப் பங்காளர்களாக செயற்படுவதற்கு ஐ.நா. தயாராக இருப்பதாக உதவிச் செயலாளர் தன்னிடம் உறுதியளித்தார் என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கைக்கு நான்கு நாள் பயணமாக கடந்த 8 ஆம் திகதி வருகை தந்த ஐ.நா உதவிச் செயலரும், யு.என்.டி.பியின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளருமான ஹஓலியாங் ஸு, ஒரு நாள் பயணமாக வடமாகாணத்துக்கு நேற்று வருகை தந்தார். இவருடன் இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி [illegible] வருகை தந்திருந்தார்.

**ஆளுநருடன் சந்திப்பு**

இருவரும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை யாழிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். சுமார் அரை மணிநேரம் வரையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பில் முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கின் அபிவிருத்திக்கு ஐ.நா. பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக வடக்கு ஆளுநர் தன்னிடம் உறுதியளித்ததாக ஸு சந்திப்பின் என்னிடம் தெரிவித்தார். வடக்கில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் ஆளுநர் அடையாளப் படுத்தியதாகவும் அவர்கள் கூறினர்.

**மக்களின் அன்றாடப் பிரச்சினை**

பெரிய அளவிலான செயற்திட்டங்களிலும் பார்க்க எங்கள் மக்களது அன்றாடத் தேவைகளையும், பிரச்சினைகளையுமே தீர்க்க வேண்டியுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட அவர்களது வாழ்க்கை நலன்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும். அதனைப் பற்றி நாங்கள் கரிசனை காட்டுகின்றோம். அரசைப் பொறுத்த வரையில் அவ்வாறான ஒரு எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை என்பதையும் நான் ஐ.நா. பிரதிநிதிகளிடம் வலியுறுத்தினேன்.

அதற்கு அவர் சேர்ந்து ஒத்துழைப்பதற்கான சந்தர்ப்பம் வரும்போது, ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சேர்ந்து பணியாற்றுவதற்கு எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. மக்கள் நலனுக்காக நாம் ஒன்றிணைந்து செயற்படத் தயாரக உள்ளோம் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

**ஐ.நாவும் ஒத்துழைக்கும்**

எங்களுடன் பங்குதாரர்களாக இருந்து செயற்படுவதாக ஐ.நா. அதிகாரிகள் உறுதியளித்தனர். அத்துடன் வடக்கின் அபிவிருத்திக்கு ஐ.நா. எவ் வகையான உதவிகளைச் செய்யலாம் என்பது தொடர்பிலும் அவர்கள் முழுமையாக ஆராய்ந்தனர் - என்றார். (ஐ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 794 இலக்க பஸ் சேவை சீரின்மையால் பெரும் சிரமம்

தென்மராட்சி, பெப்.12

யாழ்ப்பாணத்திலிருந்து கனகன்புளியடி ஊடாக கொடிகாமம் செல்லும் 794 மார்க்க பஸ் கடந்த நான்கு நாள்களாக பழுதடைந்ததால் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மார்க்கத்தில் ஒரேயொரு பஸ் மட்டும் சேவையில் ஈடுபடுவதால் மட்டுவில் சரசாலை, கல்வயல், வேம்பிராய் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள், அரச வங்கி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் குறித்த பஸ் சேவையையே நம்பியுள்ளனர். இந்த பஸ்ஸை நம்பி பலர் பருவ காலச் சீட்டையும் பெற்று பயன்படுத்துகின்றனர்.

குறித்த பஸ் கடந்த நான்கு நாள்களாக வீதியில் பழுதடைந்து நின்ற தால் குறித்த பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் அரச பணியாளர் பொது மக்கள் கால்நடையாக நீண்ட தூரம் பயணிக்க நேர்ந்தது.

நுணாவில் சந்தியிலிருந்து கனகன்புளியடிச் சந்தி வரையான 4 கிலோ மீற்றர் தூரமான வீதி மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் தனியார் மினி பஸ்கள் குறித்த மார்க்கத்தில் சேவை நடத்துவதை நிறுத்தியுள்ளன.

இந்த நிலையில் இ.போ.ச வின் பஸ் சேவையை நம்பியுள்ள மட்டுவில், கல்வயல், சரசாலை, வேம்பிராய் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் இந்த சேவையில் தரமான பஸ்ஸை ஈடுபடுத்துமாறு கோரியுள்ளனர். (வ-9)



தென்மராட்சி பிரதேசத்தில் ரயில் பாதை அமைக்கும் பணிகள் நிறைவடைந்த பகுதிகளில் இலத்திரனியல் சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ரயில் தண்டவாளம் பொருத்தப்பட்ட பகுதிகளில் நிலத்தின் கீழ் சமிக்ஞை விளக்குகள் பொருத்துவதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. (வ-9)

# பல்கலை மாணவர் ஒன்றியம் கையெழுத்துப் போராட்டம்

## கற்கைநெறிக்காலம் குறைத்ததைக் கண்டித்து




கையெழுத்து வேட்டையில் மாணவர்கள்

யாழ்ப்பாணம். பெப்.12

பல்கலைக்கழகங்களில் இணைந்த சுகாதாரக்கற்கை நெறிக்கான கல்விக் காலம் குறைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இணைந்த சுகாதாரக்கற்கை நெறிக்கான கல்விக் காலம்4 வருடத்தில் இருந்து 3வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து நாடளாவிய ரீதியில் கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று முன்தினம் தொடக்கம் கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கற்கை நெறிக்கான காலம் குறைக்கப்படுவதால் நடை முறைக்குரிய சில பாடத்திட் டங்களில் பங்குபற்றமுடி யாமல் பட்டதாரிகளாக வெளி யேற வேண்டியுள்ளது. இதன் எதிர்காலப் பாதிப்பைக் கருத்தில் கொண்டு பல்கலைக் கழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (வ-14-135)

# யாழ்.மாநகர சபை முதல்வர் முதலமைச்சருக்குக் கடிதம்

## சன சமூக நிலையங்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்காதமை குறித்து

யாழ்ப்பாணம், பெப்.12

சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புத் தொகை கடந்த 2011-2013 வரை வழங்கப்படவில்லை. எனவே அந்த நிதியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ்.மாநகர சபை முதல்வர் வடமாகாண சபை முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்று மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் மற்றும் மாநகர சபையின் சோலை வரி ஒப்பந்த வேலைகள் தொடர்பில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு குறித்த கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது குறித்த நிதி வழங்காதமை தொடர்பில் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். இதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

மாகாணத்தின் அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் குறித்த நிதி வழங்கப்பட வேண்டியுள்ளது. யாழ்.மாநகரசபை மட்டுமே தனது கட்டுப்பாட்டில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு நிதியை வழங்கவில்லை என்றில்லை. சபையின் கோரிக்கைக்கு அமைய மாகாண சபை இதற்கான நிதியை வழங்கும் பட்சத்தில் அவை சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும். சபை நிதியில் இருந்து ஊக்குவிப்புத் தொகை வழங்கு வது குறித்து உறுப்பினர்களே தீர்மானிக்க முடியும். அடுத்த கூட்டத்தில் இது விடயமாக சபையில் தெரிவிக்கப்படும்.

நிதி தொடர்பான கோரிக்கையை தமது பகுதி உறுப் பினர்கள் ஊடாக சனசமூக நிலையங்கள் சமர்ப்பித்தால் அது குறித்து அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் - என்றார். (வ-7)

# கரம்பகம் கிராமத்துக்கு மின்சாரம் கிடைக்குமா?

தென்மராட்சி, பெப்.12

தென்மராட்சி கிழக்கு கரம்பகம் கிராமத்துக்கு மின் வெளிச்சம் கிடைக்குமா என்று அந்தப் பகுதி மக்கள் ஆதங்கத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த மக்கள் 2010 ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களுக்கு திரும்பினர். அவ்வேளையில் அங்கு குடியிருப்புகள் எதுவும் இல்லாததால் தற்காலிக வீடுகளில் வசித்து பின்னர் சில குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டங்கள் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மாகாண சபைத் தேர்தல் காலத்தில் குறித்த பகுதிகளுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்விநியோகம் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்து மின்கம்பங்களும் கொண்டுவரப்பட்டன. பின்னர் கடந்த டிசெம்பர் மாதம் அவை ஏற்றிச் செல்லப்பட்டு விட்டன. முன்னர் இங்குள்ள வீடுகள் மின்வசதி பெற்றிருந்ததாகவும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரத்தை எதிர்பார்த்து மக்கள் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)

# இடமாற்றமின்றி 138 ஆசிரியர்கள் சேவையில்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 138 ஆசிரியர்கள் தொடர்ந்து 7 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகக் கடமையாற்றுகின்றனர் என்பது வலயத்தால் பெறப் பட்ட புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது. இதில் தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடமை யாற்றும் 18 ஆசிரியர்கள் அடங்குவர்.

வலயத்தில் இயங்கும் 60 பாடசாலைகளிலிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களின் பிரகாரம் இந்த விவரம் தெரியவந்துள்ளது. (வ-9)

# கேதீஸ்வரத்தில் மகா சிவராத்திரிக்கான ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடல்

## மன்னார் அரச அதிபர் தலைமையில்



கலந்துரையாடலில் மன்னார் அரச அதிபருடன் மற்றும் பல அதிகாரிகள்

மன்னார், பெப்.12

மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் இடம் பெறவிருக்கும் மகா சிவராத் திரி உற்சவம் தொடர்பான அவ சர கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மன்னார் அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது.

இதில் எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள மகா சிவராத்திரி உற்சவத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் போக்குவரத்து, வீதி ஒழுங்கு, பாதுகாப்பு, சுகாதாரம், சாரணியர் சேவை, வாகனத் தரிப்பிடம், தங்குமிடவசதி, கடைகள், ஒலிபரப்புச் சேவை, நிதி விவகாரம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இம்முறை சிவராத்திரி உற்சவத்தில் கலந்துகொள்ள நாட்டின் பல பாகங்களிலிருந்தும் 5 இலட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கமைவாக போக்குவரத்து சேவையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான மன் னார், வவுனியா, முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் ஆகிய டிப்போக்களைச் சேர்ந்த 83 பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. அதேபோன்று தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து மொத்தமாக 145 தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதேபோன்று சுகாதாரம் தொடர்பாக விசேட வைத்திய குழு மற்றும் அம்புலன்ஸ் சேவைகளும் ஏற்படுத்தப்படவுள்ளன. அன்னதானசாலைகள் மற்றும் சமையல் ஏற்பாடுகள் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்பார்வை செய்யப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலயப் பகுதியில் பொலித்தீன் பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மகா சிவராத்திரி உற்சவத்துக்கென 75 ஆயிரம் ரூபா ஆலய நிர்வாக சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.பரமதாஸ், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் குமாரஜோசப், உதவிபொலிஸ் அத்தியட்சகர் ஜ.பி.ரி.சுகதபால, திருக்கேதீஸ்வரர் ஆலய திருப்பணிச்சபையின் செயலாளர் திருநாவுக்கரசு, கூட்டுப் பொருளாளர் எஸ்.எஸ்.ராமகிருஷ்ணன், அறங்காவல் குழு உறுப்பினர் எஸ்.குமார் நமசிவாயம், உப தலைவர்களான என். கதிர்காமநாதன், ஜே.ஐ.தயானந்த ராஜா, சீ.பிரிந்தாவனம் உள்ளிட்ட ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (க-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறையில் மூகமுடி கிராமம்

யாழ்ப்பாணம்,பெப்.12

களுத்துறை மாவட்டத்தில் ஹொரண பகுதியில் 'மூகமுடி கிராமம்' நேற்று திறந்து வைக்கப்பட்டது. பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழிலை மேம்படுத்தும் வகையில் இந்த கிராமத்தில், தேசிய அருங்கலைகள் பேரவையினால் 80 பயனாளிகளுக்கு இரண்டு மில்லியன் ரூபா செலவில் அவர்களது வீடுகளிலேயே தொழிற் கூடங்கள் அமைத்து கொடுக்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு வழங்கியிருந்தது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தொழில் உபகரணங்களையும் மரக் கன்றுகளையும் வழங்கி வைத்தனர். (ஐ)

## பனை, தென்னை சங்க கிளை யாழ். நகரில்

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையம் ஒன்று யாழ். நகரில் கந்தப்பசேகரம் வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் எஸ். நடராசா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சங்கத்தின் பணியாளர்கள், பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். (த-17)

# வடக்குக்கு போக்குவரத்து அதிகார சபை

யாழ்ப்பாணம்,பெப்.12

வடக்கு மாகாண சபைக்குரிய போக்குவரத்து அதிகார சபையை அமைக்கும் நியதிச் சட்டம் அடுத்த மாதம் இடம் பெறவுள்ள அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அத்துடன் இந்த மாதத்துக்குரிய அமர்வில் எந்தவொரு நியதிச் சட்டமும் சமர்ப்பிக்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி,வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சினால், வடக்கு மாகாணத்துக்குரிய போக்குவரத்து அதிகார சபை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சினால் ஏற்கனவே இந்த மாதம் முதலாம் திகதி முதல் 101 நாள் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக வடக்கிலுள்ள தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய ஏனைய சங்கங்கள் ஆகியவற்றுடன் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்கள் நடத்தி வருகின்றார்.

இதன் தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்துக்குரிய போக்குவரத்து அதிகார சபை நிறுவப்படவுள்ளது. இதற்காக நியதிச் சட்டம் தயாரிக்கும் நடவடிக்கையில் குறித்த அமைச்சு ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

வடக்கு மாகாணத்துக்குரிய போக்குவரத்து அதிகாரசபை, வீடமைப்பு அதிகாரசபை ஆகியவற்றுக்கான நியதிச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் மாகாண சபையின் அடுத்த மாத அமர்வில் அவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன. (5)

# வடக்கு மாகாணக் கொடிக்கு இன்னும் அங்கீகாரம் இல்லை

யாழ்ப்பாணம்.பெப்.12

வடக்கு மாகாண சபைக் கொடி மற்றும் இலட்சினை என்பனவற்றுக்கான அங்கீகாரம் இதுவரையில் வழங்கப்படவில்லை. இதனால் பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வடக்கு மாகாண சபைக் கொடியை பயன்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு சபைக்கான செங்கோல் மற்றும் தவிசாளருக்குரிய ஆடை என்பனவற்றைத் தனித்துவமாகத் தயாரித்து அதற்கான அங்கீகாரத்தையும் சபையில் பெற்றுக் கொண்டது.

இதேபோன்று வடக்கு மாகாண சபைக் கொடி மற்றும் இலட்சினை என்பனவும் கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இதன்போது, ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன், உறுப்பினர்களுக்கு இது தொடர்பில் முன்னரே அறிவிக்கப்படவில்லை என்று கூறியதுடன் இந்த விடயத்தில் உறுப் பினர்களினதும், பொது ம்க்களினதும் அபிப்பிராயம் பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அடுத்த அமர்வில் கொடி மற்றும் இலட்சினை அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அடுத்த அமர்வு கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்றபோது இது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அத்துடன் மாகாண சபைக் கொடி மற்றும் இலட்சினை தொடர்பில் இதுவரை உறுப்பினர்களோ அல்லது பொது மக்களோ அபிப்பிராயங்களை முன்வைக்கவில்லை.

மாகாணசபையின் அடுத்த கூட்டத் தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இந்தக் கூட்டத்தி லாவது அவை அங்கீகரிக்கப் படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தற்போது வடக்கில் பெரும்பாலான பாடசாலைகளின் இல்லமெய்வன்மைப் போட்டிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களே அழைக்கப்படுகின்ற நிலையில், அவர்கள் தேசியக் கொடிகளை ஏற்ற மறுத்துவருகின்றனர். மறுபுறத்தில் மாகாண சபைக் கொடி அங்கீகரிக்கப்படாமையால் பாடசாலைகளில் மாகாண சபைக் கொடியும் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

மாகாணசபைக் கொடி மற்றும் இலட்சினைக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு அதனைப் பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும் என்று அதிபர்கள் கோரியுள்ளனர். (த-5)

# 'டிலு' குறூப்பைச் சேர்ந்த மேலும் நான்கு பேர் கைது

யாழ்ப்பாணம், பெப்.12

'டிலு' குறூப்பைச் சேர்ந்த மேலும் நான்கு பேரை வட்டுக் கோட்டைப் பொலிஸார் கொக்குவிலில் வைத்து கைது செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 'டிலு' குறூப் என்ற பெயரில் இயங்கி வந்த அடாவடிக் குழுவைச் சேர்ந்த 9 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து கத்தி, வாள் உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் இராணுவச் சீருடை என்பன மீட்கப்பட்டன.

இந்த நிலையில் குறித்த வீட்டில் தங்கியிருந்த மேலும் நான்கு பேரை வட்டுக்கோட்டைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் ஒருவர் விமானப் படையிலிருந்து விலகியவர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஜா எல பகுதியைச் சேர்ந்த 2 பேரும் கொட்டாவப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் அங்கொடையைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் பகுதியில் 'டிலு' குறூப் தங்கியிருந்த வீட்டில் இருந்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட 9 பேரில் 4 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் 5 பேர் விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4-400)

# ஐ.நா தீர்மானத்துக்கு ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரவு

யாழ்ப்பாணம், பெப்.12

இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்படும் குற்றங்கள் தொடர்பிலும் நாட்டின் தற்போதைய மனித உரிமை நிலைமைகள் குறித்தும் நம்பகமான சுயாதீன விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதனை உள்ளடக்கி இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலில் விரிவாக்கம் செய்வதற்கான முயற் சிகளுக்கு ஆதரவளிக்க ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்படும் நகர்வு களுக்கு அனுசரணை வழங் குவது என ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

பிரசெஸ்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய வெளிவிவகார சபையின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மார்ச் மாத கூட்டத்தொடரில் விவாதிக்கப்படவுள்ள விடயங்கள் குறித்து இந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதன் போது உலக நாடுகள் அனைத்திலும் மனித உரிமைகளை மேம்படுத்துவதை ஐ.நாவுடன் இணைந்து தாம் ஊக்கப் படுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ-5)

# மத்திய வகுப்பு காணி பிரச்சினை விரைவில் தீர்க்க விசேட அனுமதி

கிளிநொச்சி,பெப்.12

மத்திய வகுப்பு காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும் இது தொடர்பான விசேட அமைச்சரவை அனுமதி பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது இவ்வாறு தெரிவித்தார் காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய காணி தொடர்பான முன்னேற்ற கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கலந்து கொண்டு காணிப் பிரச்சினைகள் குறித்து விளக்கமளித்தார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஆர். ராஜபக்ஷ நில அளவை ஆணையாளர் நாயகம் தவலிங்கம் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஜே.ரஞ்சித், வட மாகாண காணி ஆணையாளர் தயானந்த, கிளிநொச்சி முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேச செயலர்கள் காணி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-18)

## பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் 14/02/2014 அன்று நடத்தப்பட இருந்த யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபருக்கான வரவேற்பு உபசார விழா தவிர்க்க முடியாத காரணங்களினால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

செயலாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், வட்டுக்கோட்டை

## மரண அறிவித்தல்

### சின்னையா மகேசன்



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகேசன் கடந்த (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னையா-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசிங்கம்-கன கேஸ் வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சித்திராவின் அன்புக் கணவரும், துசாரியின் பாசமிகு தந்தையும், துசியந்தி, மயூரன், நிஷாந்தினி, பிரதுசா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.

தகவல் :
குடும்பத்தினர்.

# கொலைக்குற்றச்சாட்டு சந்தேக நபர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி வீதியில் குடும்பஸ்தர் ஒருவருக்கு அசிட் ஊற்றி அவரை வாளால் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக் கமறியலில் வைக்கப்பட்டிருந்த 7 பேர் யாழ். மேல்நீதிமன்றி னால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.மேல்நீதிமன்றில் இவர்கள் சார்பில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் பிணை அனுமதி வழங்கினார்.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி வீதியில் கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி அப்துல்முகமட் அப்துல்காதர் என்பவரே அசிட் ஊற்றப்பட்டு வாள்வெட்டுக்கு இலக்கானார். வாள்வெட்டுக் காயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

இந்தக் குற்றச்சாட்டில் யாழ்ப் பாணம் மற்றும் பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்களென 7 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் தொடர்பிலேயே பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்று ஒவ்வொருவரையும் தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தலா இரண்டு ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்தது. (ஐ-4)

# இளம் பெண் சடலமாக மீட்பு

கைதடி பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மீசாலை வடக்கு நவபுரம் என்ற இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை-அற்புதராணி (24 வயது) என்ற இளம் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றியல் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதே வேளை தூக்கில் தொங்கிய நிலையில் உறவினரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப்பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சிவகுரு கலைச்செல்வி (வயது 43) குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். (த-4-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை சிற்றூழியர் நேற்று கவனவீர்ப்புப் போர்

## வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில்




ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட யாழ். போதனா மருத்துவமனை சிற்றூழியர்கள்.

யாழ்ப்பாணம், பெப். 12

வடக்கு மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய மற்றும் மாகாண மருத்துவமனைகளில் பணிபுரியும் சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை தொடக்கம் 5 மணித்தியாலங்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'சீருடைக் கொடுப்பனவை ஒரே தடவையில் வழங்க வேண்டும், தற்காலிக மற்றும் அமைய ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க வேண்டும், மேலதிக நேரக்கடமைக்கான கொடுப்பனவுகளை வழங்க வேண்டும், 5 நாள்கள் கொண்ட வேலை வாரத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், முறையற்ற பதில் கடமை நியமனம் வழங்குவதை உடனடியாகக் கைவிடல் வேண்டும், சுற்றறிக்கையில் கிடைக்க வேண்டிய உரிமைகள் உள்ளிட்ட தற்போது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஏனைய சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும், அபாயக் கொடுப்பனவை அதிகரித்தல்வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எமது தொழிற்சங்கத்தினருக்கும் கொழும்பு சுகாதார அமைச்சரவை அதிகாரிகளுக்கும்இடையேபதவிஉயர்வு, தொழில் பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகள் தொடர்பில் பல தடவை கலந்துரையாடல் இடம்பெற்றது. எனினும் இதுவரை எந்தவித முடிவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தவிர இவை தொடர்பில் சுற்றறிக்கை வெளியீடுகையில் ஒன்றுடன் ஒன்று தொடர் பின்மையால் உருவாகியுள்ள பிரச்சினைகளும் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை உரிய முறையில் செயற்படுத்தப்படாததாலும் சிற்றூழியர்கள் பெரும் வெறுப்புணர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர்.

2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 16 தடவைகள் அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. எனினும் இதுவரை எந்தவித தீர்வும் கிடைக்கவில்லை. எமது கோரிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளரிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

நிதி அமைச்சின் செயலாளரும் அரச நிர்வாகச் செயலாளரும் சுற்றறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கூறியுள்ளபோதும் திறைசேரி செயலாளரின் பரிந்துரையின்படி உரிய ஆள்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு விதிமுறைகள் என்பவற்றுக்கு 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் 14 ஆம் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழு அனுமதியளித் திருந்தாலும் 7 வருடங்களாக உரிய சம்பளமும் பதவியுயர்வும் வழங்குவது குறித்து எதுவித ஆர்வமும் காட்டவில்லை.

இதனால் ஓய்வுபெற்றவர்களுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று சிற்றூழியர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-4-9-86-173-36)

# ஆணைக்குழுவில் முறையிட கடற்றொழிலாளர் முடிவு

## வாரத்தில் இருதினங்கள் கடலுக்குச் செல்லத் தடை விதித்ததால்

தென்மராட்சி, பெப்.12

கொடிகாமம், அல்லாரை படை முகாமின் துப்பாக்கி சுடும் பயிற்சியால் வாரத்தில் இரு நாள்கள் தொழிலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டதால் கடலேரியில் தொழிலில் ஈடுபடுவோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடவுள்ளதாக கோயிற்குடியிருப்பு கடற்றொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

துப்பாக்கி சுடும் பயிற்சியை முன்னிட்டு இதுவரை காலமும் குறித்த நேரத்துக்கு முன்னர் தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்று மறுநாள் காலை கரைக்குத் திரும்ப வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு அதுவே நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

துப்பாக்கி சுடும் பயிற்சியை வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர், மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்களப் பணிப்பாளர், தென்மராட்சி பிரதேச செயலர் உட்பட பலருக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை. தற்போது வாரத்தில் இருதினங்கள் கடலேரியில் பயிற்சிகள் மேற்கொள்ள வுள்ளதால் அந்த நாள்களில் தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடலேரியில் நூற்றுக்கணக்கானோர் தினமும் தொழில் செய்து தமது குடும்ப ஜீவனோபாயத்தை நடத்திவருகின்றனர். அண்மைய காலநிலை மாற்றத்தால் கடல் உணவு பிடிபடுவது மிகக் குறைவாகவே உள்ளது. இந்தநிலையில் இருதினங்கள் துப்பாக்கிசுடும் பயிற்சிக்காக தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என்று தடுப்பது பல குடும்பங்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகக் கருதப்படுகிறது. (வ)

# தீவிரமாக இடம்பெற்றுவரும் 101 நாள் வேலைத்திட்டங்கள்

தென்மராட்சி, பெப்.12

வடமாகாண சுகாதார அமைச்சின் 101 நாள் வேலைத்திட்ட செயற்பாடுகள் அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மும்முரமாக இடம் பெற்று வருவதைக் காண முடிகிறது.

உணவுப் பொருள் கையாளும் வர்த்தக நிலையங்களுக்குத் தரச் சான்றிதழ் வழங்குவது தொடர்பான பரிசோதனைகள், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஒவ்வொன்றிலும் உள்ள 3 கிராமங்கள் தெரிவு செய்து தொற்றா நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளல். சுகாதார மேம்பாட்டுப் பாடசாலைகளில் மாணவர்களின் பரிசோதனை, போஷாக்கு மட்ட அளவீடு, முன்பள்ளி களில் போசாக்கு, பற்சுகாதா ரம் போன்றவை பரிசோதனை மேற்கொள்ளல் உட்பட பல்வேறு செயற்றிட்டங்கள் அந்தந்த பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வ-9)

# தாமதமடைந்த நிலையில் வீதிகளின் புனரமைப்புப் பணிகள்

வலி.தென்மேற்கு, பெப்.12

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வேலிகளை வெட்டி வீதிகளை அகலிப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்காததால் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் பல கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதிகளின் புனரமைப்புப் பணிகளில் தடங்கலும், தாமதமும் ஏற்பட்டுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் சுமார் 6 கோடி ரூபா செலவில் கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட 5 வீதிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

குறித்த திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வீதிகளின் அகலம் 16 அடிகளாக இருக்க வேண்டும் என்பதால் பெரும்பாலான மக்கள் விதிமுறைகளுக்கு ஆதரவு வழங்கி வேலிகளை வெட்டி, சுற்று மதில்களை இடித்து ஒத்துழைப்பு வழங்கிவரும் அதே நேரம் ஒரு சிலர் மட்டும் அழுங்குப்பிடி போல் வேலிகளைப் பின்தள்ள மறுக்கிறார்கள்.

சுதுமலை வடக்கிலுள்ள மாவடி எச்சாட்டி வைரவர் கோயிலுக்கு அருகில் வசிக்கும் சிலர் வேலிகளை வெட்டி அகல மாக்க மறுத்துள்ளதால் புனரமைப்பு வேலைகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இதேபோல்மானிப்பாய் ஆனந்தா வீதியின் புனரமைப்புப் பணிகள் மக்கள் ஒத்துழைப்பு வழங்கியதைத் தொடர்ந்து துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்த விடயம் குறித்து சம் பந்தப்பட்டவர்களுடன் பிரதேச சபை உறுப்பினர்களும் பொது அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்துரையாடிய போதும் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதனால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகின்றது. (வ-115)


# யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

அருள் ஒளி தர்சன மாலையும் மாசிமக சிறப்புப் பூஜையும்



இடம் : திவ்வியஜீவன சங்க மண்டபம்
சட்டநாதர் கோயிலடி நல்லூர்.
காலம் : 15.02.2014.
சனிக்கிழமை பகல் 11.00 மணி



வரமருளிக் காத்தருள இராஜேஸ்வரி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் மாசிமக சிறப்புப் பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும் பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுயும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜை இடம்பெறுகின்றது.

(44614) யாழ் தொடர்புகளுக்கு 077 6993861, 0779825004 ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192

## தவறிவிட்டது

அருள்நாதன் அனிஸ்ரன் என்பவருடைய தே.அ.அட்டை (932523787 V) மாகியப்பிட்டிக்கும் தொட்டிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:077 057 4959 (44605) (3.6.4)

## கடை வாடகைக்கு

திருநெல்வேலிக்கு மிக அண்மையிலுள்ள 2406 Sq.Ft. கொண்ட நான்கு கடைத்தொகுதி வாடகைக்குண்டு. (நிதி நிறுவனங்கள், வங்கிகளுக்குகந்தது. (2014 ஆனி மாதத்திற்குப் பின் வாடகைக்கு விடப்படும்.)

தொடர்பு:077 369 0333 (44394)(4.6.3)

## வீடு, கடை வாடகைக்கு

கச்சேரி, நல்லூர் வீதியில் சென் பெனடிக்ற் பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட வீடுவாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. அதே இடத்தில் கடையும் வாடகைக்குண்டு.

தொடர்பு:077 470 5540 (44610) (3.6.4)

## மணமக்கள் தேவை

- 80 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 23¼ பாவமுடையBSc, MSc, Phd Study Research Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 27 பாவமுடைய வங்கியில் பணிபுரியும் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு விவாகரத்துப் பெற்ற மணமகன் தேவை.
- 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 15¾ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற லண்டனில் சட்டத்தரணியாக பணிபுரியும் மணமகளுக்கு லண்டனில் டாக்டர், எக்கவுண்டன் தேவை.

கமலக்கண்ணன் திருமணசேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்
077 607 0862 (44608) (3.6.4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## அட்டவணைப்படுத்தப்படாத பதவியணி
## வெற்றிடங்களை நிரப்புதல் - 2014.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 01.01.2013 ஆம் திகதி முதல் அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமைவாகவும், உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் NP/05/01/GE6/UNS/RQ ஆம் இலக்க 24.06.2013 ஆம் திகதிய கடிதத்திற்கமைவாகவும், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் NP/14/01/ET/ET5/Ser.Min/Gen/2013 ஆம் இலக்க 20.01.2014 ஆம் திகதிய கடிதத்திற்கமைவாகவும் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல. | பதவிப் பெயர் | தரம் |
|---|---|---|
| 01 | சந்தை மேற்பார்வையாளர் | III |
| 02 | சாரதி | III |
| 03 | காரியாலய காரிய சகாயர் | III |
| 04 | வேலை / வெளிக்களத் தொழிலாளி. | III |
| 05 | சுகாதாரத் தொழிலாளி | III |
| 06 | நூலக பரிசாரகர் | III |

**சேவை நிபந்தனைகள்:**

01. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதும் ஆகும்.
02. ஊழியர் விதவைகள் / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று (03) வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மூலம் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று (28.02.2014) 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை:**

01. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித்தகைமை, மேலதிக தகைமை தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.
02. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் அமைய, தற்காலிக ஒப்பந்த, பயிலுநர், தன்னார்வ சேவை செய்யும் ஊழியர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

01. சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் ரூபா 50 இனைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இந்நகராட்சி மன்றத்தில் கடமை புரிபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
02. விண்ணப்பப் படிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனியாக விண்ணப்பித்தல் வேண்டும்.
06. ஆள்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்குப் பின்னராகவோ அல்லது நியமனத்தின் போதோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
07. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவு திகதி 28.02.2014 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக **"செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**பதவி இல. 01**

**கல்வித் தகைமைகள்:**
கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் சித்தி இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
MN1- 2006 A - Rs. 13120-10x145-11x170-10x240-10x320-22040

**பதவி இல. 02**

**கல்வித் தகைமைகள்:**

01. கௌரவ ஆளுநரினால் அனுமதியளிக்கப்பட்டபடி தரம் 08 கல்வித் தகைமையாகக் கொள்ளப்படும்.
02. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை / தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்குக் குறையாத பாரவண்டி செலுத்தக் கூடிய வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தை (Class of Vehicle C C1) விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று வருடங்களிற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
03. மோட்டார் வாகன சாரதியாக மூன்று வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
05. விண்ணப்பதாரி இரவு பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன், சிறந்த கண் பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
06. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
PL3- 2006 A - Rs. 12470-10x130-10x145-10x160-12x170-18860

**பதவி இல. 03, 06**

**கல்வித் தகைமைகள்:**
கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் சித்தி இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
PL1- 2006 A - Rs. 11730-10x120-10x130-10x145-12x160-17600

**பதவி இல. 04, 05**

**கல்வித் தகைமைகள்:**
கௌரவ ஆளுநரினால் அனுமதியளிக்கப்பட்டபடி தரம் 08 கல்வித் தகைமையாகக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
PL1- 2006 A - Rs. 11730-10x120-10x130-10x145-12x160-17600

11.02.2014

கா. சண்முகதாசன்
செயலாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(C/7644X10.6)

# 'நாங்கள் மகிழ்ச்சியாக இல்லை'

*பேரறிவாளன், சாந்தன், முருகன் வாக்குமூலம்*

டில்லி, பெப்.12

நாங்கள் சிறையில் மகிழ்ச்சியாக இல்லை என்று தெரிவித்துள்ளனர் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகியோர்.

உயர்நீதிமன்றத்துக்கு வழங்கியுள்ள எழுத்துமூல வாக்கு மூலத்திலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

"சிறையில் நாங்கள் மகிழ்ச்சியாக இருந்ததாக மத்திய அரசு கூறுவதை ஏற்கக் கூடாது என்றும், தூக்குத் தண்டனை பெற்றவர்களின் மனநிலை பற்றி அனைவருக்கும் தெரியும். மன அழுத்தத்துக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகத் தான் கல்வி, இசை கற்றோம்" என்றும் அவர்கள் தமது வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு 2000 ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதையடுத்து அவர்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட கருணை மனுவை குறித்த பரிசீலனை கடந்த 2011ஆம் ஆண்டு இந்திய ஜனாதிபதி நிராகரித்தார்.

கருணை மனு நீண்டகாலம் நிலுவையில் வைக்கப்பட்டிருந்த காரணத்தால், அவர்களின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில், மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அது தொடர்பான வழக்கில், கருணை மனு காலதாமதத்தால் மூவரும் மன அழுத் தத்தில் இருக்கவில்லை என்றும் சிறையில் மூவரும் இயல்பான மனநிலையில் இருந்ததாகவும், மூன்று பேரும் சித்திரவதைக்கோ, மனவேதனைக்கோ ஆளாக வில்லை என்றும் அரச தரப்பில் வாதிடப்பட்டது.

இந்தநிலையிலேயே பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் எழுத்து பூர்வமான வாக்குமூலம் உயர் நீதி மன்றத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய் யப்பட்டது. (வ)



மும்பை நகரில் மோனோ ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மும்பையில் மட்டுமல்ல இந்தியாவிலேயே இதுதான் முதலாவது மோனோ ரயில். அதனால் அதில் பயணிப்பதற்கு மக்கள் முண்டியடிக்கின்றனர். விரையும் மோனோ ரயிலைப் பார்ப்பதற்காக வீதிகள் தோறும் மக்கள் கூடியிருக்கின்றனர். எனினும் இந்த உற்சாகம், வரவேற்பு எல்லாம் சில நாள்களுக்குத்தான் மக்களிடையே இருக்கும் என்கின்றார்கள் இந்திய ரயில்வேத்துறை அதிகாரிகள்.

# தெலுங்கானா எதிர்ப்பாளர் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

*கேள்வி எழுப்புகின்றது பா.ஜ.க.*

புதுடில்லி, பெப்.12

தெலுங்கானா மாநிலம் அமைக்கும் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள் சந்தேகம்அளிக்கும்வகையில்இருக்கின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளது பாரதிய ஜனதாக் கட்சி.

தெலுங்கானா சட்டத்திருத்தத்துக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி நேற்றுமுன்தினம் ஒப்புதல் அளித்ததை அடுத்து அதனை ஓரிரு நாளில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய மத்திய அரசு முனைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இது பற்றி ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த பாரதிய ஜனதா செய்தி தொடர்பாளர் பிரகாஷ் ஜவடேகர்,

"தெலுங்கானா விவகாரத்தில் கட்சியின் நிலைப்பாடு ஏற்கனவே தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. இந்தப் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியின் செயற்பாடு தான் சந்தேகம் அளிக்கும் விதமாகஉள்ளது. தெலுங்கானாவை எதிர்க்கும் ஆந்திர முதலமைச்சர் கிரண் குமார் மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர்கள் மீது கட்சி ரீதியிலான நடவ டிக்கை எடுக்காதது ஏன்?" என்றுகேள்வி எழுப்பியுள்ளார். (ற)

# காங்கிரஸ் கட்சி எம்.பிக்கள் தற்காலிகமாக நீக்கம்

புதுடில்லி, பெப்.12

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் அந்தக் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீமாந்திரா பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

தனித் தெலுங்கானாவுக்கு எதிராக குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், காங்கிரஸ் தலைமைப்பீடம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ற)

# கடற்படையினர் தொடர்பான வழக்கை சரியாகக் கையாளவில்லை இந்தியா

*குற்றஞ்சாட்டுகின்றது இத்தாலி*

புதுடில்லி,பெப்.12

இத்தாலிகடற்படையினர்மீதான வழக்கை இந்தியா சரிவரக் கையாளத் தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் இந்தியா வந்துள்ள இத்தாலி பாதுகாப்பு துறை அமைச்சர்.

இந்திய மீனவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இத்தகைய சூழலில், நேற்றுமுன்தினம் புதுடில்லி வந்த இத்தாலி பாதுகாப்பு அமைச்சர் மரியோ மவ்ரோ,

"சம்பவம் நிகழ்ந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்ட போதிலும், வழக்கு சரியான திசையில் செல்லவில்லை. இது இரண்டு ஜனநாயக நாடுகளின் உறவு சம்பந்தப் பட்ட விடயமாகும்" எனக் குறிப்பிட்டார்.

முன்னதாக இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கின் இறுதிக்கட்ட விசாரணையை, உயர் நீதிமன்றம் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. இது தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையின் போது இரு தரப்பு வழக்கறிஞர்களும் தங்களது வாதங்களை எடுத்துரைத்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலச்சரிவில் சிக்கி 60 பேர் சாவு

## ஆபிரிக்க நாடான புருண்டியில் பரிதாபம்

புஜீம்புரா, பெப்.12
மத்திய ஆபிரிக்க நாடான புருண்டியில் நிலச்சரிவில் சிக்கி 60 பேர் உயிரிழந்துள்ளனர்.
புருண்டியின் தலைநகர் புஜீம்புராவில் கடந்த சில நாள்களாகப் பலத்த மழை பெய்து வருகின்றது. அதையடுத்து அங்கு கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் புஜீம்புராவின் புறநகர் பகுதிகளில் கடும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.
நிலச்சரிவால் ஏராளமான வீடுகள் மண்ணுக்குள் புதைந்து போயுள்ளன. இதுவரை 60 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் கூறப்படுகின்றது.
நிலச்சரிவு மற்றும் வெள்ளம் என்பவற்றால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் பலரின் நிலையும் கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது. (ற)



முழுவீச்சில் நடைபெறும் மீட்புப் பணிகள்

## நேபாளத்தின் பிரதமராக கொய்ராலா பதவியேற்பு

காட்மண்ட், பெப்.12
நேபாளத்தின் புதிய பிரதமராக நேபாள காங்கிரஸ் கட்சி தலைவர் சுஷில் கொய்ராலா தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதன் மூலம் கடந்த இரண்டு மாதங்களாக நேபாளத்தில் நிலவி வந்த அரசியல் குழப்பம் முடிவுக்கு வந்துள்ளது.
கடந்த நவம்பர் மாதம் நேபாளத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் ஆட்சி அமைப்பதில் இழுபறி நிலவி வந்தது. இந்த நிலையில் தற்போது நேபாள காங்கிரஸ் கட்சிக்கும், யுஎம்எல் கம்யூனிச கட்சிக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் மொத்தம் உள்ள 601 உறுப்பினர்களில் 405 பேர் சுஷில் கொய்ராலாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். பிரதமராக தேர்வு செய்யப்பட்ட உடனே கொய்ராலாவுக்கு பதவி பிரமாணம் செய்யப்பட்டது.
பிரதமராக பதவியேற்ற சுஷில் கொய்ராலா கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கும், அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான புதிய அரசியல் சாசனைத்தை உருவாக்குவதற்கும் எனது கட்சி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## காதலில் விழுந்தார் ஒபாமா?

நியூயோர்க், பெப்.12
அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமாவும், பிரபல பொப் பாடகி பியாயோன்சும் காதலிக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.
அண்மையில் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஒலாந்துக்கும், நடிகை ஜூலியட் கேயட்டுக்கும் இடையேயான ரகசிய உறவுகள் அம்பலமாகின. இந்த நிலையில் பிரான்ஸ் புகைப்படப் பிடிப்பாளர் ஒருவர் வெளியிட்டுள்ள புகைப்படங்களை வைத்து பிரெஞ்ச் ஊடகங்கள் ஒபாமாவுக்கும் பியானஸ்க்கும் இடையே காதல் என வதந்தியை கிளப்பி உள்ளன. அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றும் அதே போன்றதொரு செய்தியை வெளியிட்டுள்ளது.
ஒபாமாவுக்கும், பியாயோன்சுக்கும் இடையே 20 வருட வயது வித்தியாசம் உள்ளது. ஒபாமாவும் அவரது மனைவி மிக்ஷேல் ஒபாமாவும் தங்களது 21ஆவது திருமண நாளை அண்மையில் வெகு சிறப்பாக கொண்டாடினர். இந்த விழாவில் பியாயோன்சும் கலந்து கொண்டார். (ற)

## லிட்டில் இந்தியா கலவரம்; இந்தியருக்கு சிறை

லிட்டில் இந்தியா, பெப்.12
சிங்கப்பூர் லிட்டில் இந்தியா பகுதியில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாக இந்தியா, தமிழகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு 15 வாரங்கள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
கலவரம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் கட்டுமான தொழிலாளியான சின்னப்ப விஜயரகுநாத பூபதி தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.
முன்னதாக தமிழகத்தைச் சேர்ந்த பூபதிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் சட்ட வல்லுநர்களின் கலந்தாய்வுக்குப் பிறகு அவரது தண்டனை குறைக்கப்பட்டுள்ளது.
சிங்கப்பூரில் கடந்த டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் இந்தியர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, அங்கு கலவரம் ஏற்பட்டது. அந்த கலவரம் தொடர்பாக 25 இந்தியர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (ற)



சீனாவின் சென்யாங் நகரில் நடைபெற்ற பாரம்பரிய திருவிழா முற்றிலுமாக லாந்தர் விளக்குகளினால் பிரகாசித்தது. வீடுகளில் தயாரிக்கப்பட்ட சுமார் 20000 லாந்தர் விளக்குகளால் நகரமே ஒளியூட்டப்பட்டது. 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த லாந்தர் விளக்கு விழாவில், இந்த ஆண்டு சீனாவில் குதிரை ஆண்டு என்பதால் குதிரை வடிவிலான விளக்குகள் அதிகம் இடம்பெற்றிருந்தன. (ற)

## தற்கொலை தாக்குதல்: 4 பேர் சாவு

இஸ்லாமாபாத், பெப்.12
பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் நடத்தப்பட்ட தற் கொலைத் தாக்குதலில் நான்கு பெண்கள் உயிரிழந்துள்ளனர். மூன்று பேர் படுகாயமடைந்தனர்.
சந்தேகப்படும்படியான நபர்கள் குறித்து தகவல் அறிந்த பொலிஸார் அந்தப் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டபோது, தற்கொலைப்படையை சேர்ந்த ஒருவர் வெடிகுண்டை வெடிக்கச் செய்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
உடனடியாக அந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பொலிஸார், இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய இருவரைக் கைது செய்துள்ளனர். (ற)

## பிரிட்டனில் கடும் மழை; தேம்ஸ் நதியில் வெள்ளம்

லண்டன், பெப்.12
பிரிட்டனில் பெய்துவரும் கனமழையால் தேம்ஸ் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து நதியின் கரையோரம் வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
கனமழை காரணமாக நீரின் வேகம் அதிகரித்து வருவதை அடுத்து தேம்ஸ் நதியின் சில கரைகள் உடைந்து விட்டன. அதனால் லண்டன் அருகேயுள்ள பெர்கூஷர், சுர்கி ஆகிய நகரங்களுக்குள் வெள்ளம் புகுந்து அவை மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் தற்போது 2 அடி உயரத்துக்கும் மேலாக தண்ணீர் தேங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.
அதேவேளை வெள்ளம் பாதித்த பகுதிகளை அந்நாட்டுப் பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் துணைப் பிரதமர் நிக்கிளக் ஆகியோர் பார்வையிட்டுள்ளதுடன் நிவாரண பணிகளையும் முடுக்கி விட்டுள்ளனர்.
1980ஆம் ஆண்டு மற்றும் 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதுதான் தேம்ஸ் நதியில் [illegible] (ற)

## பாக். முன்னாள் ஜனாதிபதி முஷாரப் மீதான தேசத்துரோக வழக்கு மீண்டும் ஆரம்பம்

இஸ்லாமாபாத், பெப்.12
பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மீதான தேசத் துரோகக் குற்றச்சாட்டு வழக்கு தொடர்பான விசாரணை சிறப்பு நீதிமன்றத்தில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.
விசாரணையின்போது முஷாரபின் உடல் நலம் தொடர்பான மருத்துவ அறிக்கையை அவரது வழக்கறிஞர் இலியாஸ் சித்திக் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததுடன், முஷாரபின் உடல் நலம்முழுமையாககுணமடையவில்லை என்றும் அவர் தெரி[illegible] விசா[illegible] நீதிமன்ற நீதிபதி. முஷாரப் இம்முறை மட்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் இருந்ததற்கு அனுமதியளிப்பதாக தெரிவித்து வழக்கின் விசாரணையை இம் மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். அத்துடன் முஷாரப் இம்மாதம் 24 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும். அவ்வாறு அவர் முன்னிலையா காவிட்டால் பிணை இல்லாத பிடியாணை பிறப்பிக்கப்படும் என்றும் உத்தரவிட்டார்.
முஷாரப் ஆட்சியிலிருந்தபோது 2007ஆம் ஆண்டு அவசரகால நிலையை நாட்டில் பிரகடனப்படுத்தினார். அது அரசமைப்புச் சட்டப்படி தவறானது என்று குற்றம் சாட்டப்பட்டு, அவர் மீது தேசத்துரோக வழக்கு தொடரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றபோது முஷாரப் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.
இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் 2ஆம் திகதி இதய நோய் பாதிப்பு காரணமாக ராவல்பிண்டியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We would like to invite you all to

RG Traders

(Authorize Dealer For Abans Auto (Pvt) Ltd.)



Hero

RG

Showroom Opening Ceremony

On 12th February 2014

Between:- 9.30 am & 10.30 am



At :- No-164 Pointpedro road, Nelliyady

(One Of The Bigger Two Wheeler Showroom In North)

E.Mail:- rgtraders.jaffna@gmail.com T.P:- 021-226-2585

(44612)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.12

தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய சமூகவிஞ்ஞான ஆசிரியஆலோசகர் சீ.இராஜவரோதயம், சிறப்பு விருந்தினராக தொல்புரம் மடத்தடி பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி ஆலய பரிபாலனசபைத் தலைவர் சி.இராமலிங்கப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

◆ ◆ ◆

சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.தவநாயகம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக வணிக கற்கைகள் பீட முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.றமேஸ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ம.சத்தியகுமார், ஈ.பி.டி.பி.மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

◆ ◆ ◆

அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் மு.இராசவரோதயன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகனும், கௌரவ விருந்தினராக ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சு.செல்வரத்தினமும் கலந்துகொள்வர். (வ-135)

◆ ◆ ◆

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமியும் சிறப்பு விருந்தின ராக திரு நெல்வேலி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் எ.சத்தியமூர்த்தியும் கலந்து கொள்வர். இந்த நிகழ்லவில் கலாபூசணம் விருது பெற்ற பாடசாலையின் பழைய மாணவன் எம்.மாசிலாமணி பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்ப டவுள்ளார். (வ-14)

◆ ◆ ◆

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிக்னல் மைதானத்தில் நடைபெறும். நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி செல்வி ஏ.எஸ்.மரியாம்பிள்ளை கலந்து கொள்வார். (ஓ)

# வகுப்பறைத் தொகுதி திறப்பு இன்று

தென்மராட்சி, பெப்.12

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் 'ரீ.எஸ்.ஈ.பி' திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் வே.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொள்வர்.

2000 ஆம் ஆண்டு போர் வேளையில் வித்தியாலய வளாகத்தில் முற்றாகச் சேதமடைந்த வகுப்பறைத் தொகுதியே இந்தத் திட்டத்தில் புனரமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



Welcome With Pleasure

நல்லூரில்......

கோலாகல ஆரம்பம்

12ஆம் ஆண்டில் கால் பதிக்கும்

அன்னை நாகா பூட் சிற்றி

இன் கிளை நிறுவனம் இப்போது நல்லூரில்...

ANNAI NAGAA FOOD city

Do Smart Shopping

1000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் 1kg உருளைக்கிழங்கு இலவசம்

2000/=இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் 1kg சீனி இலவசம்

3000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் 1kg பாஸ்மதி அரிசி இலவசம்

Welcome With Pleasure

இன்று (12.02.2014) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு
இல.341, 343, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும்
முகவரியில் வாடிக்கையாளர்களின் நலன் கருதி
புதிய கிளை ஒன்றை ஆரம்பித்து வைக்கின்றோம்.
இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

\- உரிமையாளர்.

(C/12017)(2.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



புற்கள் வளர்ந்திருக்கும் மூர் வீதிப் பகுதி

# நுளம்புப் பெருக்க அபாயத்தில் மன்னார் நகர மூர் வீதிப் பகுதி

மன்னார் மூர்வீதியில் அமைந்துள்ள காணிகளில் செடி, கொடிகள் வளர்ந்து பற்றை போல் காணப் படுவதால் நுளம்புகள் பெருகுவதாக குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பிரதேச செயலகத்திலிருந்து அல் அஸ்கார் பாடசாலைக்குச் செல்லும் வீதியில், மன்னார் பிரதேச செயலாளரின் விடுதிக்கும் மன்னார் கமநல கேந்திர நிலையத்துக்கும் குறுக்காகச் செல்லும் பாதையில் குறித்த பகுதி அமைந்துள்ளது.

அந்த இடம் பற்றை வளர்ந்து யாரும்கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது. இதேவேளை குறித்த பகுதியில் கழிவு நீர் தேங்கியுள்ளது. இந்த நிலையை கருத்திற்கொண்டு அந்தப் பகுதியில் ஏற்படக்கூடிய சுகாதாரச் சீர்கேடுகளை உரிய முறையில்நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ)

# ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும்

## அதிகாரி கூறியதாக பாடசாலை அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, பெப்.11

பேராறு தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதாகக் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளதாக அந்தப் பாடசாலையின் அதிபர் திருமதி செ.சிவநேசன்.

இதுகுறித்துமேலும்தெரிவிக்கையில்: இந்தப் பாடசாலை யின் வளர்ச்சி படிப்படியாக அதிகரித்து வருகின்றது. தற்போது 50 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மூன்று ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இன்னமும் இரண்டு ஆசிரியர்கள் தேவை. அதனை நிவர்த்தி செய்து தருவதாக கோட்டக் கல்வி அதிகாரி கூறிச் சென்றுள்ளமை ஆறுதல் தருகின்றது.

பாடசாலையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டிக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பாடசாலை சிறிய ஓலைக் கொட்டிலில் ஆரம்பித்து தகரக் கொட்டகையாக மாறித் தற் போது புதிய கட்டட வசதிகளுடன் இயங்கி வருகின்றது.

ஆசிரியர்களுக்கான விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரதும் ஒத்துழைப்புத் தேவையாகவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (க-500)

# கைதடி தென் கிழக்குப் பகுதிக்கு குழாய் நீர் விநியோகிக்க ஏற்பாடு



கைதடி, பெப்.12

கைதடிப் பிரதேசத்தில் கைதடி தென்கிழக்கு, உவரி, வலந்தனை ஆகிய பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகத்துக்கான குழாய்கள் புதைக்கும் ஏற்பாடுகளை நீர் வழங்கல் சபை கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. தற்போது கோடை காலம் ஆரம்பித்துள்ளதால் குறித்த பிரதேசங்களில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவதுடன் குறித்த பகுதிக் கிணறுகளில் உவர் நீரே உள்ளதாலும் இங்கு விரைவான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை நீர் வழங்கல் சபையின் அதிகாரிகளும் தொழிலாளர்களும் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை கைதடியிலுள்ள ஏனைய பிரதேச மக்களும் இந்தக் குழாய் நீர் விநியோகத்தை பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவ தாகவும் அறிய முடிகின்றது. (வ-288)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கை இழப்பீட்டுக்கு காப்புறுதி விண்ணப்பம்

## அதிகாரிகள் வயலுக்குச் சென்று மதிப்பீடு

அச்சுவேலி, பெப்.12

காலபோக நெற் பயிர்ச் செய்கை சேதத்துக்கான காப்புறுதி இழப்பீடு பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் கமநலசேவைநிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நெற்பயிர் சேதமடைந்த விவசாயிகள் காப்புறுதி இழப்பீட்டைப் பெறுவதற்குப் படிவங்களைப் பூர்த்தி செய்து காப்புறுதிக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டையும் இணைத்து கமநலசேவை நிலையங்களுக்கு பொறுப்பான பெரும்பாக உத்தியோகத்தர்களிடம்கையளிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச் செய்கை சேதமடைந்திருந்த நிலையில் வருமான இழப்புக்கு உள்ளாகிய விவசாயிகள் இழப்பீடு பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

நெற் பயிர்ச் செய்கை காப்புறுதிக்கு மானிய உர விநியோகத்துடன் ஒரு கிலோவுக்கு மூன்று ரூபா வீதம் அறவீடு செய்யப்பட்டது. இழப்பீடு பெறுவதற்கான முக்கிய ஆவணம் காப்புறுதிக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகும். பாதிப்புக்கு உளளாகிய விவசாயிகள் தமது விண்ணப்பப் படிவங்களில் நான்கைப் பூரணப் படுத்தி விவசாய சம்மேளனத்தின் பரிந்துரையுடன் உடனடியாக பெரும்பாக உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

காப்புறுதி இழப்பீட்டை மதிப்பீடு செய்வதற்கான அதிகாரிகள் குழு வயலுக்குச் சென்று மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளது. எனவே வயல் நிலங்கள் மாற்றத்துக்கோ மறு பயிர்ச் செய்கைக்கோ உள்ளாக்கப்படாமல் இருப்பது அவசியம் என்று கூறப்படுகின்றது.

நெற்பயிர் சேத மதிப்பீடு பயிர்முளை நிலையில் ஏற்பட்ட சேதம், வளர்ச்சிப் பருவ நிலையில் ஏற்பட்ட சேதம், பயிர் அறுவடை நிலையில் ஏற்பட்ட சேதம் என்ற வகைப்பாட்டில் மதிப்பீடு செய்யப்பட்டு இழப்பீடு மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரை செய்யப்படவுள்ளது. (வ-11)




வட இலங்கை சங்கீத சபையின் ஏற்பாட்டில் சற்குரு ஸ்ரீ தியாகராஜாசுவாமிகளின் 167 ஆவது ஆராதனை விழா மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் விசேடமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்களின் பஞ்சரத்தின கீர்த்தனாஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது. (வ-86)

# இந்தியாவில் ஒரே மேடையில் இலங்கையின் இரு பிரபல பெண்கள்



இலங்கை அரசியலில் புகழ்பெற்ற இரு குடும்பங்களான பண்டார நாயக்கா குடும்பம் மற்றும் ராஜபக்ஷ குடும்பங்களின் பிரபலமான இரு பெண் பாத்திரங்களை கடந்த 17 ஆம் திகதி இந்தியாவில் ஒரே மேடையில் காணமுடிந்திருந்தது. ஆத்மிகவாதியான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரின் வாழும் கலைப் பயிற்சி அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சர்வதேச மகளிர் மாநாட்டு மேடையிலேயே இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியான திருமதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கவும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் துணைவியான முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவும் ஒன்றாகத் தோன்றியுள்ளனர்.

உலகப் புகழ்பெற்ற போபஸ் சஞ்சிகையால் உலகப் புகழ்பெற்ற பிரமுகர்கள் வரிசையில் ஐந்தாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மகான் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் அமைப்பானது 140 நாடுகளில் செயற்படுகிறது.

இந்த அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த குறித்த மாநாட்டுக்கு இலங்கையின் இரு பிரபல பாத்திரங்களுக்கு மேலதிகமாக, இந்தியாவின் உத்தரப் பிரதேச காங்கிரஸ் குழுத் தலைவியான ரீட்டா ஜோஷி, இஸ்ரேல் நாடாளுமன்ற உறுப்பினரான அலீஸா லெவீயா, ஆப்கனிஸ்தானின் மகளிர் விவகார அமைச்சர் திருமதி புசுன் பானு கசன்ஹார் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பிரபல பெண் பாத்திரங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (வ-22)

# நெல்லைக் கொள்வனவு செய்ய சங்கங்கள் முன்வரவேண்டும்

## முல்லைத்தீவு விவசாயிகள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, பெப்.12

தம்மால் அறுவடை செய்யப்படும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முல்லைத்தீவு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய அறுவடை ஆரம்பமாகியுள்ளது. செலவுக்கேற்ற வகையில் வரவு இல்லாது விட்டாலும் அதனை அறுவடை செய்ய வேண்டிய கட்டாய நிலையில் விவசாயிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நெற்கொள்வனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெல் கொள்வனவு செய்யப்படும் என ஒவ்வொரு போகத்திலும் அறிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும், அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதனால் வேறு வழியின்றி தனியாருக்குக் குறைந்த விலையில் நெல்லை விற்று நட்டமடைய வேண்டிய நிலை தமக்கு ஏற்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளின் அறுவடை செய்யப்பட்ட நெல்லை நல்ல விலையில் கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

CF சென்ட்ரல் பினான்சின்
மாபெரும்
வாகன சந்தை
பெப்ரவரி 13ஆம் திகதி முதல்
15ஆம் திகதி வரை
காலை 9.00 மணி முதல்
மாலை 7.30 வரை
கிளிநொச்சி
கிளிநொச்சி
மத்திய கல்லூரி மைதானம்
A9 பாதை, கிளிநொச்சி.



வருகை தருபவர்கள் அனைவருக்கும்
குலுக்கல் சீட்டிழுப்பின் மூலம்
தினமும் DVD பிளேயர்
ஒன்றை வெல்லும் வாய்ப்பு
அனுமதி இலவசம்
பதிவு செய்யப்பட்ட வாகனங்கள்
குறைந்த விலையில் விற்பனை
செய்யப்படும்
உங்கள் வசதிக்கேற்ற குறைந்த அடிப்படைக் கட்டணம்
•குறைந்த பட்ச மாதாந்த தவணையில் கொடுப்பனவு வசதி.
•உங்கள் வாகனங்களையும் இந்தச் சந்தையின் மூலம் விற்பனை செய்ய முடியும்.
CF சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
கிளிநொச்சி 475/23, A9 பாதை, கிளிநொச்சி.
தொ.பேசி 021 2 2280133/34
வசந்தகுமார் - 0770 210 065, குணாளன் - 0773 545 649
கஜன் - 0776 720 223

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பப்பாசிச் செய்கை போன்று மஞ்சள் பயிரிட்டும் வருமானம்

## *பெறவேண்டும் என்கிறார் விவசாயப் பணிப்பாளர்*

வவுனியா, பெப்.12
பப்பாசிச் செய்கையின் மூல மாக விவசாயிகள் அதிக வரு மானம் ஈட்டுவதைப் போன்று மஞ்சள் பயிர்ச் செய்கை மூல மாகவும் வருமானத்தை ஈட்ட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வவு னியா விவசாயத் திணைக் களத்தின் பிரதிப் பணிப்பாள ரான திருமதி அ.சகிலாபானு.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த வருடம் வவுனியா மாவட் டத்தில் முன்னோடித் திட்டமாக 10 ஏக்கரில் மஞ்சள் செய் கையை விவசாயிகள் மேற் கொண்டனர். இதற்கு எமது விரிவாக்கல் பிரிவின் ஆலோ சனையும் வழிகாட்டலும் வழங் கப்பட்டன. கடந்த வருடம் பெப் ரவரி மாதம் ஊடு பயிராகவும் தனியாகவும் மஞ்சள் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் அறுவடை இந்த மாத இறுதி யில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பயிர்ச்செய்கைக்குப் பல உதவிகள் வழங்கப்பட்டன.

**கடந்த வருடம் வவுனியா மாவட் டத்தில் முன்னோடித் திட்டமாக 10 ஏக்கரில் மஞ்சள் செய் கையை விவசாயிகள் மேற் கொண்டனர். இதற்கு விரிவாக்கல் பிரிவின் ஆலோ சனையும் வழிகாட்டலும் வழங் கப்பட்டது. கடந்த வருடம் பெப் ரவரி மாதம் ஊடு பயிராகவும் தனியாகவும் மஞ்சள் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் அறுவடை இந்த மாத இறுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.**

இலங்கை ஏற்றுமதி அபிவி ருத்தி அதிகாரசபை இதற்குரிய நிதியை வழங்கியது. விவசாயி களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் மஞ்சளை நடவும், பசளைகளுக்குமெனவும் நிதி யுதவி வழங்கப்பட்டது.

மஞ்சள் பயிர்ச் செய்கை ஒன்பது முதல் 12 மாதங்கள் வரை யான காலப் பகுதியைக் கொண் டது. வவுனியா மாவட்டத்துக்கு தேவையான மஞ்சளை இங் கேயே உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதுடன் வெளி மாவட்டங்களுக்கும் ஏற் றுமதி செய்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

பப்பாசிப் பயிர்ச் செய்கை மூலம் வவுனியா மாவட்டத்தில் உள்ள சில விவசாயிகள் மாதாந் தம் 30 ஆயிரம் ரூபா தொடக் கம் 50 ஆயிரம் ரூபா வரையான வருமானத்தைப் பெறுகின் றார்கள். அதனைப் போன்று மஞ்சள் பயிர்ச் செய்கை மூல மாகவும் விவசாயிகள் வரு மானம் ஈட்ட வேண்டும் என் பது எனது விருப்பாகும் என்று மேலும் தெரிவித்தார். (க-402)

## ரயில் பாதையைக் கடப்பதில் பாடசாலை மாணவர் சிரமம்

கிளிநொச்சி,பெப்.12
கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியின் ஆசிரி யர்களும் மாணவர்களும் அங்கு அமைந்துள்ள ரயில் பாதையைக் கடப்பதில் சிர மங்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மகளிர் கல்லூரி யான இந்தக் கல்லூரிக்கு பெரு மளவு மாணவிகள் கிளிநொச்சி யின் பல இடங்களிலிருந்தும் வந்து செல்கின்றனர். இவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது ரயில் பாதையைக் கடப்பதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி நகரிலிருந்து திரு முறிகண்டி வரையான பகுதி யில் 21 ரயில் கடவைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஏழு இடங்களில் மட் டுமே மக்கள் அவற்றை இலகு வாகக் கடக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. மீதி இடங்களைக் கடப் பதில் மாற்றுத் திறனாளி கள் உட் பட பொதுமக்கள் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (க-18)

## நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் நடைமுறைக்கு வருவதேயில்லை

### *மாந்தை கிழக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு*

மாந்தை, பெப்.12
கடந்த ஆண்டு அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட பல தீர்மானங்கள் இன்னமும் முன்னெடுக்கப் படாத நிலையிலேயே காணப் படுகின்றன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மாந்தை கிழக்கு பிரதேச செய லர் ரி.பிருந்தாகரன்.

நேற்றுமுன்தினம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தொடக்க வுரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்;

மின்சாரம், வீதிப் புனரமைப்பு தொடர்பாகவே மக்கள் எமக்கு முறைப்பாடுகள் தெரிவித்து வருகின்றனர்.

மாந்தை கிழக்கிலுள்ள வீதிகள் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றன. இந்தப் பிரதேசம் அபிவிருத்தி காண வேண்டுமாயின் வீதிகளின் புனரமைப்பும், மின்சார விநி யோகமும் அவசியமெனவும் அவர் தெரிவித்தார். (க-18)

## கலாசாரத்தை சீரழித்தவர்கள் விரட்டப்பட்டனர்

வவுனியா, பெப்.12
வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் கலாசாரத்துக்கு ஒவ் வாத வகையில் காணப்பட்ட பிச்சைக்காரர்கள் நேற்று பொது மக்களால் விரட்டப்பட்டனர்.

நேற்றுக் காலை வவுனியா பஸ் நிலையத்தின் வர்த்தகக் கட்டடத் தொகுதியில் அமைந் துள்ள மாடிப்படிக்கட்டுக்களின் கீழ்ப் பகுதியில் மது போதை யுடனும், கலாசாரத்துக்கு ஒவ் வாத வகையிலும் பிச்சைக் காரர்கள் காணப்பட்டனர். இவர்களைப் பொதுமக்கள் தண்ணீர் ஊற்றியும் கற்களை வீசியும் விரட்டியடித்தனர். இதன்போது விரட்டப்பட்ட பெண் கள் சிலர் பொதுமக் களைத் தகாத வார்த்தை களால் திட்டித் தீர்த்தனர். வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டடத் தொகுதியில் ஏற்படும் கலாசார ரீதியிலான பிரச்சினை களைத் தவிர்க்கும் பொருட்டு வவுனியா நகர சபையினர் கலாசாரத்தை சீரழிப்பவர்க ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கடந்த ஆண்டு அங்குள்ள சுவர்களில் எழுதியிருந்தனர். இந்த நிலை யில் நேற்றைய தினம் இத்த கையவர்கள் விரட்டப்பட்டுள் ளனர். (க-402)



துணுக்காய் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் உ.தாட்ஷாயினி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலாளர் சி.குணபாலன் அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-18)

## சீரான பஸ் சேவை நடக்காததால் முக்கொம்பன் மக்களுக்கு இடர்

### *வீதி திருத்தப்படாமையே காரணம்*

பூநகரி, பெப்.12
பூநகரியின் 10 ஆவது கட்டைக் கும் முக்கொம்பன் கிராமத்துக் கும் இடையிலான வீதியின் புனரமைப்பு வேலைகள் பூர்த் தியாகாததன் காரணமாக பஸ் சேவை ஒழுங்காக இடம்பெறா ததால் இந்தப் பகுதி மக்கள் இடர்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

இரண்டு ஒப்பந்தகாரர்கள் வீதி யின் புனரமைப்புப் பணிக ளைப் பொறுப்பேற்றிருந்த னர். இதில் ஒருவர் தமக்குரிய வேலைகளை நிறைவு செய் துள்ள நிலையில் மற்றவர் இன் னமும் பணியைப் பூர்த்திசெய்ய வில்லை.

இதனால் யாழ்ப்பாணத்தி லிருந்து அக்கராயன் வரை இடம்பெறும் அரச பஸ் சேவை அடிக்கடி நிறுத்தி வைக்கப்படு கின்றது. இதன் காரணமாக மக்கள் போக்குவரத்துச் சிரமங் களை எதிர்கொண்டு வருகின் றனர். (க-18)

## வவுனியா தனியார் பஸ் நிலைய கட்டுமான வேலைகள் ஆரம்பம்

வவுனியா,பெப்.12
வவுனியா தனியார் பஸ் நிலை யத்தின் கட்டுமான வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

வவுனியா விவசாய விதை உற்பத்திப் பண்ணைக்கு அரு கில் பஸ் நிலையத்துக்கான அடிக் கல் நடப்பட்டு வேலைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இந்த இடத்தில் பஸ் நிலையத்தை அமைக்கக்கூடாது என வரி இறுப்பாளர் சங்கம், வவுனியா மாவட்ட தனியார் பஸ் சங்கம் என்பன எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

முன்பு முன்னாள் அரச அதிபர் திட்டமிட்டதன் பிரகாரம் வவு னியா வெளிவட்ட வீதியில் பஸ் நிலையத்தை அமைக்க வேண் டுமென வவுனியா மாவட்ட தனியார் பஸ் சங்கத்தினர், வரி இறுப்பாளர் சங்கம் என்பன கோரிக்கை விடுத்து வந்துள் ளன. இந்த நிலையிலும் விவ சாய விதைப் பண்ணைக்கு அருகில் தனியார் பஸ் நிலை யத்தை அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வரு கின்றன.

வவுனியா நகரின் மத்தியில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் இந்த தனியார் பஸ் நிலையம் அமைக்கப் படு வதால் பயணிகள் வவுனியா நகருக்குச் செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் தற்போது தனியார் பஸ்கள் நிறுத்தப்படும் இடத்தி லுள்ள வீதிகளில் நெரிசல் காணப்படுவதாக சுட்டிக்காட் டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-402)

## குளங்கள் வற்றி வருவதால் நன்னீர் மீன்பிடி பெரும் பாதிப்பு

### *கிளிநொச்சி மாவட்டத்தில்*

கிளிநொச்சி, பெப்.12
மழையில்லாமை மற்றும் கடுமையான வறட்சியால் கிளி நொச்சியிலுள்ள குளங்களின் நீர்மட்டம் வேகமாகவற்றி வருவதன் காரணமாக நன்னீர் மீன்பிடியை நம்பி வசிக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக் களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இரணைமடுக்குளத்தில் மிகக் குறைந்த அளவிலேயே நீர் மட்டம் காணப்படுகின்றது. இதனால் மீன்குஞ்சுகளை விட முடியாத நிலை காணப்படு கின்றது.

இதேவேளை வவுனிக் குளத் திலும் 11 அடி நீர்தான் காணப் படுகின்றது. இந்தக் குளத்தில் 18 அடி நீர் இருந்தால் மட் டுமே மீன்குஞ்சுகளை விடமுடி யும்.

மேலும் வெப்பம் காரணமாகக் குளங்களின் நீர்மட்டம் மேலும் குறையுமானால் அவற்றில் உள்ள மீன்கள் வெப்பம் கார ணமாக அழிவடையும் அபா யமும் உள்ளதாக நன்னீர் மீன்பிடியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-18)

## சிகை அலங்கரிப்பாளர் சங்கக் கூட்டம்

வவுனியா, பெப்.12
வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைரவப்புளியங்குளத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஊழியர் களுக்கு வைபவரீதியாக சீருடை வழங்கும் நிகழ்வு இடம்பெறு வதுடன் சங்கத்தில் ஊழியர் களை இணைக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக சங்கத் தின் செயலாளர் ச.அன்ரன் இராசநாயகம் தெரிவித்தார். (க-402)

# ஆனையிறவுக் கடல் நீரேரியில் இறால் பெருக்கம் வீழ்ச்சி

## *இரணைமடுக்குளத்தின் நீர் கிடைக்காததால்*

கண்டாவளை, பெப்.12
இரணைமடுக்குளம் நிரம்பி வழிந்து மேலதிக நீர் கடலுக்குச் செல்லாததால் ஆனையிறவுக் கடல் நீரேரியில் இறால் பெருக் கம் குறைந்துள்ளதன் காரண மாக கண்டாவளையில் இறால் பிடிப்புத்தொழிலை நம்பியிருந்த குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளம் நிரம்பி வான் கதவுகள் திறக்கப்படும் போது ஆனையிறவுக்கடல் நீரேரியின் நீர்மட்டம் உயர் வடைந்து இறால் பெருக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

இதனால் கண்டாவளையில் வசிக்கும் ஏராளமான குடும்பங் கள் ஐந்து மாதங்கள் வரை இறால் பிடிப்பதில் ஈடுபட்டு தமது வாழ்வாதாரத்தைப் பேணிக் கொள்வது வழக்கமாகும்.

ஆனால் இரணைமடுக்குளம் தற்போது வறண்ட நிலையில் காணப்படுவதால் ஆனையிற வுக் கடல் நீரேரியில் இறால் பிடிப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள் ளது.

சுண்டிக்குளம் பகுதியில் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்களி னால் இயந்திரத்தின் உதவி யுடன் அணைக்கட்டு வெட் டப்பட்டு கடல் நீர் கடல் நீரே ரிக்குள் கொண்டு வரப்பட்டதன் காரணமாக இறால் பிடிப்பதில் ஓரளவு முன்னேற்றம் காணப் படுகின்ற போதிலும் முழு மையான பயன் கிடைக்க வில்லை. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவருள்மிகு நவாலியூர் களையோடை கண்ணகை அம்மன் ஆலய

# புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்புமலர் – 12.02.2014

**ஆரம்பம் 12.02.2014**

**நிறைவு 26.02.2014**

திருச்சிற்றம்பலம்

களையோடை அம்மனே கலக்கமெல்லாம் தீர்ப்பவளே
கிளையோடு வாழக் கிருபை செய்து அலையாமல் உலையாமல்
தரணியொடு வானாள அன்னே அன்னலட்சுமி
சத்தியலட்சுமி, வீரலட்சுமி, தேவலட்சுமி, மகாலட்சுமி மதுரை சக்தி அம்மனே
ஓம் பத்மினி கண்ணகா உன்கழல் போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்

அம்பிகை அடியார்களே,

சகல செல்வங்களும் பொலிந்து விளங்கும் இலங்காபுரியின் வடபால் வளம் பல மிகுந்து சீரும் சிறப்பும் தன்னகத்தே கொண்டு சிகரம் என விளங்கும் யாழ்ப்பாணத்தில் நவாலியம் பதியில் தனக்கென தனித்துவமான வழுக்கையாற்றங்கரையில் முல்லை நிலங்களும், புஸ்கரணிகளும், மருதநிலமும் மலைபோல் காட்சியளிக்கும் குன்றுகளும் கொண்ட இயற்கை அழகு நிறைந்த இந்த இடத்தில் புதுப்பொலிவுடன் வெள்ளைக்கற்களால் அமைக்கப்பட்ட கண்ணகை அம்பாளின் திருக்கோயிலில் கண்ணகை அம்பாளுக்கும் ஏனைய மூர்த்திகளான பிள்ளையார், முருகன் மற்றும் வைரவப்பெருமானுக்கும் புனருத்தாரணம் செய்யப்பட்டு தெய்வீகமணம் பொலிய அமைக்கப்பட்டு திருவருளும் குருவருளும் ஒருங்கே அமையப்பெற்ற நமது குல தெய்வமாகப் போற்றும் உள்ளூர், வெளிநாட்டு அடியவர்களின் பேருதவியினாலும் அம்பிகைக்கு நிகழும் மங்கலகரமான விஜய வருடம் தை மாதம் 30ஆம் நாள்(12.02.2014) புதன்கிழமை புனர்பூசமும் சித்தயோகமும் கூடிய காலை 9.00 மணி தொடக்கம் 10.15 மணிவரை மீனலக்கினமும் குருகால ஓரையும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் பெரும் சாந்தி எனப்போற்றும் அருள்விழாவாகிய மகாகும்பாபிஷேகம் நடைபெறத்திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அதற்கு முன்பின் நடைபெறும் கிரியைகளிலும் கலந்து அம்பாளின் அருள் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

## கிரியா கால விவரம்

**விஜயவருடம் தை மாதம் 28ஆம் நாள் (10.02.2014)திங்கட்கிழமை**

மாலை விநாயகர் வழிபாட்டைத் தொடர்ந்து பூர்வாங்கக் கிரியைகள், மூர்த்தி அனுக்ஞை, திரவியசுத்தி, திரவியபாகம்,கணபதிஹோமம், கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, நவக்கிரக ஹோமம், நூதனமூர்த்திகளுக்கான ஜலாதிவாசம், தான்யாதிவாசம்,நயனோனமீலனம், தொடர்ந்து ஆசாரியர்கள் ரச்சாபந்தனம் பிரசன்னா அபிஷேகம் பூஜை கடஸ்தாபனம் காலகர்சனம் ஷணஹோமம் அதிவாசம் கும்பம் யாகசாலைப் பிரவேசம்,யாகபூசை, அக்கினிகார்யம், ஏககுண்டவிபஜனம், தீபஸ்தாபனம், தூபிஸ்தாபனம், விபூதி பிரசாதம் வழங்கல்.

**விஜயவருடம் தைமாதம் 29ஆம் நாள் (11.02.2014) செவ்வாய்க்கிழமை**

ஆசாரியர்கள் சந்தியனுஷ்டானம், யாகபூசைகள், ஏககுண்ட பூசைகள், ஹோமங்கள விஷேச திரவியஹோமப் பூசைகள் (காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை அடியவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்) மாலை ஆசாரியர்கள் சந்தியனுஷ்டானம் புண்ணியாகவாசனம், யாகபூசை,ஏககுண்ட பூசை விம்பசுத்தி, விம்பரந்சாபந்தனம்,சகல சடந்துவன்நியாசம் பரிசாருதி யாகதீபாராதனை, வேதம் ஆசீர்வாதம், வேதபாராயண்ம், விபூதிப்பிரசாதம் வழங்கல், குருமார்களுக்கான வஸ்திரதானம், உத்தரியகானம் வழங்கல்.

**விஜயவருடம் தை மாதம் 30ஆம் நாள் (12.02.2014) புதன்கிழமை**

காலை 6.00மணிக்கு ஆசாரியர்களின் அனுஸ்டானம், புண்ணியயாகம், குருவழிபாடு யாகபூசை, பரிவாரதேவதைகளின் யாகபூசை,யாகஹோமங்கள் பூர்ணாகுதிகள், தீபாராதனைகள். பிரதான யாகஹோமங்கள் மஹாபூர்ணாகுதி அந்தர்பலி, மஹாதீபாராதனை, வேத நிருத்திய கீத வாத்திய திருமுறை உபசாரம் ஆசீர்வாதம் யாத்திராதானம், தசதர்மங்கள், கும்ப வீதியுலாவுடன் ஈழத்து தலை சிறந்த தவில் நாதஸ்வர வாத்தியங்கள் முழங்க, காலை 08.00 மணிக்கு தூபிகள் அபிஷேகம், காலை 9.00 மணிக்கும் 10.15 நிமிடமளவில் மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து திருக்கதவு திறத்தல், தசதர்சனம், மஹா அபிஷேகம், பூசை குருமார்சாபந்தனம்,விசானம், ஆசியுரைகள் குருமார் சம்பாவனை, விபூதிப் பிரசாதம் வழங்கல், தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 13 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று15ஆம் நாள் சங்காபிஷேகத்துடன் விழா இனிதே பூர்த்தியாகும்.

## கும்பாபிஷேக குருமார்களின் விவரம்

**சர்வபோதகாசிரியர்**
சிவஸ்ரீ சதா.மகாலிங்க சிவக்குருக்கள் (J.P)
(அதிபர். சைவக்குருமணிகள் குருகுலம்)
யாழ்.நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம்.

**சர்வசாதகாசிரியர்கள்**
'சங்கீத சாதகன்' சிவஸ்ரீ இ.கணேஸ்வரன் ஐயா
(குரும்பசிட்டி முத்துமாரியம்மன் தேவஸ்தானம்)
சிவஸ்ரீ ந.வர்ணதேவன் ஐயா (அச்சுவேலி)

**பிரதமகுருக்கள்**
சிவஸ்ரீ சி.மகேந்திரநாதக்குருக்கள்
(பிரதமகுரு. தம்பசிட்டி. மாயக்கை சித்திவிநாயகர் தேவஸ்தானம்)

**யாகசம்ரட்சகர்கள்**
சிவஸ்ரீ தி.விசாகரத்தினக் குருக்கள் (யாழ்ப்பாணம்)
சிவத்திரு சாந்தியோகன் (வடக்கம்பரை)

**ஆலய குரு**
சிவத்திரு கந்தையா நாகேந்திரம்
(பூசகர். அறங்காவலர்)

**ஏனைய குருமார் விவரம்**
சிவஸ்ரீ வே.சண்முகராசக்குருக்கள்(சங்கானை)
சிவஸ்ரீ இ.திருக்குமாரக்குருக்கள் (வல்வெட்டித்துறை)

| மங்களவாத்தியம் | ஆலய நிர்மாணம் | வர்ணவேலை | மரவேலைகள் | மின்வேலை | பூமாலை யாகசாலை அலங்காரம் | ஒலி,ஒளி அமைப்பு |
|---|---|---|---|---|---|---|
| நந்தன் குழுவினர் யாழ். | சிற்ப வல்லுநர் சு.மாணிக்கவாசகர் குழுவினர் அராலியூர் | நி.நிசந்தன் குழுவினர் அராலியூர். | சி.மகேந்திரன் நவாலியூர். | ஜோ.சாள்ஸ் நவாலியூர். | க.வரததாசன் மல்லாகம். | சஜீவன் சவுண்ட் நவாலியூர். |

குறிப்பு: கும்பாபிஷேக காலங்களில் ஆசாரசீலர்களாக வந்து சரியைத் தொண்டு புரிந்து பால்,தயிர்,இளநீர், பூக்கள் மாலைகள், எண்ணெய்கள், ஊதுபத்தி, கற்பூரம் போன்றவைகளைக் கொடுத்துதவி அன்னையின் அருள்கடாச்சத்தினைப் பெற்றுய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
திருப்பணிச்சபை கணக்கு இல. 8153007203, வர்த்தக வங்கி,மானிப்பாய்.

களையோடை
கண்ணகை அம்மன் ஆலயம், நவாலி.

ஆலய அறங்காவலர்களும்
புனருத்தாரண திருப்பணிச் சபையினரும்.

★★★★★★★★★★★ விளம்பர அனுசரணையாளர்கள் ★★★★★★★★★★★★★★




RAM BUILDERS
Civil Engineering Construction Work
"Sri Rangam", Navaly North, Manipay,Jaffna,Srilanka.
Ram Builders
RB. No:- 11397 :-(+94) 777111344 :-(+94) 212255876

களையோடை
கண்ணகி அம்மன் கிரசர்
கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீரிமலை - நகுலேஸ்வரம்

## அருள்மிகு ஸ்ரீநகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரசுவாமி திருக்கோயில்

# மஹோற்ஸவ சிறப்பிதழ் - 12.02.2014

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."

**சிவநேயச் செல்வர்களே!**

சரித்திரப் பிரசித்தி பெற்றதும் வேண்டுவார் வேண்டுதற்கிணங்க அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீநகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானுக்கு 25 வருடங்களாக மஹோற்ஸவம் நடைபெறாமல் இருந்தது யாவரும் அறிந்ததே. இவ்வருடம் முதல் மஹோற்ஸவப் பெருவிழா நிகழ எம்பெருமான் பெருங் கருணைகூர்ந்துள்ளார்.

நிகழும் மங்கலகரமான விஜய வருடம் மாசி மாதம் 02 ஆம் நாள் (14.02.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மேல் வரும் சுபமுகூர்த்தத்தில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. பக்தர்களின் உதவியினைத் தொடர்ந்து பதினைந்து தினங்கள் பகல் இரவு விஷேட அபிஷேக அலங்கார பூஜைகளுடன் எம்பெருமான் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

## உற்சவ கால விவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 26.02.2014 புதன்கிழமை | : | மாலை | 3.00 | மணிக்கு பிட்சாடனர் உற்ஸவம். |
| | | மாலை | 7.00 | மணிக்கு சப்பறத்திருவிழா. |
| 27.02.2014 வியாழக்கிழமை | : | காலை | 7.00 | மணியளவில் வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று |
| | | காலை | 8.00 | மணிக்கு இரதாரோஹணம் நடைபெறும். எம்பெருமான் திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். |
| | | பிற்பகல் | 3.00 | மணிக்கு பச்சை சாத்தி விஷேட பூஜைகளுடன் வசந்தமண்டபத்திற்குசென்றடைதல். |
| | | இரவு | 8.00 | மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து கிரியைகள் நடைபெறும். |
| | | நள்ளிரவு | 12.00 | மணிக்கு லிங்கோற்பவ பூஜைநடைபெறும். அதனைத் தொடர்ந்து மூர்த்திகள் கற்பூரஜோதியுடன் திருவீதியுலா வந்து பக்தர்களுக்குக் காட்சிகொடுப்பர். |
| 28.02.2014 வெள்ளிக்கிழமை | : | அதிகாலை | 6.00 | மணிக்கு கண்டகி தீர்த்தத்திற்கு எம்பெருமான் வீதியுலாவாகச் சென்று தீர்த்தோற்ஸவம் நடைபெறும். |
| | | பிற்பகல் | 3.00 | மணிக்கு சகல மங்கல வாத்தியங்களுடன் ஆலயத்திற்கு எழுந்தருளுவார். |
| | | மாலை | 7.30 | மணிக்கு துவஜா அவரோஹணம் (கொடியிறக்கம்) நடைபெறும். |

**இக்காலங்களில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் சைவ ஆசார சீலர்களாக தங்கள் வீடுகளை சுத்தமாக வைத்து சைவ அனுஸ்டானங்களைப் பின்பற்றி சைவசமய உடைகளை அணிந்து வருதல் சிறந்தது ஆகும்.**

மஹோற்சவ பிரதம குரு: **பிரம்மஸ்ரீ இராஜராஜஸ்ரீ ந.குமாரசாமிக்குருக்கள்**
**(ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும், நகுலேஸ்வரம், கீரிமலை)**

* 13.02.2014 வியாழக்கிழமை நடைபெறும் மஹாகணபதி ஹோமத்தில் உபயகாரர்கள், பக்தர்கள் வருகைதந்து எம்பெருமானுக்குத் தேவையான பொருள்களைக் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
* இம் மஹோற்சவம் சிறப்பாக நடைபெறும் வேளையில், தாங்கள் தங்கள் கஷ்டநஷ்டங்களை எம்பெருமானிடம் வேண்டிப் பிரார்த்தித்து எம்பெருமானி அருளாசிகளைப் பெறுவீர்களாக!
* மேற்படி பூஜைக்குத் தேவையான அர்ச்சனைப் பொருள்கள், நெய்தீபம் ஆகியவற்றை ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கிணங்க 113 அடி உயரமுள்ள 9 தளம் கொண்ட இராஜகோபுரத்தின் 8 ஆம் தளம் நிர்மாணிக்கப்படுகிறது அதற்கு பெருந் தொகையான பணம் தேவைப்படுகிறது. ஆகவே பக்தர்களாகிய நீங்கள் பணமாகவோ, பொருளாகவோ தந்து இத் திருப்பணியைப் பூர்த்தியாக்கி எம்பெருமானின் கிருபாகடாட்சத்தைப் பெறுவீர்களாக.

**முக்கிய குறிப்பு:** தனிப்பட்ட முறையில் அழைப்புத் தரமுடியாத காரணத்தினால் இந்த உற்சவ காலத்தில் வழமையாக பங்குபற்றும் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் வருகை தந்து பஜனை, சமயச் சொற்பொழிவு என்பவற்றில் பங்குகொள்வதற்கு முன்கூட்டியே ஆலயத்தொலைபேசியில் (021 790 0470) தொடர்புகொள்ளவும்.

**மாசிமகம் பற்றிய அறிவித்தல்:**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மக நட்சத்திரம், 'மகா' மகமாகக் கருதப்படுவதனால் எல்லா அடியார்களும் நெய்தீபம் ஏற்றி பிரார்த்தனை செய்து அவனருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.
இந்த உற்சவத்தை ஒட்டி விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தொடர்பு: 021 790 0470

இறை பணியில் நகுலேஸ்வரானுக்கிரக வித்தியாபர் இராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள், ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும்.

சுபம்

(சி.12010) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு, கிழக்கில் காணி அபகரிப்பு; அரசின் குரல் போலித் தொனியா?

வடக்கிலோ, கிழக்கிலோ மக்களுக்குச் சொந்தமான காணிகளை பாதுகாப்பு அமைச்சு சுவீகரிக்காது.

இந்தத் தகவலை தெரிவித்தவர் வேறு எவருமல்லர். நாட்டின் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அவர்களே மிக விஸ்தாரமாக அதனை வெளிப்படுத்தி உள்ளார்.

யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில், அரச அதிபர், மேலதிக அரச அதிபர் மற்றும் முப்படை அதிகாரிகளுடனான சந்திப்பின் போது அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுச் சென்றுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் வசமிருந்த 18 ஆயிரத்து 587 ஏக்கர், கடற்படையினர் வசமிருந்த 708 ஏக்கர், விமானப் படையினரின் வசமிருந்த 716 ஏக்கர் நிலப் பரப்புக் காணிகள் அவற்றுக்குச் சொந்தமான மக்களிடம் திரும்பவும் கையளிக்கப்பட்டதாக, புள்ளி விவரங்களுடன் அமைச்சர் தகவல் வெளியிட்டார்.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சுக்கு இனிமேல் காணிகளை வழங்க வேண்டியதில்லை என்றும், இதுவரை சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு அடுத்த மாதம் பதினைந்தாம் திகதிக்கு முன்னதாக அரசினால் நட்டஈடு வழங்கப்படும்- என்றும் அமைச்சர் தகவல் தெரிவித்துச் சென்றுள்ளார்.

அடுத்த மாதம் மூன்றாம் திகதியன்று ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை அரசு மீது கொண்டுவரப்பட உள்ள பிரேரணையில், மக்களின் காணி பறிப்பு, வடக்கு-கிழக்கில் அதீத இராணுவப் பிரசன்னம் போன்ற மக்களின் உரிமைகளைப் பறிக்கும்- ஊறு செய்யும்- விவகாரங்கள் உச்சக் கட்டத்தை எட்டலாம் என்று மிக அனேகமாக எதிர்பார்க்கப்படும் நிலையில்-

தமிழ் மக்களின் காணிக் கபளீகரத்தின் காரத்தைக் குறைக்கும் அரசின் மேற்போந்த நடவடிக்கைகள் உயர்ந்து எழுந்துள்ளன என்று கொள்ளலாம்.

வடக்கு, கிழக்கில், தமிழ் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அரசினால் கையகப்படுத்தப்படுவது, போருக்குப் பிந்தியதான ஆரம்ப காலத்தில் இருந்தே பென்னம் பெரிய விவகாரமாக, ஆழ்ந்த கருத்துக்குரிய (Grave Concern) ஒன்றாக இருந்து வருவதனைச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல.

உதாரணமாக வடக்கின் வலிகாமம் பிரதேசத்தில் மட்டும், 6,381 ஏக்கர் 38 பேர்சஸ் காணி-நிலம்-அரசால் கையகப் படுத்தப்பட்டுள்ளதாக, நாடாளுமன்றில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அவ்வேளை குறிப்பிட்ட நிலப்பரப்பு கொழும்பு நகரின் மூன்றில் இரண்டு பங்குக்குச் சமனானது என்ற விவரமும் அங்கு வெளிப்படுத்தப்பட்டது.

அரசின் அந்த நடவடிக்கைக்கு எதிராக, பாதிக்கப்பட்டவர்களில் சிலர் நீதிமன்றத்துக்குச் சென்றனர். நாட்டின் சட்டத்துக்குப் புறம்பாகத் தமது காணிகளை அரசு கையகப்படுத்த முயல்வதாக ஆட்சேபித்திருந்தனர். அவர்களில் ஒருவர், முன்னைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் புதல்வரும் ஒருவர் என்பதும் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அடுத்த மாதக் கூட்டத் தொடரில்,-

இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையில், அரசின் காணி கையகப்படுத்தல் செயற்பாடும் முக்கிய இடம் பிடிக்கும் என்று கருதப்படுவதால், எதிர்பார்க்கப்படுவதால்-

மக்களுக்குச் சொந்தமான, மக்களின் (தனியார்) காணிகளை அவர்களின் சம்மதத்தோடு கொள்வனவு செய்வதான தோற்றத்தை உருவாக்கும் பொருட்டும்-

தனியார் காணி சுவீகரிப்புக்கு எதிராக, ஜெனிவா மாநாட்டுக் காலத்தில் பாதிப்புற்றோர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தாமல் மழுங்கடிக்கும் உள்நோக்குடனும்-

தற்போதைய செயற்பாடுகளும் கருத்துக்களும் வெளி வருவதாகக் கொள்ளலாம் அல்லவா?

எதற்கும் வடக்கு, கிழக்கில் நடைபெற்று வரும் சிறுபான்மை இன மக்களின் காணி அபகரிப்பு நிறுத்தப்படும் என்ற அரசின் புதிய நிலைப்பாடு, ஜெனிவா மாநாட்டுக்கு முன்னர் முற்றாக முழுமையுற வேண்டும். ஆக்கபூர்வமான அந்த பக்கம் நோக்கி இன்னும் உள்ள மூன்று வாரங்களில் அரசு உள்ளார்ந்த மனதோடு செயற்படுமா? இது விடை தெரியாத வினாவாக நெடிது உயர்ந்து நிற்கிறதே!

# இனவாதிகள் ஓயப் போவதில்லை

சேரலாதன்



'ஈழத்துக்கு எதிரான இரண்டாவது கட்டப் போரை ஆரம்பிக்க வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளார் தற்போதைய அரசில் முக்கிய அமைச் சுப் பொறுப்பொன்றை வகிக்கும் அமைச்சர் விமல் வீரவன்ச. இவரது கடந்த கால செயற்பாடுகளை அறிந்து கொண்டவர்களுக்கு இதுவொன்றும் அதிர்ச்சியைக் கொடுக்கும் விடயமாக அமைந்துவிடாது. ஏனென்றால் பெரும்பான்மை மக்களைக் கவர வேண்டும் என்பதற்காகவே தடாலடியான கருத்துக்களை அதுவும் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துகளை உதிர்ப்பதில் அவர் வல்லவர். தமது சுய இலாபத்துக்காகவே அரசுப் பக்கம் தாவிய அவருக்கு இத்தகைய கருத்துக்களை வெளியிடுவதில் தயக்கம் எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. தற்போது, விடுதலைப் புலிகளும் அதன் தலைவரான வே. பிரபாகரனும் இல்லாத நிலையில் எவருக்கு எதிராகப் போரை ஆரம்பிக்குமாறு இவர் கூறுகின்றார் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதேவேளை 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் புலிகளையும் தனி ஈழத்தையும் மையக் கருத்தாகக் கொண்டே தென்பகுதி அரசியல் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. தமிழர்களுக்கெனத் தனியானதொரு நாடு அமையுமானால் சிங்கள மக்கள் கடலில் விழுவதைத் தவிர வேறு வழியே இல்லையெனவும் அங்கு கூறப்பட்டது. சிங்கள மக்களுக் கென இந்த நாடு மட்டுமே உள்ளதால் இந்த நிலையெனவும் அதற்குக் கார ணம் கூறப்பட்டது. இதுவொரு மிகைப்படுத்தப்பட்ட கற்பனை என்றே கூற வேண்டும். பிரபாகரன் கூட தமிழ் மக்களுக்கெனத் தனியானதொரு நாடு வேண்டும் என்ற இலட்சியத்துடன் போராடினாரே ஒழிய சிங்கள மக்களை இந்த நாட்டிலிருந்து விரட்ட வேண்டுமென ஒருபோதுமே கூறியதாகத் தகவல் இல்லை. இந்த நிலையில் சிங்கள மக்களின் மன அமைதியைக் குலைக்கும் வகையில் இவ்வாறான பரப்புரைகள் இடம்பெறுகின்றமை இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தில் பெரும் பிளவுகளையே ஏற்படுத்தும்.

### அர்த்தமற்ற அறை கூவல்

இதேவேளை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிடும் போது:

நாம் தமிழ் ஈழத்தை ஒரு போதுமே கோரவில்லை. ஒன்றுபட்ட நாட்டுக்குள் பிரச்சினை எதுவுமின்றி ஒற்றுமையாக வாழவே விரும்புகின்றோம். இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையே மாகாண சபையூடாக வழங்க வேண்டும் எனத் தீர்க்கமாகக் கூறியுள்ளார். வடமாகாண முதலமைச்சரும் மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை வழங்க வேண்டும் எனக் கூறியுள்ளாரேயொழிய தனி ஈழத்தை வழங்குமாறு கேட்கவில்லை.

இந்த நிலையில் அமைச்சர் விமல் வீரவன்சவின் அறைகூவல் அர்த்தமற்ற ஒன்றாகவே கொள்ளத்தக்கது. ஒரு நாட்டின் அரசில் அங்கம் வகிக்கும் பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையில் கருத்துகளை வெளியிடும்போது எவரது மனத்தையும் புண்படுத்தாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். மேலும் இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவருக்கும் அமைச்சராக விளங்குவதை ஏனோ அவர் மறந்து விட்டார் என்பது புரியவில்லை.

### அதிகாரம் இல்லாத மாகாணசபை

இலங்கையில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் அதில் கூறப்பட்டவாறு மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் எவையும் வழங்கப்படவில்லை. கிழக்கு மாகாண சபை உட்பட ஏனைய மாகாண சபைகள் இந்த அதிகாரங்களை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுவதில்லை. ஏனென்றால் அவையாவும் அரசின் முழுக் கட்டுப்பாட்டில், ஆளும் கட்சியின் ஆளுகையின் கீழ் அமைந்துள்ளன. ஆனால் வடக்கு மாகாண சபை இவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தமிழர்களைப் பெருமளவு பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழ் இது உள்ளது. மேலும் போரினால் பாதிக்கப்பட்ட பெருமளவு மக்கள் வட மாகாணத்தில்தான் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குச் சொந்தமான காணிகள் பல்வேறு தரப்பினராலும் அபகரிக்கப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. வடக்கின் சில பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையும் காணப்படுகின்றது. அத்துடன் சட்டமும், ஒழுங்கும் சீர் குலைந்த நிலையில் காணப்படுகின்றன. ஆனால் இவற்றையெல்லாம் ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபை நிர்வாகம் வெறுமனே கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கும் அவலநிலையே தொடர்கின்றது. இதன் காரணமாகவே 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் காணப்படும் அதிகாரங்களை வழங்குமாறு வடமாகாண முதல்வர் தொடக்கம் ஏனையோர் வரை வேண்டி நிற்கின்றனர். இவர்கள் எவரும் தனி ஈழத்தை ஒருபோதுமே கோரி நிற்கவில்லை. தனிநாடுதான் தீர்வு என்றும் அடித்துக் கூறவில்லை. இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு எத்தகைய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதோ, அவற்றையே எமக்கும் தாருங்கள் என்றே இவர்கள் வேண்டி நிற்கின்றனர். ஆனால் இதையே பெரிதுபடுத்தி தனி ஈழம் கேட்பதாகக் கூறி இனவாதிகள் கொக்கரிக்கின்றனர்.

### அரசு மனம் வைத்தால் எல்லாம் நடக்கும்

இலங்கையில் வாழுகின்ற சிங்கள மக்களும், தமிழர்களும் ஒன்றிணைந்து வாழவே விரும்புகின்றார்கள். கடந்த 30 ஆண்டுகளாகப் போர் தந்த அவலங்களை அவர்கள் மறந்து விடவில்லை. போரினால் வடக்குக் கிழக்கிலுள்ள மக்கள் மட்டுமன்றி தெற்கிலுள்ள மக்களும் பாதிக்கப்பட்டனர். உயிர் என்பது அனைவருக்கும் பொதுவானது. இதில் இனம், மொழி, மதம் என்ற வேறுபாடுகளைக் காண முடியாது. இந்த நிலையில் வேறுபாடு இல்லாததொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதுடன் அமைதியானதொரு சூழலையும் ஏற்படுத்த வேண்டும். இதனை அரசும் பெரும்பான்மையின மக்களும் மனம் வைத்தாலே நிறைவேற்ற முடியும்.

> **போர் என்ற சொல்லைக் கேட்டாலே மக்கள் அஞ்சி அலறும் இந்த வேளையில் இரண்டாம் கட்டப் போரை ஆரம்பிக்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ச அறைகூவல் விடுப்பது அவரது பொறுப்பற்ற தன்மையையே வெளிக்காட்டுகின்றது.**

### ஓங்கி ஒலிக்கும் இனவாதக் குரல்கள்

போர் என்ற சொல்லைக் கேட்டாலே மக்கள் அஞ்சி அலறும் இந்த வேளையில் இரண்டாம் கட்டப் போரை ஆரம்பிக்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ச அறைகூவல் விடுப்பது அவரது பொறுப்பற்ற தன்மையையே வெளிக் காட்டுகின்றது. மக்களின் இரத் தக் கண்ணீரில் குளிர்காய்வதற்கு அவர் விரும்புகிறார் போலும். இவரைப் போன்றவர்களை இன்னமும் அமைச்சரவையில் வைத்திருப்பதானது அரசின் கையாலா காத்தனத்தையே காட்டுகின் றது. மேர்வின் சில்வா, விமல் வீரவன்ச போன்றோர் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற போதிலும் அதற்குரிய கௌரவத்தை ஒருபோதுமே பேணி நடந்து கொள்வதில்லை. ஏறுமாறான கருத்துகளைக் கூறுவதும், செயல்களில் ஈடுபடுவதும் இவர்களின் வாடிக்கை யாகவே மாறி விட்டது. ஆனால் ஆட்சித் தலைவரின் செல்லப் பிள்ளைகளாக வலம் வருகின்றனர்.

தமது இஷ்டம் போல செயற்படுகின்றனர். இனவாதக் கருத்துகளையும் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த நாட்டின் சாபக்கேடே இத்தகைய இனவாதிகள் தான். இவர்கள் இருக்கும் வரை இங்குள்ள இனங்களுக்கு இடையில் ஐக்கியம் என்பது கானல் நீராகவே தெரியும். மக்கள் என்று இவர்களின் சுயரூபத்தை அறிந்து புறமொதுக்கி விடுகின்றார்களே அன்றே இனங்கள் சகோதரத்துவமான உறவுகளைப் பேணிக் கொள்ள முடியும்.

ஆனால் இனவாதிகளின் கருத்துக்களுக்கு மக்கள் மதிப்புக் கொடுக்கும் வரை அவர்கள் ஓய்ந்துவிடப் போவதில்லை. தமது வேலைகளைக் காட்டிக் கொண்டே இருப்பார்கள். அதுவரை மக்களின் தலைவிதியிலும் மாற்றங்கள் ஏற்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தி.அபராஜிதன்

## பொருத்தமான பாடத்துறைத் தெரிவு

# நல்ல தொழிலுக்கு வழிகாட்டும்

**இலங்கையில் வருடாந்தம் சுமார் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்றபோதும் சுமார் 25,000 மாண வர்களே பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகின்றனர்.**

இலங்கையின் இலவசக் கல்வித் திட்ட முறைமையில் கல்வித்துறையின் முக்கியமான இலக்கு நாட்டினுடைய அபிவிருத்தி மேம்பாட்டுக்கு உகந்த அறிவு, திறன், மனப்பாங்கு கொண்ட மாணவ சமூகத்தை உருவாக்குதல் ஆகும். இந்த நோக்கை அடைவதற்கான முக்கிய நிலையங்களான நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலைகளும், கல்வியியற் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும், தொழில் நுட்ப நிறுவனங்களும் காணப்படுகின்றன. மேற்படிப்புக்கான அடித்தளத்தை இட்டுத் தருகின்ற விடயத்தில் பாடசாலைகள் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன.

போட்டித் தன்மை மிக்க உலகில் எமது நிலைத்திருப்பை நிலையானதாகவும் நீடித்ததாகவும் மாற்றிக் கொள்வதில் இன்று சவால் நிலவுகின்றது. உலக மயமாக்கலின் விளைவுகள், தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றம், உலகை உள்ளங்கையில் சுருக்கித் தந்திருக்கின்றது. வாழ்க்கை இலகுவாக்கப்பட்டுள்ளது. ஆனால், வாழுதல் கடினமாக்கப்பட்டிருக்கின்றது. இந்த இடர்மிகு வாழ்வை இன்பமயமானதாக்கவும் வாழ்தலின் அர்த்தத்தை உருவாக்கவும் நாம் எமது கைகளில் தத்தெடுத்துள்ள எமது சிறார்களைத் தயார்படுத்திக் கொள்வதோடு அவர்களுக்கான பொருத்தமான சாதக பாதைகளைத் திறந்து விட வேண்டியுள்ளது.

அதற்காக அரசினால் கல்வி, தொழில் வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் புதிய தொழில்நுட்பத்துறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் மாணவ சமூகத்தினரிடையே இது பற்றிப் புரிதல்களும் அக்கறை நிலையும் பற்றாக் குறையாகவே காணப்படுகின்றன.

பாரம்பரிய பழைமை பேணுகின்ற கல்விக் கோட்பாடுகளில் இருந்து விடுபடமுடியாதுள்ள ஜி.சீ.ஈ சாதாரண பரீட்சை, பின்னர் உயர்தர கற்கை என நீட்சி பெற்று அவற்றிலும் அதிகமானோர் மனனமாக்கி பரீட்சையில் பதிய வைத்து பெறுபேற்றை மாத்திரம் பெறும், வெறும் கலைத்துறை சார்ந்த நூற்கல்வியிலேயே பயணிக்கின்ற நிலை காணப்படுகின்றது. திறன் தொடர்பாகவோ அல்லது வேலை உலகுக்குப் பயனளிப்பதற்கான தகைமையைப் பெறுவதிலோ விருத்தி நிலையைக் காணமுடியாதுள்ளது.

இந்த நிலையை மேம்படுத்துவதற்காக அரசு தனது கல்விச் சீர்திருத்த சிந்தனையின் ஓர் அங்கமாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை மாணவரிடமும் பெற்றோரிடமும் விரிவுபடுத்துவதற்காக ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலகத்துக்கும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரிகள் இருவரை நியமித்து தொழில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கமைய பாடசாலைக் கல்வியை முடிவுறுத்தி வெளிச் செல்லும் மாணவர்கள் தமது கட்டிளமைப் பருவத்தில் விளை திறன்களையும் அறிவையும் விருத்தி செய்து கொள்ள உதவுதல் வேண்டும்.

எம்மவரிடையே பல்கலைக்கழகம் ஒன்றுதான் மேற்படிப்புக் கல்விக்கான மூலம் எனவும் அவற்றை அடைவதே கல்வியினதும் வாழ்வினதும் உச்சம் எனவும் நினைக்கின்ற தப்பபிப்பிராயம் இன்றும் உண்டு. இலங்கையில் வருடாந்தம் சுமார் மூன்று லட் சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு



தோற்றுகின்றபோதும் சுமார் 25,000 மாண வர்களே பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகின்றனர். ஏனையோர் வேலை உலகுக்கு பொருத்தமான தொழிற்கல்வியை தேர்ந்தெடுப்பதை விட வெளிவாரி யாக கலைப் பட்டம் ஒன்றை பெற்றுக் கொள்வதிலேயே அதிக ஆர்வத்தை வெளிப்ப டுத்துகின்றனர்.

அதேநேரம் உயர்தரக் கல்வியில் சுமார் 51 வீதமான மாணவர்கள் கலைப்பிரிவில் கற்கின்ற நிலையும், விஞ்ஞான, கணித பிரிவில் சுமார் 22 வீத மாணவரும், வர்த்தகப் பிரிவில் சுமார் 27 வீத மானோரும் கற்கின்ற சூழலே எமது உயர்தரக் கற்கையில் காணப்படுகின்றது. இந்த நிலையை 2016 ஆம் ஆண்டில் க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞான பிரிவில் கற்போரின் தொகையில் 40 வீதமாக அதிகரிக்கவும், கலைத்துறையில் கற்போரை 25 வீதமாக குறைப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றது.

இதற்காக முதற்கட்டமாக நாடளாவிய ரீதியில் 250 பாடசாலைகளில் தொழில் நுட்ப கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேர்தல் தொகுதியொன்றுக்கு ஒரு பாடசாலையிலாவது இந்தக் கற்கை நெறி அமைந்திருக்க வேண்டும் என்பது கல்வி அமைச்சின் கொள்கையாகும்.

மேற்குறித்த தொழில்நுட்ப கற்கைத் துறையின் மிகப் பிரதான சிறப்பம்சமாக பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவிடத்திலும் சர்வதேச அங்கீகாரமுள்ள தேசிய தொழிற் கல்வித் தகைமைச் சான்றிதழ் ஒன்றைப் பெற்று தகைமையுடன் வேலை உலகில் பிரவேசிக்க முடியும்.

இவை தொடர்பாக தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் அமைகின்றபோதும் பெற்றோர், மாணவர் மத்தியில் தமது பிள்ளைகள் தொழில் செய்ய வழிப்படுத்தல் என்ற தவறான எண்ணக்கரு காணப்படுகின்றது. "தொழில் வழிகாட்டல் ஆலோசனை என்பது கல்வியுலகில் பிரவேசித்து சிறந்த, உயர்ந்த, கௌரவமான, நிறைந்த வருமானத்தை ஈட்டக் கூடிய, பொருத்தமான விருப்பார்ந்த தகுதியான தொழிலுக்கு வழிகாட்டுதல் என்பதாகும்". ஐரோப்பிய நாடுகளில் இந்தநிலை காணப்படுவதையும் அதனூடாகவே அந்த நாடுகளில் பொருத்தமான வேலைப் படை உருவாகி விருத்தியடைந்து வருவதையும் நோக்கலாம்.

எம்மிடையே பதினொரு வருடங்கள் கல்விகற்ற மாணவன் மூன்று மணித் துளியில் தனது ஆற்றலை பிரயோகிப்பதனூடாகவே அவனது அடைவு பரீட்சிக்கப்படுகின்ற பொருத்தமற்ற மதிப்பீட்டு கலாசாரம் காணப்படுவதையும் நாம் நோக்க முடியும். இதன் மூலம் மீதிறன் கொண்ட மாணவ சமுதாயம் தொடர்ந்து பயணிக்கவும் மெல்லக்கற்போர் கொண்ட மாணவப்படை கல்வியுலகில் இருந்தும் வேலை உலகிலிருந்தும் வெளியேறும் நிலை காணப்படுகின்ற இந்நிலை மாற்றத்தை குறைப்பதே மேற்படி வழிகாட்டல் கருத்தரங்குகளின் பிரதான நோக்கு என்பதை சமூகத்தினர் ஆழமாகவும் அகலமாகவும் கருத்தூன்றிப் புரிந்து கொள்ள வேண்டும்.

கல்வி தொழில் வழிகாட்டுபவர்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் இதுபோன்ற கருத்துருவாக்க நடவடிக்கைகளிலும் எமது இளஞ்சந்ததியை ஈடுபடுத்தி அவர்களின் சிந்தனை மாற்றத்தில் விருத்தியை ஏற்படுத்தி பொருத்தமான பாடத் தெரிவினையும், வேலை உலகினையும் இனங்காணச்செய்து அறிவுடன் கூடிய திறன், மனப்பாங்கு விருத்தியில் மேம்பாடடைந்த சமூகமொன்றை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றித்து பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகின்றது.

# சகோதர நட்புக்கு ஈடேதும் இல்லை



அபிநயா

சகோதரர்களைப் பெற்றிருப்பது உற்ற நண்பர்களைப் பெற்றிருப்பதைப் போன்றதே. இவர்கள் தான் குழந்தைப் பருவத்தின் முக்கியமான தரப்பினராக இருப்பார்கள். இவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் முக்கியமான விளைவுகளை சகோதர உறவால் எதிர் கொண்டிருப்பார்கள்.

ஒரே குடும்பத்தில் பிறந்து, வளர்க்கப்பட்ட சகோதரர்களிடம் ஒரு கலவையான அன்பும், நட்புணர்வும் நிலவிவரும். ஒரு குழந்தையை மட்டும் கொண்ட குடும்பங்களில் சகோதர உறவுகள் இல்லையென்பதால், அவர்களுடைய வாழ்க்கை மிகவும் வித்தியாசமான மற்றும் அற்புதமான உறவையும், சகோதர அல்லது சகோதரி பாசத்தையும் இழந்து விடும் விதத்தில் அமையும்.

சகோதரர்கள் பிறந்ததில் இருந்தே ஒருவரையொருவர் அறிவார்கள். சகோதர உறவு முறைகள் ஒட்டுமொத்த குடும்பத்தின் நிலையையும் உணர முடியும். தங்களுக்குள் நல்ல புரிந்துணர்வுடன் இல்லாத உறவுகளைக் கொண்ட குடும்பத்தினர்களை உடைய சகோதரர்களின் வாழ்க்கை சற்று மன வேறுபாடுகளுடனே இருக்கும். அதே சமயம், மிகவும் நல்ல புரிந்துணர்வுடன் இருக்கும் குடும்பங்களில் உள்ள சகோதரர்கள், நட்புக்கு எடுத்துக்காட்டாக இருப்பார்கள். எனவே தான் ஒரு குழந்தையின் மன மற்றும் கலாசார வளர்ச்சிக்கு சகோதர உறவு முறை மிகவும் முக்கியமானதாக உள்ளது.

### நல்ல நண்பன், நல்ல ஆசான்

சகோதரர்கள் தங்களுக்குள் ஆரோக்கியமான உறவைப் பேண வேண்டும். சகோதரர் அல்லது சகோதரிகள் தான் தனிமையில் இருக்கும் குழந்தைகளுக்கு மிகவும் உற்ற நண்பர்களாவார்கள்.

அவர்கள் உங்களைப் புரிந்து கொள்வதுடன், உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்தையும் விளக்கமாக தெரிந்தும் வைத்திருப்பார்கள். நீங்கள் குழப்பத்தில் இருக்கும் வேளைகளில் சகோதரர்கள் உங்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பார்கள். கடினமான நேரங்களில் ஒரு நல்ல ஆசானாகவும், வழிகாட்டியாகவும் சகோதரர்கள் இருப்பார்கள்.

### உணர்வு ரீதியான ஆதரவு

சகோதரர்கள் ஒரே மாதிரியான குடும்ப சூழல் மற்றும் மனநிலையில் வளர்க்கப்படுகிறார்கள். இது அவர்களின் ஒட்டுமொத்த மன மற்றும் கலாசார வளர்ச்சியும் ஒரே மாதிரியாக இருக்க வகை செய்கிறது. இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்திருக்கவும் உதவுகிறது. இவர்கள் உறவினர்கள் மட்டுமல்லாமல், இருவரும் தங்களுக்குள் மன ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் ஆதரவாக இருக்க முயலுவார்கள். அவர்களுக்குள் சொந்தமாக ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும்போதும், குடும்பப் பிரச்சினைகளின்போதும் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள்.

### புரிதல்

சகோதரர்கள் அல்லது சகோதரிகள் ஒருவரையொருவர் நன்றாக புரிந்து கொள்வார்கள். நீங்கள் பெரியவராக வளர்ந்த பின்னரும் கூட சகோதர உறவுகளை நன்றாக பராமரிக்க வேண்டியது அவசியமாகும். அதன் மூலம் தான் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் கவலைகளையும், பிரச்சினைகளையும் நம்பிக்கையான ஒருவரிடம் மனம் விட்டுப் பேச முடியும். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தவும், தாக்கத்தை ஏற்படுத்தவும் செய்வார்கள். உங்களுக்கு சகோதரர்கள் இருந்தால், உங்களை ஊக்கப்படுத்த அல்லது ஆதரவு தெரிவிக்க வேறு எவரும் தேவையில்லை.

### குடும்ப ஒற்றுமை

குடும்பத்தை ஒற்றுமையுடன் வழிநடத்த சகோதர உறவு மிகவும் முக்கியமானதாகும். சகோதரர்கள் பாசத்துடன் இணைந்திருக்கும் வரையில் குடும்பத்தின் உறவும் நீடித்து ஒற்றுமையுடன் இருக்கும்.

இதன் மூலம் சகோதரர்கள் தாய் தந்தையரைச் சந்திக்கவும், அவர்களுடைய குழந்தைகள் மற்ற சகோதரர்களின் குழந்தைகளைச் சந்திக்கவும் முடிகிறது. குடும்பமாக இணைந்திருத்தல், குடும்பமாக வெளியே செல்லுதல் மற்றும் இரவு உணவு உண்ணுதல் போன்றவை இந்த உறவுகளை சகோதர, சகோதரிகளிடம் மேம்படுத்தி வளர்க்கின்றன.

### இரத்த பந்தம்

சகோதர உறவுகளில் நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் இரத்த பந்தம். ஒரே குடும்பத்தில் பிறந்த சகோதரர்கள் தங்களுடைய சிறப்பான உறவு முறைகளால், ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான குடும்பத்தைப் பராமரித்து வருகிறார்கள். இந்த இரத்த பந்தம், குடும்ப கலாசாரம் மற்றும் குடும்ப வரலாறு ஆகியவற்றைப் பாதுகாத்தும், பராமரித்தும் வருவதற்கு சகோதர, சகோதரிகளிடம் நல்ல உறவு முறை இருந்து வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பேச்சில் முதிர்ச்சி தெரியும். சவாலில் வெற்றி பெறுவீர்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**இடபம்:** திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும்.



**மிதுனம்:** வேலைப்பளு அதிகரிக்கும். உறவினர் விடயத்தில் அத்துமீறித் தலையிட வேண்டாம். நியாயத்தைப் பேசப்போய் பெயர் கெடும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும்.



**கடகம்:** பழைய பிரச்சினைகள் தலை தூக்கும். உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். அரச விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்களைத் தவிருங்கள்.



**சிங்கம்:** உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.



**கன்னி:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். நம்பிக்கைக்குரியவரைக் கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.



**துலாம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.



**விருச்சிகம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். சாதாரணமாக பேசுவதைக் கூட சிலர் குதர்க்கமாகப் புரிந்து கொள்வார்கள். செய்நன்றி மறந்த மனிதர்களை நினைத்து அவ்வப்போது வருந்துவீர்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.



**தனுசு:** தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். திருமணப் பேச்சு வெற்றியடையும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை மேலதிகாரி பாராட்டுவார்.



**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.



**கும்பம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும்.



**மீனம்:** கடந்தகால சுகமான அனுபவங்களெல்லாம் மனதில் நிழலாடும். அரச அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

## நாளை

**மாசி-01 வியாழக்கிழமை | 13.02.2014**

திதி: சதுர்த்தசி பி.இ.04.20 வரை
நட்சத்திரம்: பூசம்
மு.இ.11.34 வரை

சுபநேரம்: 08.04-09.34 வரை
இராகுகாலம்:.02.04-03.34 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### குறிகளின் இன்றியமையாமை

பக்தி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்றை 'வைதி' அல்லது விதிமுறைப் புறச் சடங்கு என்பர். மற்றொன்றை 'முக்கியம்' அல்லது மிகச் சிறந்தது என்று கூறுவர். பக்தி என்ற சொல் கீழ் நிலைப்புற வழிபாட்டிலிருந்து மிக உயர்ந்த பிரேமை நிலை வரையிலுமுள்ள எல்லா நிலைகளையும் தழுவி நிற்கின்றது. எல்லாச் சீரிய வழிபாடுகளும், உலகத்தில் எந்த நாட்டைச் சேர்ந்ததானாலும் சரி, எந்த மதத்தைச் சேர்ந்ததானாலும் சரி, அன்பினால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பான்மையானவை எளிய சடங்குகளாயுள்ளன. சடங்குகளில்லாதவையும் பல உள்ளன. இவற்றை அன்பு நெறி என்று கூறுவதற்கில்லை. இவை பக்தியின் கீழான நிலையைக் காட்டுகின்றன.

எனினும், இவை சமய வாழ்வில் இன்றியமையாதவை. பக்தியின் இந்தப் புறவழிபாடுகள் ஆன்மாவை முன்னேறச் செய்ய மிகவும் உதவுகின்றன. மிக உயர்ந்த படியை ஒரே தாவலில் அடைய முடியும் என்று எண்ணும் மனிதன் பெரிய தவறு செய்கிறான். ஒரு குழந்தை ஒரே நாளில் முதிர்ந்து கிழவனாகப் போகிற தென்று நினைத்தால், அது தவறு.

## காற்புள்ளி (,) எதற்கு?



ஆங்கிலத்தில் காற்புள்ளியை () நீக்கிவிடலாம் என்று கொலம்பிய பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ளது.

வாக்கியங்களைப் படிக்கும் போது எங்கு நிறுத்திப் படிக்க வேண்டும், எப்படிப் படிக்க வேண்டும் என்பதற்கு உதவுபவையே நிறுத்தல் குறியீடுகள்.

இதுபோன்ற 'கம' என்றழைக்கப்படும் காற்புள்ளி, அரைபுள்ளி, முற்றுப்புள்ளி போன்றவை பல மொழிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இதில் காற்புள்ளியை பெரும்பாலான புதிய தலைமுறையினர் பயன்படுத்துவதில்லை என்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கொலம்பிய பல்கலைக்கழக ஆங்கில மொழித் துறைப் பேராசிரியர் ஜோன் மெக்வொர்ட்டர் கூறுகையில்,

தற்போது இணையத் தளங்களில் எழுத வந்துள்ள புதிய தலைமுறையினர் பெரும்பாலும் நிறுத்தல் குறிகளைப் பயன்படுத்துவதில்லை, பயன்படுத்தவும் விரும்புவதில்லை.

இதனால் ஒரு சில இடங்களில் கருத்து மயக்கம் ஏற்பட்டாலும் பொருள் பெரும்பாலும் மாறுவதில்லை.

எனவே நிறுத்தல் குறிகள் தேவையில்லை என்று பல்வேறு மொழி நிபுணர்கள் வலியுறுத்தி வருகின்றனர், எனவே நீக்கி விடலாம் என்று தெரிவித்துள்ளனர்.

## அறுவைச் சிகிச்சை செய்யாமல் இதய சிகிச்சை

அறுவைச்சிகிச்சை செய்யாமல் இதயத்தில் பேஸ்மேக்கர் கருவியைப் பொருத்தி மருத்துவர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

இதயத்துடிப்பை சீராக்குவதற்காக நோயாளியின் உடலில் பேஷ்மேக்கர் என்ற கருவி அறுவைச்சிகிச்சை மூலம் பொருத்தப்படுகிறது. ஆனால் சிகிச்சை எதுவும் செய்யாமல், இந்த கருவியைப் பொருத்தி அமெரிக்க வாழ் இந்திய வம்சாவளி மருத்துவர் விவேக் ரெட்டி சாதனை படைத்துள்ளார். இவர் நியூயோர்க்கில் உள்ள தி மவுண்ட் சினாஸ் என்ற மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார்.

தற்போது இதய நோயாளிகளின் உடலில் பொருத்தப் படும் பேஷ் மேக்கர்' ஈயத்தால் தயாரிக்கப்பட்டது. ஆனால் இது வெள்ளியினால் தயாரிக்கப்பட்ட சிறிய 'டியூப்' வடிவிலானது.

இது வழக்கமான பேஷ்மேக்கர் கருவியை விட 10 மடங்கு மிகச்சிறியதாகும். இந்தக்கருவியை அடிவயிற்றுக்கும் இதயத்துக்கும் இடையே உள்ள இரத்தக் குழாய் மூலம் இதயத்துக்குச் செலுத்தி மருத்துவர் விவேக் ரெட்டி இச்சாதனையைப் படைத்துள்ளார்.

வெற்றிகரமாக பொருத்தப்பட்டுள்ளதன் மூலம் அமெரிக்கா, கனடா, ஐரோப்பாவில் 670 பேருக்கு இக் கருவி பொருத்தப்பட உள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் இதய நோயாளிகளின் எண்ணிக்கை பெருகி வரும் நிலையில், பேஸ்மேக்கர் கருவி வரப்பிரசாதமாக கருதப்படுகிறது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | | 5 | | | 9 | | |
| | 3 | 5 | | | | | | |
| | | 2 | 3 | 7 | | 5 | | 4 |
| 2 | | | 8 | 5 | | 1 | | 6 |
| | 5 | 9 | | | | 7 | 4 | |
| 7 | | 1 | | 9 | 4 | | | 3 |
| 3 | | 7 | | 8 | 9 | 6 | | |
| | | | | | | 4 | 8 | |
| | | 8 | | | 5 | | 1 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 6 | 2 | 5 | 8 | 4 | 7 | 9 |
| 5 | 2 | 7 | 9 | 4 | 3 | 8 | 6 | 1 |
| 4 | 9 | 8 | 6 | 7 | 1 | 5 | 2 | 3 |
| 8 | 3 | 5 | 4 | 2 | 9 | 7 | 1 | 6 |
| 9 | 6 | 1 | 5 | 8 | 7 | 2 | 3 | 4 |
| 2 | 7 | 4 | 3 | 1 | 6 | 9 | 5 | 8 |
| 7 | 4 | 3 | 1 | 9 | 5 | 6 | 8 | 2 |
| 1 | 8 | 9 | 7 | 6 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 5 | 2 | 8 | 3 | 4 | 1 | 9 | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பலப்பிட்டி பகுதியில் 5 மாடிக் கட்டடத்தில் தீ

கொழும்பு, பெப்.12
பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள 5 மாடிக் கட்டடமொன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.


கோப்புப்படம்

பம்பலப்பிட்டி, இலக்கம் 64, டேவிட்சன் வீதியில் உள்ள ஐந்து மாடிகளைக் கொண்ட வர்த்தகக் கட்டடத்திலே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.
இந்தத் தீ விபத்தில் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.
சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)


எல்பிட்டிய, பிட்டிகல வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்ததார். அருகில் சிரேஷ்ட அமைச்சர் பியசேன கமகே, அமைச்சர்களான ரோஹித அபேகுணவர்த்தன, நிர்மல கொத்தலாவல ஆகியோர் காணப்படுகின்றனர்.

# பல்கலைக்கழக மாணவர்கள் 13 பேர் கைது



களனிப்பல்கலைக்கழக வளாகத்தில் கஞ்சா புகைத்து கொண்டிருந்த கலை மற்றும் வர்த்தக பீடங்களைச்சேர்ந்த 13 மாணவர்களை பல்கலைக்கழக ஒழுக்க நிர்வாக அதிகாரிகளின் உதவியுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பேலியகொடை பொலிஸார் அவர்களிடமிருந்து 13 கஞ்சா சுருட்டுகளையும் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# தோடம்பழங்களுக்குள் ஹெரோயின் கடத்தல்

## விமான நிலையத்தில் ஒருவர் கைது

கொழும்பு, பெப்.12
தோடம்பழங்களுக்குள் சூட்சமமான முறையில் மறைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்கு கொண்டுவந்த பாகிஸ்தான் நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
விமான நிலைய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.
சந்தேகநபர் 12 தோடம்பழங்களுக்குள் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்தலிருந்து இலங்கைக்கு எடுத்து வந்துள்ளார்.
ஒரு தோடம்பழத்துக்குள்ளும் 80 கிராமுக்கு மேல் ஹெரோயின் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று ஊடகப் பேச்சாளர் கூறினார்.
இதற்கமைய சந்தேகநபரிடமிருந்து சுமார் ஒரு கிலோ கிராம் எடையுள்ள ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.
மீட்கப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 10 மில்லியன் ரூபா என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ச)

# தெற்கு மக்களையும் குழப்ப அனைத்துலக சக்தி முயற்சி

## ஜனாதிபதி மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.12
தெற்கிலுள்ள மக்களின் உரிமைகள் மீறப்படுவதாகக் கூறி, அவர்களைத் தவறான வழியில் திசைதிருப்ப அனைத்துலக சக்திகள் ஜெனீவாவில் இருந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
காலி, உடுகமவில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது வெளிநாட்டு சக்திகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு வருகின்றன. இவர்கள் மனிதஉரிமைகள் மீறப்படுவதாகக் கூறி வருகின்றனர்.
வடக்கு மக்களின் மனித உரிமைகள் தொடர்பாக மட்டும் குரல் எழுப்பினால் தெற்கு மக்களின் ஆதரவைப் பெறமுடியாமல் போகும் என்பதால், அவர்கள், இப்போது தெற்கு மக்களின் மனிதஉரிமையும் மீறப்படுவதாக ஒரு புரளியை ஏற்படுத்தி வருகின்றனர்.
அப்போது தான் அமெரிக்கா, பிரிட்டன் போன்றவற்றின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கருதியே அவர்கள் இவ் வாறு செயற்படுகின்றனர்.
இத்தகைய ஒரு கூற்று நேற்று முன்தினம் ஜெனீவாவில் வெளியிடப்பட்டுள்ளதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.
சிலருக்கு வெளிநாட்டுத் தூதரகங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சில செயற்பாடுகளுக்காக உதவி வருகின்றன.
அவ்வாறு செயற்பட வேண்டாம். எமது நாட்டில் எம்மை சுதந்திரமாக, நிம்மதியாக வாழவிடுங்கள்.
எமது நடவடிக்கைகளில் தலையிட வேண்டாம். மக்களுக்கு அரசியல் செய்ய வும், மக்கள் தமது தலைவ ரைத் தெரிவு செய்யவும் இடமளியுங்கள்.
மக்கள் தமது நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
பெரும் சவால்கள், கஷ்டங்களுக்கு மத்தியில் நாம் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.
தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.
சிலர் அரசுக்கு எதிராகவும், மக்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வருகின்றனர். நாம் மக்களுக்கான அனைத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளோம்.
எத்தகைய அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். - என்றார். (ச)


# மரண அறிவித்தல்

## சிதம்பரம் வீரகத்தி சண்முகம்

**(முன்னாள் போருட், கொம்ரெக் திட்ட இணைப்பாளர் - வவுனியா)**



யாழ்.வடமராட்சி, தும்பளையைப் பிறப்பிடமாகவும், காத்தார் சின்னக்குளம் வீதி, வவுனியாவில் வசித்தவருமாகிய சிதம்பரம் வீரகத்தி சண்முகம் 09.02.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மாணிக்கம் சண்முகம் (இளைப்பாறிய ஆசிரியை - வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், நந்தினி (நோர்வே), முரளி (பிரான்ஸ்), அரவிந்தன் (பிரதேச செயலகம் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நேசராசா (நோர்வே), சுமதி, நிரஞ்சனாதேவி (ஆசிரியை - வ/இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனும், அருண் பிரசாத் (நோர்வே), நர்த்தகி (நோர்வே), மதுசாணி (பிரான்ஸ்), மதுஷன் (பிரான்ஸ்), அபிஷேக், வர்ஷாயினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2014) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பிருந்தாவனம், காத்தார் சின்னக்குளம் வீதி, வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
காத்தார் சின்னக்குளம்,
வவுனியா.
T.P. 024 222 1295
(2.6.3)(43154)


# நுரைச்சோலை அனல் மின் நிலையம் பரீட்சார்த்த நடவடிக்கைக்குத் திறப்பு

கொழும்பு, பெப்.12
நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம், முதல் கட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காக மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது.
மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக தற்போது 200 மெகாவோல்ற் மின்சாரத்தை உற்பத்திசெய்ய முடிந்துள்ளது என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரும், வர்த்தக மற்றும் நடவடிக்கைப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளருமான சென்ஜித் தசநாயக்க தெரிவித்தார்.
எனினும் பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காகவே நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
தேவை ஏற்படும் பட்சத்தில் மின் உற்பத்தி நிலையத்தை தற்காலிகமாக செயலிழக்கச் செய்யும் எண்ணத்துடனேயே சோதனை பரீட்சார்த்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.
நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தை விரைவில் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)


அனல்மின் நிலையம்


# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் பரமலிங்கம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு கண்ணன் கடையடியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பரமலிங்கம் (கனகநாயகம்) 11.02.2014 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
தகவல்: குடும்பத்தினர்.
(44604) (4.6.3) தொடர்பு:077 501 8156

# கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோயில் பிரதமகுருக்கள்
## சதாசிவக்குருக்கள்-நித்தியானந்தக்குருக்கள்
அவர்கள் 08.02.2014 அன்று இறைபதம் எய்திய செய்தி கேட்டு துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(44602)(4.6.3)
ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் தேவஸ்தானம், கீரிமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த பெண் கைது

மட்டக்களப்பு,பெப்.12
அட்டாளைச்சேனை, ஆலிம் நகர்ப் பிரதேசத்தில் பொலிஸார் தமது கடமையைச் செய்ய விடாது இடையூறு விளைவித்த பெண் கைது செய்யப்பட்டார்.
ஆலிம் நகர்ப் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் பெண் ஒருவர் கஞ்சா போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் பெண்பொலிஸார்சகிதம் சென்று சுற்றிவளைத்தனர்.
இதன்போது பெண் ஒருவர் பொலிஸாரை அவர்களது கடமையைச் செய்யவிடாது இடையூறு விளைவித்ததையடுத்து குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)



மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பரிசோதனை திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-10)

# வாய்த் தகராறு முற்றி கொலையில் முடிந்தது



கொலையுண்ட நபரது சடலம்

வாழைச்சேனை,பெப்.12
வாழைச்சேனைபொலிஸ் பிரிவில் குளத்துமடு கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் திங்கட்கிழமை அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்என்றுவாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.
கிரான் பிரதேச செயலர் பிரிவில் குளத்துமடு கிராமத்தில் குமாரியன் ரட்ணசிங்கம் (வயது-42) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த நபர் அவரது இரண்டாவது மனைவியின் சகோதரரால் அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று சந்தேகிக்கப்படுகிறது.
இந்த நபர் இரண்டாவது மனைவியின் தாயின் வீட்டுக்கு வந்த சமயம் ஏற்பட்ட வாய்த்தகராற்றால் ஏற்பட்ட கைலப்பில் அவரது மைத்துனரால் தாக்கப்பட்டதை அடுத்து அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
தாக்குதலுக்குப் பயன்படுத்திய தடியுடன் சந்தேகநபரான அப்புகாமி சுதாகரன் (வயது- 20) வாழைச்சேனைப் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

# 8 ஆயிரம் வீடுகள் கிழக்குக்கு தேவை

## மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு.பெப்.12
கிழக்கு மாகாணத்தில் 8000 வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.
இவ்வாறு மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கருங் காலியடிச்சேனை கிராமத்தில் 22 குடும்பங்களையும் கல்லிச்சை கிராமத்தில் 15 குடும்பங்களையும் மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர்களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைப்பதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**கிழக்கு மாகாணத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதே சங்களில் 800 வீடுகளும் ஆயிரம் மலசல கூடங்களும் நிர்மாணிக் கப்படவுள்ளன.**

இந்த கருங்காலியடிச்சேனை இராணுவ முகாம் இருந்த இடமாகும். இங்கு 2013ஆம் ஆண்டு கிழக்கு மாகாண படைகட்டளைத்தளபதியிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து தற்போது அந்த பிரதேசத்தில் இருந்து இராணுவ முகாம் அகற்றப் பட்டு அங்கு மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதையடுத்து கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கை பூர்த்தி யாக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் சில இடங்களுக்கு மக்கள் போகாமல் இருக்கலாம்.
அதே போன்று வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து மட்டக்களப்புக்கு வருகை தந்தவர்களும் அங்கு செல்லாமல் மட்டக்களப்பில் உள்ளனர்.
கிழக்கு மாகாணத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் 800 வீடுகளும் ஆயிரம் மலசல கூடங்களும் கட்டப்பட்டு வழங்கப்பட உள்ளன.
அதில் ஏற்கனவே 400 மலசல கூடங் கள் மீள் குடியேற்ற பிரதேசங்களில் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.
மீள் குடியேற்ற பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ச)


# கவிதை நூல் வெளியீடு

கல்முனை,பெப்.12
கல்முனை கவிஞர் கதீரின் 'மணல் நதி' கவிதைத்தொகுதி வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
அனுசரி இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கல்முனை பிரதான வீதியில் உள்ள சபா வரவேற்பு மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் எஸ். எம். எம். இஸ்மாயில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ச-10)

# திருடியவர் மாட்டினார்

அக்கரைப்பற்று. முதலாம் பிரிவு, ஜஸ்மில் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து 159,620 ரூபாவை திருடியதாகச் சந்தேகிக்கப்பட்ட இளைஞர் ஒருவரை ஞாயிற்றுக்கிழமை கைது செய்ததுடன், அவரிடமிருந்து பணத்தையும் கைப்பற்றியுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதனை அடுத்து மேற்கொண்ட தேடுதலின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்மகிழ
19.02.1930

கண்நெகிழ
24.01.2013

திருமதி தங்கரத்தினம் சிற்றம்பலம்

திதி: (12.02.2014) புதன்கிழமை



அன்பிலே தெய்வமாய்; அறிவிலே ஆசானாய்
பண்புடனே எமை வளர்த்து; பாசமழை பொழிந்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து;
தெய்வத்துள் தெய்வமாய் கலந்து - எம்மை
என்றும் வாழ வைப்பாய் ! நெஞ்சிருக்கும் வரை
நாம் மறவோம். உம் நினைவில்
வாழ்ந்திருப்போம் என்றென்றும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மல்லிகா ஸ்ரோர்ஸ்,
ஆவரங்கால், புத்தூர்.

குடும்பத்தினர்.
(C/12016)

5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர் மேரிலூத் (பூமணி) கந்தையா

தோற்றம்: 27.09.1948
மறைவு: 12.02.2009



(திதி: 17.02.2014)

நிரந்தர முகவரி:
நல்லூர், யாழ்ப்பாணம்.

வதிவிட முகவரி:
பொது மருத்துவமனை முன்பாக,
ஆனந்தபுரம்-கிளிநொச்சி.

எம்முடன் தோன்றாத் துணையாக
வாழ்ந்துவரும் எம் தாயே!
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டு
ஐந்தாண்டுகள் ஆனாலும் எம் மனதை
விட்டகலாது உங்கள் நினைவுகள்.
தங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

மணியம்மா உணவகம்,
பொது மருத்துவமனை
முன்பாக, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

பிள்ளைகள்:
ஈசன், கலா.

(43577)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் முடிவுக்கு வந்த பின்னரும் பயங்கரவாத வரி அறவிடப்படுகிறது

பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை ஈடுசெய்து கொள்வதற்காக அறவிடப்பட்ட நூற்றுக்கு 0.5 வீத வரி தொடர்ந்தும் அறவிடப்படுவது பெரும் அநீதி யானது என மக்கள் கவலை வெளிப்படுத் துகின்றனர்.

பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டு மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இந்த நிலையில் அரசு, பயங்கரவாத சேதங் களுக்கு ஈடு செய்ய அரசின் ஸ்ரீலங்கா காப்புறுதிச் சபையில் இருந்து வருடாந்தம் பெருந் தொகைகளைப் பெற்றுவருவதாக நிதி நிறுவனங்களினால் தெரிவிக்கப்படுகிறது.

காப்புறுதிப் பாதுகாப்புக்களைப் பெற்றுக் கொள்வதால், குழப்பங்கள், கலவரங்கள் மற்றும் வேலை நிறுத்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான சட்டவிதிகளின் கீழ் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வது சாதாரணமாக தற்போதும் நடைமுறையில் உள்ளது. இவ்விதம் பணம் அறவிடப்படுவதானது வாடிக்கையாளர்களுக்கு விளைவிக்கப்படும் அநீதியென்றே வங்கிகளும் காப்புறுதி நிறுவனங்களும் சுட்டிக்காட்டியுள்ளன. (ந-22)

**Superlink Travels**

இவ்வுலகில் யாத்திரையே சிறந்ததொன்றாக கருதப்படுகிறது
இப்போதே பதிவு செய்து பின்வரும் ஏமாற்றத்தை தவிர்க்கவும்

**புனித தேசத்திற்கு** வசதியான பயணம்
தமிழ் பேசும் யாத்திரிகர்களுக்காக
விஷேட 08 நாள் யாத்திரை
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மதகுரு ஒருவர் உங்களுடன் பயணிப்பார்
மேலதிக தகவல்களுக்கு வணக்கத்துக்குறிய அருட்தந்தை ரோவன் போல் அவர்களை தொடர்பு கொள்ளவும் 077 3792255



அதனுடன்
- உயர்தரமான திட்டமிடல்
- நட்சத்திர ஹோட்டலில் தங்குதல்
- தனிப்பட்ட கவனம்
- விருது பெற்ற தொழில்முறை வழிகாட்டி
- காலை உணவு மற்றும் இரவு உணவு (புபே முறை)
- மதிய உணவு பிரத்தியேக உணவகங்களில்

2014 பெப்ரவரி 14ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யவும்

சேர்க்கப்பட்டுள்ளது : ஜெரிக்கோவிலிருந்து சோதனை மலைக்கு கேபல் கார் மூலம் பயணம்

ஒருவருக்கான விலை ரூ.175,000/-*

புறப்படுதல் 2014 மார்ச் 31

**06 நாள் பட்ஜட் யாத்திரை**

2014 பெப்ரவரி 12ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யவும்



**புனித தேசத்திற்கு** வசதியான பயணம்

ரூ.125,000/-*

அனைத்து உணவுகளும், தங்குமிடமும் உள்ளடக்கப்பட்டுள்ளது

இன்றே பதிவு செய்யவும்

ஒருசில கையிருப்பு மாத்திரமே

புறப்படுதல்: ஆசனப் பதிவு நிறைவு — மார்ச் 10 | மார்ச் 17 | மார்ச் 24 | ஏப்பிரல் 03 | ஏப்பிரல் 10

* நிபந்தனைகளுக்கு உற்பட்டது

**Superlink Travels (Pvt) Ltd.** மின்னஞ்சல்: superlink@superlink.eureka.lk, superlink@slt.lk
'Lucky Plaza' 70, Kollupitiya Lane (St. Anthony's Mawatha) Colombo 03
Tel : +94 11 230 1616, 257 5900, 257 5698
எங்களுடைய இணையப்பகுதிக்கு விஜயம் செய்து உங்களுடைய தரவுகளை அனுப்பவும்:
www.superlinktravels.com

## நடராஜர் அபிஷேக பெருவிழா நாளை

யாழ்ப்பாணம்.பெப்.12
யாழ்.இந்து சமயப் பேரவை யின் ஸ்ரீசிவ காம சுந்தரி சமேத சிதம்பர நடராஜப் பெருமான் ஆலயத்தின் மாசி மாத நடராஜர் அபிசேகப் பெருவிழா நாளைவியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அபிசேகப் பெரு விழாவில் இந்து சமயப் பேரவையின் சைவ உயர்பீட பெருந்தலைவரும் இந்தியாவின் சிதம்பர ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியாருமானசிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீஷிதர் தலைமையிலான பிரபல சிவாச்சாரியார்கள் பங்குபற்றுவதற்கு வருகை தரவுள்ளனர். (வ-14)

கௌரவமான தொழில்- முன்னேற்றத்துக்கு வழிகாட்டி.....

## வரையறுக்கப்பட்ட கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி

## தொழில் வாய்ப்புக்கள் ஏராளம்

ஒரு குறிப்பிட்ட மக்களுக்கிடையில் மட்டுமே இருந்த காப்புறுதி சேவையானது அனைத்து மக்களுக்கும், அனைத்து இடங்களுக்கும் கொண்டு செல்லும் நோக்கில் 14 வருடங்களாக இந்த நாட்டிற்கு மகத்தான சேவையை வழங்கிப் பல வெற்றிகளையும் கண்டுள்ளது. இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பல விருதுகளையும் பெற்றுள்ளமை எமது நிறுவனத்தின் சேவைக்கு சான்று பகர்கின்றது.

கூட்டுறவுத் தொழில் துறையில் இமயமாக அமைந்த கூட்டுறவுக் காப்புறுதி நிறுவனம் 'அன்றுபோல் இன்றும் இன்று போல் நாளையும்' எமது மக்களின் ஆயுள் மற்றும் உடைமைகளுக்குக் காப்புறுதி பாதுகாப்பு செய்வதற்கு பாடுபடும் ஒரு நிறுவனமாகும்.

இது போன்ற கௌரவமான ஒரு சேவையைச் செய்வதற்கு கைகோர்த்துக் கொண்டு கௌரவமான வேலைவாய்ப்பிற்காக மன உறுதியுள்ள அனைவருக்கும் வாய்ப்புக்களைத் தருவதற்கு நாங்கள் ஆயத்தமாக உள்ளோம்.

**1. Unite Leader (குழுத் தலைவர் (ஆண்/பெண்)பொது காப்புறுதித்துறை**

18 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த.சாதாரண தரம் (O/L)சித்தியடைந்திருத்தல்(கணிதம் உட்பட)விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் ஒரு வருட அனுபவமுள்ள, (காப்புறுதித் துறையின் முன்னனுபவம் உள்ளது மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்) தலைமைத்துவ ஆற்றல் மிக்க திறமையாக பணியாற்றக்கூடிய உங்கள் அனைவருக்கும் மிகவும் பொருத்தமான தொழில் இதுவேயாகும்.

இத்தொழில் மூலம் 5 வருடத்திற்குள் உங்களுக்கு உரிமையான வாகனம், வீடு போன்றவற்றைக் கொடுப்பது எமது கனவு. அத்துடன் குறுகிய காலத்திற்குள் 100,000/= விற்கு மேல் வருமானத்தை உங்களால் பெற முடியும்.

**2. Junior Executive Trainee - கனிஸ்ர விற்பனை நிறைவேற்று அதிகாரி-பயிலுநர் (ஆண்/பெண்) பொது காப்புறுதித்துறை**

18 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களுக்கு மேல் சித்தியடைந்திருத்தல், பாடசாலைகளில் மற்றும் வேறு நிறுவனங்களில் தலைமைத்துவ பதவி வகித்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும். 6 மாதத்திற்குள் 50,000/= விற்கு மேல் மாத வருமானத்தைப் பெறுவதற்கான கௌரவமான நிரந்தரத் தொழிலுக்கு எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

நாடு முழுவதும் காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு எம்முடன் இணையும் உங்களுக்கு பின்வரும் முக்கிய அனுகூலங்கள் உள்ளன.

I. EPF,ETF உடன் மாதாந்த சம்பளம்
II. 50,000/= முதல் 100,000/= வரையான வருமானம்
III. வட்டியில்லாத மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி.
IV. சர்வதேச மட்ட அனுபவமுள்ளவர்களால் பயிற்சி.
V. வெளிநாட்டு சுற்றுலா வசதிகள்.
VI. ஆயுள் மற்றும் தனிநபர் விபத்துக் காப்புறுதி
VII. மருத்துவக் காப்புறுதி வசதி
VIII. மேலதிக கல்விக் கொடுப்பனவு வசதிகள்

குறிப்பு: 1. பாஸ்போட் அளவிலான 2 புகைப்படத்துடன், உறவினர் அல்லாத இருவரது பெயர்,முகவரி, தொலைபேசிஇலக்கத்துடன் கூடிய சுயவிவரக்கோவையை எமக்கு அனுப்பி வைக்கவேண்டும்.
2. நீங்கள் எதிர்பார்க்கும் பதவியை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.
3. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற பிரதேசங்களுக்குள் எங்கு பணியாற்ற விரும்புகிறீர்கள் என்பதையும் குறிப்பிடவும்.
4. இந்த விண்ணப்பங்கள் யாவும் விளம்பரம் செய்யப்பட்ட தினத்திலிருந்து 10 நாள்களுக்குள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
5. விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி: பிராந்திய முகாமையாளர்,
கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி
இல.68, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.

CO OP INSURANCE

**வரையறுக்கப்பட்ட கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி**
email: sutharshan@coopinsu.com
(சி/12015)(5.6.3)

## அறிவித்தல்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் இறை **"சலிக்கந்தவத்தையும் மறு பெயரும்"** என்னும் பெயருடைய ஆதனத்தில் **நிலப்பரப்பு எழுபத்து ஒன்று குழி பத்து தசம் நாற்பத்தொன்பது (நில.பர. 71 குழி 10.49)** என்னும் அளவுடைய ஆதனத்தை அதன் சொந்தக்காரரான சண்முகராஜா சுதர்சன் என்பவர் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளதாக எம்மிடம் தெரிவித்துள்ளமையால் இவ்வாதனம் தொடர்பில் அக்கறை உரித்து உள்ள எவரும் இருப்பின் 19.02.2014 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(மின்னஞ்சல் முகவரி: Kandeevisva @gmail.com )
பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி. 10.02.2014
(சி/12006)(3.6.4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**பெரியதம்பி இராசநாயகம்**
(ஓய்வுபெற்ற காணி நிர்வாக உத்தியோகத்தர்- காணி நிர்ணயக் கந்தோர், கொழும்பு)

தோற்றம் 30.11.1927
மறைவு 13.01.2014



"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்"

கடந்த 13.01.2014 அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (12.02.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் மறைவின்போது எம்முடன் இருந்து, எமது துயரில் பங்குகொண்டு, சகல வழிகளிலும் எம்மை ஆற்றுப்படுத்திய அனைவரையும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"இரஞ்சஸ்தான்" தாவடி–மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.
(44567)(7.6.3)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை செய்த வலைகளை பயன்படுத்தமாட்டோம்

## தமிழக மீனவர்கள் முடிவு

சென்னை,பெப்.12

தடை செய்யப்பட்ட இரட்டை மடி, சுருக்கு மடி வலைகளைப் பயன்படுத்தப்போவதில்லை என்று தமிழக மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இலங்கை - இந்திய மீனவர்களுடனான சந்திப்பில் வலியுறுத்தப்பட்டதற்கு அமைய இந்த முடிவை தமிழக மீனவர்கள் எடுத்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளான இரட்டைமடி, சுருக்குமடி வலைகளைப் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்தனர். இதனால் கடல்வளம் அழி வடைந்து வந்தது. இந்திய கடலோர கடல் வளம் அழி வடைந்தது மாத்திரமல்லாமல், இலங்கையின் கடலோர வளமும் அழிவடைந்தது.

தடைசெய்யப்பட்ட மேற்படி மீன்பிடி வலைகளை இந்திய மீனவர்கள் பயன்படுத்தக் கூடாதென்று, இந்திய - இலங்கை மீனவர்கள் இடை யில் சென்னையில் கடந்த மாதம் 27 ஆம் திகதி இடம் பெற்ற சந்திப்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தமிழகத்தின், 6 மாவட்ட மீனவ பிரதி நிதிகள் சார்பாக புதுக்கோட்டை ஜெகதாப் பட்டினத்தில் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில், இலங்கை மீனவர்கள் கேட்டுக் கொண்டதால் நாளை தொடக்கம் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி வரை மீன்பிடிக்கச் செல்வ தில்லை என்றும், தடை செய்யப்பட்ட இரட்டை மடி மற்றும் சுருக்கு மடி வலைகளைப் பயன்படுத்து வதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(வ-5)

## தொழிற்பயிற்சி வகுப்புகள் சனியன்று ஆரம்பம்

தென்மராட்சி, பெப்.12

கைதடி-நுணாவில் அறவழி நிலையத்தினால் நடத்தப்படவுள்ள தொழிற் பயிற்சிகளுக்கான வகுப்புகள் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு அறவழி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களை அன்றையதினம் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நிலையச் செயலாளர் வீ.ஜீ.தங்கவேல் அறிவித்துள்ளார். (வ-9)


## ஒருநாள் சரும பராமரிப்பு பயிற்சிப் பட்டறை

Oriflame Sweden

அழகுபடுத்தல் என்பது ஓர் ஆடம்பர செலவு என்ற காலம் போய் இன்று ஓர் அத்தியாவசிய செலவாக மாறியுள்ளது. எம்மில் பல பேருக்கு அழகாக இருக்க விருப்பம் ஆனால் எமது சருமத்தை எப்படி இயற்கையான முறையில் பேணிப் பராமரிப்பது என்று தெரியாமல் கவலைப்படுகிறோம்!

**இதோ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!!!**

உங்கள் சருமத்தை இயற்கையான முறையில் இலகுவாக எப்படிப் பராமரிக்கலாம் என்று தெரிந்துகொள்ள மாபெரும் சரும பராமரிப்பு பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளுங்கள்.

திகதி : 14.02.2014 (வெள்ளிக்கிழமை)
நேரம் : மு.ப 9.30 - பி.ப 1.00 மணிவரை
இடம் : 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரசந்தி, கொட்டடி வீதி)
தொடர்பு : 0777 712604
பயிற்சிக் கட்டணம் : ரூபா 750/= மட்டுமே

அன்றைய தினம் Facial செய்ய விருப்பமாயின் ரூ. 500/= மட்டுமே

பயிற்சிப் பட்டறையின் முடிவில் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்கள் விவரங்களை 0777 712 604 எனும் தொலைபேசிக்கு SMS அனுப்பி முற்பதிவு செய்துகொள்ளுங்கள்

(44606)(10.6.3)


## விஞ்ஞான ஆய்வு கூட கட்டடத்துக்கு அடிக்கல்

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் மகிந் தோதய திட்டத்தில் தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வு கூடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 7.30 மணிக்கு இடம்பெறும். கல்லூரி அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டு அடிக் கல்லை நட்டு வைப்பார். (வ-9)

## மாணவருக்கு விசேட பஸ்சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து மின்னேரியாவுக்கு தலைமைத்துவப் பயிற்சிக்கு செல்லும் மாணவர்களுக்கான விசேட பஸ் சேவையை இலங்கை போக்குவரத்து சபை வழங்கவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து தலைமைத் துவப் பயிற்சிக்குச் செல்லும் மாணவர்கள் எதிர் வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இந்த விசேட பஸ் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலச் செல்வம் அறிவித்துள்ளார்.

(வ-14)


## வீடு காணி விற்பனைக்கு

சுன்னாகம், கே.கே.எஸ் றோட் 157 ஆம் இலக்க வீடும் 7½ பரப்புக் காணியும் (நாகலிங்கம் எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக) விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 612 5314

(44611)(3.6.4)

## காணிகள் விற்பனைக்கு

★பலாலி றோட், கோண்டாவில் சந்திக்கு வடக்கு திசையில் ½ கிலோமீற்றர் தூரத்திலும் அதிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் கொட்டைக்காடு பிரதான றோட்டில் பலாலி றோட்டில் இருந்து 500 மீற்றர் தூரத்திலும் இருக்கும் வீடுகட்டவும் விவசாயத்துக்கும் பொருத்தமான 4½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. மின்சாரம், கிணறு மற்றும் குழாய்க் கிணறு கொண்ட காணி.

★பலாலி றோட் கோண்டாவில் சந்திக்கு அருகில் இருக்கும் கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்துக்கு அருகில் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: க. அமிர்தலிங்கம் 076 611 5531

(44544)(3.6.4)


## இந்திய வியாபாரிக்கு விளக்க மறியல்

வவுனியா.பெப் .12

வவுனியா பம்பைமடுப் பிரதேசத்தில் நடமாடும் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியப் பிரஜை ஒருவரை பம்பைமடுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து சுற்றுலா விஸாவில் வருகைதந்த ஒருவர் கடந்த 8 ஆம் திகதி நட மாடும் புடைவை வியா பாரத்தில் ஈடுபட்டதை அறிந்த பம்பைமடுப் பொலிஸார் அவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினார். கைது செய்யப்பட்டவர் தமிழகத்தைச் சேர்ந்த ஸ்குணசேகர் ஆவார்.

வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.ரிஸ்வான் இவரை நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸார், மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-402)

## பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



கடந்த (2014.01.18) சனிக்கிழமை சிவபதமடைந்த தீர்த்தாங்குள பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தா

அமரர் சிவத்திரு **சபாபதி ஐயா சோமசுந்தரம் ஐயா**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

13.02.2014 வியாழக்கிழமை

காலை 6.00 பாஷாண உத்வாசனமும்
மு.ப.10.00 சபிண்டீகரணமும்
ந.ப 12.00 ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கொட்டியவளை, பத்தமேனி, அச்சுவேலி.
தொ.பே.021 720 0058.

(44597)
(3.6.4)

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி நவரத்தினம்



யாழ். தலையாழி, கொக்குவில் கிழகைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி நவரத்தினம் (09.02.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், நவராஜகுமரனின் பாசமிகு தாயாரும்,திருமதி குணமணி ஷண்முகடாஸ், காலஞ்சென்ற பரமசாமி மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வைரமுத்து மற்றும் பாலசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான சீதாலட்சுமி, இராசலட்சுமி ஆகியோரினதும், அன்னலட்சுமி, இந்திரலிங்கம் ஆகியோரினதும் மைத்துனியும், கொஸ~வேயின் அன்பு மாமியாரும்,சேயோனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.02.2014) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.6/1, பிரம்படி லேன்,
தலையாழி, கோக்குவில் கிழக்கு.
தொ.பே.: 0782095651
077 9205222

தகவல்:
ந.நவராஜகுமரன் (மகன்)
திருமதி.கு.ஷண்முகடாஸ்(சகோதரி)
க.சண்முகலிங்கம் (சகோதரர்)

(44613)
(6.6.3)




# காதலர் தினத்தில் உங்கள் காதலரை ஆச்சரியப்படுத்த...

## பரிசளியுங்கள்

# சுடர் ஒளி காதலர் சிறப்பிதழை

பெப்ரவரி 12 - 18 இதழில்...

* காதல் சிறுகதை
* காதல் கவிதைகள்
* காதல் துணுக்குகள்
* காதல் சாதனைகள்




இன்னும்பல காதல் பற்றிய புதிய விடயங்கள்

(சி/12019)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்க்கடிக்கு உள்ளாவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக் காலமாக கட்டாக் காலி மற்றும் வளர்ப்பு நாய் களால் கடிபடுவோர் எண் ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்களில் பெரும்பாலா னோர் வீதிகளில் கட்டாக்காலி யாக அலையும் நாய்களால் கடியுண்டதால் அவர்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டுள்ள தாக வைத்தியசாலை புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

வெள்ளிக்கிழமை கட்டாக்காலி நாய்களால் கடியுண்ட மந்து வில் கிழக்கைச் சேர்ந்த இரா சையா சுந்தரலிங்கம் (வயது-50), எழுதுமட்டுவாழ் தெற் கைச் சேர்ந்த சுஜிதரன் சுஜாதா (வயது-22), சாவகச்சேரி சப் பச்சி மாவடியைச் சேர்ந்த முத் துக்குமார் சரவணதாஸ் (வயது -40) ஆகியோரும் இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளனர். (வ-9)

# கரந்தாய்க் குளத்தை சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம்

### நடைமுறைப்படுத்தப்படாத நிலையில்

கிளிநொச்சி, பெப்.12

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவில் அமைந் துள்ள கரந்தாய்க் குளத்தை சுற்றுலா மையமாக உருவாக் கும் திட்டம் நடைமுறைப் படுத்தப் படாத நிலையில் காணப்படு கின்றது. இங்குள்ள குளத்தைப் புனர மைப்புச் செய்து சுற்றுலா மையமாக மாற்றுவதன் மூல மாக கரந்தாய்க் கிராமம் பெரும் முன்னேற்றம் காணு மென இங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

**வடமாகாண சபை கரந்தாய்க்குளம், வன்னோிக் குளம் ஆகிய இடங்களை சுற்றுலா மையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

வன்னேரிக்குளம் கிராமத்தி லுள்ள குளத்தையும் சுற்றுலா மையமாக மாற்றுவதெனக் கரைச்சிப் பிரதேச சபையில் தீர் மானம் மேற்கொள்ளப்பட்டபோதி லும் அதனை நடைமுறைப்படுத் துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வடமாகாண சபை கரந் தாய்க்குளம், வன்னேரிக் குளம் ஆகிய இடங்களை சுற்றுலா மையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண் டும் என இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

# புனித அந்தோனியார் றோ.க. பாட்சாலைக்கு நூல் நிலையம்

### அமைப்பதற்குத் தீர்மானம்

குருநகர், பெப்.12

பாஷையூர் புனித அந்தோனி யார் றோ.க. மகளிர் வித்தி யாலயத்தில் நூல் நிலையம் அமைக்க பாடசாலைச் சமூகம் தீர்மானித்துள்ளது.

பாஷையூர் புனித அந்தோனி யார் றோ.க. மகளிர் பாடசா லையின் இல்ல மெய்வன் மைப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்திய வித்தி யாலய அதிபர் திருமதி சி.பேரின் பம் மேற்கூறியவாறு தெரிவித் தார். பாடசாலைச் செயற்பாட் டின் முதலாவது அங்கமாக இணைப் பாடவிதானச் செயற் பாடு உள்ளது.

விளையாட்டின் மூலம் உடல், உள வலிமையை ஏற்படுத்த முடியும். விளையாட்டுப் போட்டி யில் மாணவர்கள் பங்குபற்று வதனால் ஜனநாயகத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனோ பாவம், சமூகத்தில் முன்னோ டியாகச் செயற்படும் ஆற்றல் களைப் பெற்றுக் கொள்ள லாம். பாஷையூரில் உள்ள மக் களும் நலன்விரும்பிகளும் இவ்விளையாட்டுப் போட்டி நடைபெறுவதற்கு உறுதுணை யாக இருந்துள்ளனர்.

எமது மக்கள் பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து ஆத ரவு வழங்கியுள்ளனர். எமது மாணவர்களின் வாசிப்புத் திறன் அதிகரிக்கப்பட வேண் டும் என்றார். (வ-51)

# கடற்றொழிலாளர் சமாசத்துக்கு நிரந்தரக் கட்டடம் வேண்டும்

### கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கோரிக்கை

கண்டாவளை, பெப்.12

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசத் துக்கென அதன் சொந்தக் காணியில் நிரந் தரக் கட்டடத்தை அமைக் குமாறு கடற்றொழிலா ளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது தர்மபுரத்தில் உள்ள தனியார் வீடு ஒன் றில் இயங்கி வரும் சமா சத்துக்கு புளியம் பொக்க ணையில் நிரந்தரமாகக் காணி ஒதுக்கப்பட்டுள் ளது.

இந்தக் காணியிலேயே நிரந்தரக் கட்ட டத்தை அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கடற்றொழிலாளர் சமாசத் தால் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு சமாசத் தலைவர் செ.அருமைராசா தலைமையில் இடம்பெற்றபோது மேற்கண்ட வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடற்றொழிலாளர் சமாசத்தின் கீழ் ஆயி ரத்து 800 குடும்பங்கள் உள்ளதுடன் கடற் றொழிலிலும் ஈடுபட்டு வருகின்றன. (க-18)

**Words Of Peace**

Live your life surrounded by the beauty that is within you.
This is who you are
Prem Rawat.
For details and Free dvds
Call- 0117 250001
sms. 0777 443349

**வீடு வாடகைக்குத் தேவை**

சாவகச்சேரி நகர் பகுதியில் நிறுவனம் ஒன்றில் கடமைபுரியும் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
(44615)(3.6.4) தொடர்பு: 077 610 8420

**தேவை**

உங்கள் வீடுகளில் உள்ள பழைய காகி தாதிகள், புத்தகங்கள், கொப்பிகள், பத்திரிகைகள் முதலானவற்றைப் பணம் தந்து பெற்றுக்கொள்கின்றோம்.
தொடர்பு:-077 078 9476

**கடை விற்பனைக்கு**

சுன்னாகம் சந்தியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் NDB வங்கிக்கு அரு கிலுள்ள கடை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-077 769 8158
(44619)(6.2)

**வேலை வாய்ப்பு**

பவர் ஒவ் ஜேக மனிதவள மாக்கல் பயிற்சி நிறுவனம் (மதம் சார்பானதல்ல)
பயிற்சி ஆசிரியர் தெரிவிற்கான விண்ணப்பம். முடிவுதிகதி-25.02.2014. நேர்முகத் தெரி விற்கான திகதியை 28.02.2014 உதயன் பத்திரிகையைப் பார்க்கவும். விண்ணப்பப் படிவங்களை புத்தகசாலைகளில் பெறலாம்.
தொடர்பு: 077 422 8934, 021 491 4121, 077 589 0090
(43518)(3.6.4)

**கடைகள் வாடகைக்கு**

திருநெல்வேலி சந்தைக்கு அருகில் கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0777 919160

**தேவை**

தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர் (Clerk) தேவை. (யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள்)
தொடர்பு : 077 4598440
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட **Asia Group**
இன் யாழ்ப்பாணக் கிளைக்கு
பதவி வெற்றிடங்கள்
* மேற்பார்வையாளர் * உதவி முகாமையாளர்
* முகாமையாளர்
போன்ற பதவிகளுக்கு
O/L or A/L படித்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
*தொடர்பு: 077 138 6805/077 872 9638
(44618)(45.6.3)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கணித பாட வகுப்புகள்

பளை, பெப்.12

பச்சிலைப்பள்ளி பிர தேச முன்பள்ளிக ளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கணித பாட வகுப்பு கள் பச்சிலைப் பள்ளி அபிவிருத்திச் சங்கத் தால் நடத்தப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் இயங் கும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர் கள் பலர் ஜி.சீ.ஈ. சாதா ரண தரப் பரீட்சையில் கணித பாடம் சித்தி யடையாததால் அவர் கள் டிப்ளோமா பயிற்சி நெறியில் பங்குபற்ற முடியாத நிலை காணப்பட்டது.

முன்பள்ளி ஆசிரியர் கள் விடுத்த வேண்டு கோளை அடுத்து பச் சிலைப்பள்ளி அபி விருத்திச் சங்கத் தலைவர் கு.ந.பாலச் சந்திரனின் முயற்சி யால் சங்க மண்டபத் தில் மாலைநேர கணித பாட வகுப்புகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிர தேசத்தில் இயங்கும் 32 முன்பள்ளிகளில் கற்கும் சிறார்களுக்கு சங்கத்தினால் சத் துணவு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக் கது. வ-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
adv@uthayan.com
021 567 1111

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி வாசுகி சிவசோதி அவர்களின் அன்புத் தந்தையார்

**ஐயம்பிள்ளை இராமலிங்கம்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.
(44617)(3.6.4)

**கண்ணீர் அஞ்சலி**



எமது சக மருத்துவர்கள்
**Dr.தி.சுதர்மன்** அவர்களின்
அன்புத் தந்தையும்,
**Dr.அருள்மொழி சுதர்மன்**
அவர்களின் மாமனாருமான
**நாகமுத்து தியாகராசா**
அவர்களுக்கு எமது இதய பூர்வ அஞ்சலியைச் செலுத்துவதுடன்,
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(கி/12022)(5.6.3)
நண்பர்கள் (B.S.M.S)

**மரண அறிவித்தல்**



திருமதி **தனலட்சுமி வேதாரணியம்**

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், பழைய வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி வேதாரணியம் நேற்று (11.02. 2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் வேதாரணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-மனோன்மணி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-செல்வம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி, நடேசமூர்த்தி (பெட்டா எசன்ஸ் சப்பிளயர்ஸ்), இராசலட்சுமி, சிவமூர்த்தி, காலஞ்சென்ற வரலட்சுமி (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மாவதி, நாகேஸ்வரி, குணரத்தினம், சுயதா ஆகியோரின் மைத்துனியும், சிவகுமார் (ஆஸ்தி ரேலியா), கலாவதி, மாலதி (சுவிஸ்), ஜெயக்குமார் (சுவிஸ்), ரேவதி (கனடா), தணேஸ்குமார் (தொழில் வழிகாட்டல் அதிகாரி- தீவக வலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், ராகினி (ஆஸ்திரேலியா) காலஞ் சென்ற சிவகுருநாதன், மனோகரானந்தம் (சுவிஸ்), விஜிதமாலா (சுவிஸ்), இராதாகிருஷ்னன் (கனடா), ரகஜிதா (ஆசிரியை - புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், டினேஷா, அபிலாஷ், அபிஷேக், பால்ராஜ், பானுஜா, துஷாரதன், ஆருத்திரா, ஆருஷன், அலெக்ஷன், இந்துகா, தனுஷ்கா, சானுகா, லக்ஷிகா, ஆருத்திரன், ஆரமுதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி, கோப்பாய் தெற்கு.
தொ.பே: 077 369 9103
(44625)(10.14)
தகவல்: குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

திருமதி **சரஸ்வதிப்பிள்ளை(சரஸ்வதி) கோபாலபிள்ளை**



வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி சரஸ்வதிப்பிள்ளை கோபாலபிள்ளை அவரது பிறப் பிடமான வெள்ளாம்போக்கட்டியில் 09.02.2014 ஞாயிற் றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2014) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கச்சாய் ஏறியால்பிட்டி மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கோ. கணேசமூர்த்தி - (மகன்)- 077 4481997 (கனடா)
N.லோகநாதன் (மருமகன் உதவிக் கல்விப் பணிப்பாளர்)
வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம். (44616)(2.6.3)

**மரண அறிவித்தல்**



**இராசமலர் தம்பிஜயா**

நக்காறோட் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட தம்பிஜயா இராசமலர் நேற்று முன்தினம் (10.02.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - தங்கச்சிஅம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் கனகமலர் காலஞ்சென்ற ஜெயராஜா மற்றும் தெய்வேந்திரம் காலஞ்சென்ற யோகமலர் மற்றும் றஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.02.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நக்கா றோட்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதையை அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கனரக வாகனங்கள் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் கொங்கிறீற் சிலிப்பர் சட்டங்கள் யாழ்.ரயில் நிலையப் பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டு வருகின்றன. (ஒ-135)

# சின்ன வெங்காய விலை வீழ்ச்சி வெங்காயப் பூவுக்குக் கிராக்கி

## பம்பாய் வெங்காயத்தின் விலை குறைவடைந்தமையே காரணம்

அச்சுவேலி, பெப்.12

சின்ன வெங்காயத்தின் விலை குடாநாட்டில் தற்போது குறை வடைந்துள்ளது.

கடந்த மாதங்களில் கிலோ 280 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் தற்போது கிலோ 100 ரூபாவுக்கு கீழ் குறைவடைந்துள்ளது. வெங்காயப்பூ கிலோ 120 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது.

குடாநாட்டின் சின்ன வெங்காயத்தின் அறுவடை ஆரம்பமாகி இருப்பதும் பம்பாய் வெங்காயத்தின் விலை குறைவடைந்திருப்பதும் தான் சின்ன வெங்காயத்தின் விலை குறைவடையக் காரணம் என்று கூறப்படுகின்றது.

பம்பாய் வெங்காயம் கிலோ 70 ரூபாவுக்கு கீழ் விற்பனை செய்யப்படுகின்றது. சின்ன வெங்காயம் அளவுக்கு அதிகமான விலைக்கு விற்பனை செய்யப்பட்டதோடு தட்டுப்பாடாகவும் இருந்தது. இதனால் பம்பாய் வெங்காயத்துக்கு மவுசு ஏற்பட்டது.

இதனால் யாழ்ப்பாணத்து சின்ன வெங்காயத்தின் பாவனை உள்ளூரில் குறைந்துள்ளது.

காலபோக வெங்காய அறுவடை ஆரம்பித்திருப்பதால் உள்ளூர் சந்தைகளில் சின்ன வெங்காயம் தாராளமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உள்ளூர் வெங்காய வகையைச் சேர்ந்த வேதாள வெங்காயம், வல்லாரை வெங்காயம், பெரிய வேதாளம் மற்றும் சின்ன வெங்காயம் என உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காய வகைகள் கிலோ 100 ரூபாவுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இதேவேளை, வெங்காயத்தின் விலை உள்ளூரில் குறைவடைந்துள்ள போதிலும் வெங்காயப்பூவின் விலை குறைவடையவில்லை. வெங்காயப்பூ உள்ளூர் சந்தைகளிலேயே 120 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது.

வெங்காயப்பூ காலநிலை முரண்பாட்டால் உரிய அளவில் வளராமல் இருப்பதும் அறுவடை செய்யப்படும் வெங்காயப் பூவில் பெரும் பகுதி வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதும் தான் வெங்காயப்பூவின் விலை உயர்வுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. (வ-11)

## திருவையாறில் பொதுமண்டபம்

திருவையாறு முதலாம் யூனிற் பகுதியில் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. சுமார் 28 லட்சம் ரூபா செலவில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை திருவையாறு கிராமத்திலுள்ள வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

சுமார் 102 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் உள்ள வீதிகள் யாவும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன.

கிளிநொச்சி கிழக்கிலுள்ள விவசாய உற்பத்திக் கிராமமாக திருவையாறு விளங்கி வருகின்றது. (க-18)

## INVITATION

**UDUVIL GIRLS' COLLEGE INVITES**

Parents and well wishers
to its
Annual Inter - House Sports Meet
On
Thursday, February 13, 2014, 1.00 p.m

Principal Staff & Students

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 26 . 11 . 1926



உதிர்வு 13 . 01 . 2014

**அமரர் பரமநாதர் மனோன்மணி**

கடந்த 13.01.2014 அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (12.02.2014) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறும். அன்னாரின் மறைவின் போது எம்முடன் இருந்து எமது துயரில் பங்கு கொண்டு சகலவழிகளிலும் எம்மை ஆற்றுப்படுத்திய அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நி.முகவரி - மறவன்புலோ மத்தி சாவகச்சேரி
த.முகவரி - சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி
தொ.இல. 077 6161736

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி **சின்னத்தங்கச்சி நாகரத்தினம்**



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கச்சி நாகரத்தினம் 10.02.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு நாகரத்தினத்தின் அன்பு மனைவியும், ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கதிரவேலு-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, தம்பிப்பிள்ளை, சுப்பிரமணியம், இராசையா, சுந்தரம், அன்னம்மா, வெற்றிவேலு (பொன்னுத்துரை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சின்னாச்சிப் பிள்ளையின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.02.2014) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.38, புகையிரத வீதி,
கிழக்கு ஒழுங்கை. அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(C/12023) (10.14)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:- 10 . 04 . 1930

மறைவு :- 25 . 01 . 2013

12.02.2014

**சின்னையா துரைராசா**

குடும்பம் என்ற விருட்சத்தின் ஆணி வேராய்
என்றென்றும் எம் இதயத்தின் அன்பு அப்பாவே!
மறைந்து ஆண்டொன்று சென்றது அப்பா
பரிவும், பாசமும் காட்டி
நற் பண்புகள் கற்றுத் தந்து
நல்வழிகாட்டி எம்மை
உயரவைத்த அப்பாவின்
ஆத்மா இறையடியில் சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்.

கே. கே. எஸ் வீதி, இணுவில் மேற்கு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தயானந்தன் விஜியசாதனா

புதுக்குடியிருப்பு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தயானந்தன் விஜியசாதனா, தயானந்தன் யர்சிகா ஆகியோர் நேற்று (11.02.2014) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2014) புதன்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவர்களது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



தயானந்தன் யர்சிகா

2 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் விளைவித்தவருக்கு 7 வருடங்கள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், பெப் 12

8 வருடங்களுக்கு முன்னர் புலோலியில் ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்தியவருக்கு யாழ்.மேல்நீதிமன்று 7 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

புலோலி கிழக்கு சந்தாதோட்டம் பகுதியில் 2006 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த சித்திரதாசன் உதயசுதன் (வயது -31) என்பவரே உயிரிழந்தார். அவர் மண்வெட்டியால் தலையில் தாக்கப்பட்டு உயிரிழுந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்தது.

அவருக்கு மரணம் விளைவித்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த நடராசா வேலுச்சாமி என்பவர் கைது செய்யப்பட்டுப் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. அந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு பரிசீலனை செய்யப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றுக்கு விசாரணைக்காகப் பாரப்படுத்தப்பட்டது. மேல் நீதிமன்றில் அந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டு சந்தேகநபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

இதனையடுத்து அவருக்குத் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது. அதன்படி அவர் ஐந்தரை வருடங்கள் விளக்கமறியலில் இருந்ததைக் கருத்தில் கொண்டு அவருக்கு 7 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது மேல்நீதிமன்றம். (த-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாங்குளத்தில்

இதில் கோண்டாவிலைச் சேர்ந்தவர்களான துசிகரன் பதுமன் (வயது-5), துசிகரன் யஸ்மிதா (வயது 7), சோதிலிங்கம் மிதீபன் (வயது-35) (ஜேர்மனில் இருந்து வந்திருந்தவர்), சின்னத்துரை சிவனேசன் (வயது 42), சின்னத்துரை பரமேஸ்வரி (வயது 70) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் அடையாலம் காண முடியாதவாறு மோசமாக உருக்குலைந்த நிலையில் காணப்பட்டன. மண்டைகள் பிளந்து மூளை வெளியேறிய நிலையில் சடலங்கள் சிதைவடைந்து இருந்ததாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் துசிகரன் சர்மிளா (வயது 32), சிவனேசன் [illegible]ந்தூரி (வயது 12), சிவனேசன் கபினா (வயது 8), ஜெயக்குமார் தயாநிதி (வயது 53), சோதிலிங்கம் றஜீபன் (வயது 38)(ஜேர்மனில் இருந்து வந்திருந்தவர்), சிவனேசன் தர்மினா (வயது 31) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த விபத்துடன் தொடர்புடைய ஹைஏஸ் வாகனச் சாரதி சரணடைந்துள்ளார் என்றும் வாகனம் மிகமோசமாகச் சேதமடைந்துள்ளது என்றும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் [illegible]றித்து மேலும் தெரியவருவதாவது:-

கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவரின் திருமணம் கொழும்பு வெள்ளவத்தை யில் கடந்த வாரம் நடைபெற்றது. அதில் பங்குகொள்வதற்கென ஜேர்மனியில் வசிக்கும் சகோதரர்களான இருவர் கொழும்புக்கு வந்துள்ளனர். கொழும்பில் நடைபெற்ற திருமணத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் 2 சிறுவர்கள் உட்பட 9 பேர் வாகனத்தில் கொழும்புக்குச் சென்றிருந்தனர்.

அவர்களை ஏற்றிச் சென்ற வாகனம் வேறு சிலரை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிவிட்டது. திருமணம் நிறைவடைந்த பின்னர் இங்கிருந்து சென்ற 9 பேரும் ஜேர்மனியிலிருந்து கொழும்பு வந்திருந்த 2 பேருமாக 11 பேர் கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் நோக்கி ஹைஏஸ் வாகனத்தில் புறப்பட்டனர்.

இவர்கள் பயணித்த வாகனம் நேற்று அதிகாலை 3.15 மணியளவில் மாங்குளத்தில் வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதனால் அதில் பயணித்தவர்களில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழுந்தனர். 6 பேர் மோசமான காயங்களுக்கு உள்ளானார்கள். காயமடைந்தவர்கள் அனைவரும் உடனடியாகக் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்த மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-4-18-55)

### நேற்று

ருவர் படுகாயமடைந்தார்.

கைவேலி புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஆனந்தன் விஜயசாதனா (வயது-28), ஆனந்தன் யஜர்சிகா (வயது-3) ஆகியோரே சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலை ஆசிரியையான ராதா (வயது-28) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

உடையார்கட்டு நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் உடையார் கட்டிலிருந்து கைவேலி நோக்கிப் பயணித்த வாகனமும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அத்துடன் பின்னால் இருந்து பயணித்த ஆசிரியை ஒருவர் படுகாயமடைந்தார்.

உயிரிழந்த இருவரினதும் சடலங்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. வாகனத்தின் சாரதியைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் வாகனத்தையும் தடுத்து வைத்துள்ளனர். (த-4-18-55)

### இராணுவப்

ளூர் பெண்கள் உரிமை மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் காணொலி மூலம் கலந்துரையாடல் நடத்தினார்.

போருக்குப் பிந்திய சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும், வடக்கில் இராணுவ மயப் படுத்தப்பட்டுள்ள சூழல், போரினால் வாழ்க்கைத் துணையை இழந்த பெண்களின் வாழ்வாதாரத்துக்கு காத்திரமான உதவிகளை வழங்குதல், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அதிகரித்துள்ள வீட்டு வன்முறைகளில் இருந்து பெண்களைப் பாதுகாத்தல் என்பன குறித்து இதன் போது யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பெண்கள் அமைப்புக்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் பின்னர் பதிலளித்த ருசெல், இலங்கையை விமர்சிப்பதற்காகவே தான் அங்கு பயணம் செய்யவிருந்ததாகச் சிலர் எண்ணுவதாகவும், ஆனால் தனது நோக்கம் அதுவல்ல என்றும் கூறியுள்ளார்.

**உதவி செய்யத் தயாராக உள்ளோம்**

இலங்கைக்கு உதவுவதில் அமெரிக்கா இன்னமும் உறுதியாக உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் பெண்களின் நல்வாழ்வுக்காக 40 மில்லியன் டொலர் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டு அது தொடர்பான திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

பெண்களின் முழுமையான பங்களிப்பின் மூலமே உலக அமைதி, செழுமை, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை அடைய முடியும் என்ற ஒபாமா நிர்வாகத்தின் செய்தியை தனது பயணத்தின் மூலம் எடுத்துக் கூறுவதாக ருஷெல் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தனது இலங்கைப் பயணத்தின் போது, ஊழல்கள் மலிந்து போயிருப்பது, தண்டனை விதிக்கப்படாமை ஆகியன குறித்துக் கவலைகளை வெளிக்காட்டியிருந்தார். இது பெண்களின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கத்தரின் ருசெல் மேலும் கூறினார்.

**சட்டத்தின் ஆட்சி பலவீனம்**

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி பலவீனப்பட்டுள்ளமை, பாலியல் தொடர்பான வன்முறை வழக்குகளில் நீதி வழங் கப்படுவதில் உள்ள குறைபாடுகள், பாலியல் வன்முறை மற்றும் பாலியல் வன்புணர்வு வழக்குகள் இழுத்தடிக்கப்படுகின்றமை குறித்தும் கவலை வெளியிட்டுள்ள அவர், சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான பலமான திட்டம் இலங்கையால் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறைகள் அதிகரித்திருப்பது குறித்து நாம் ஆழமான கவலை கொண்டுள்ளோம்' என்றும் ருசெல் தெரிவித்துள்ளார். (த-5)

### சுவர்

(வயது -23) என்பவரே உயிரிழந்தவராவார்.

சுவர் விழுந்தமையால் படுகாயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர், அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் சிறிது நேரத்தில் அவர் உயிரிழந்தார். சடலம் தற்போது வைத்தியசாலை பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4)

### தனித்

யிலும், இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற இனப் படுகொலைக்கு இன்னும் சர்வதேச சமூகம் நீதி வழங்கவில்லை. இன்றும் கூட சரியான விசாரணை நடத்தப்பட்டு, அவர்களின் துன்பங்கள் வெளியுலகத்துக்குக் கொண்டு வரப்பட வில்லை.

இவ்வாறானதொரு நிலையில் சுதந்திர தமிழீழத்துக்கான வாக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபை நடத்தவேண்டும் எனக் கோரியும், ஈழத்தில் நடந்தேறிய இனப்படுகொலை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரியும் இன்று புதன்கிழமை இந்த முற்றுகைப் பேரணி முன்னெடுக்கவுள்ளதாக மே 17 இயக்கம் அறிவித்துள்ளது.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்துக்கு முன்பாக இன்று தமிழின உணர்வாளர்களை அணிதிரளுமாறு மே 17 இயக்கம் அறைகூவல் விடுத்துள்ளது. (த-5)

### 59

ஆவது தடவையாக நேற்று செவ்வாய்க்கிழமை புதைகுழி தோண்டப்பட்டது.

இதன்போது ஒரு மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டது. ஒரு தொகுதி மனித எச்சங்கள் அங்கு கண்டுபிடிக்கப்பட்டன. நேற்றுடன் சேர்த்து இதுவரை 59 மனித எலும்புக் கூடுகள் இந்தப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இது வரை 33 எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இன்று புதன்கிழமையும் அகழ்வுப்பணிகள் இடம்பெறும். (த-56)

### தமிழர்

லர் ஹஓலியாங் -ஸு உடனான சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே வடக்கு முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஐ.நா. உதவிச் செயலருடனான சந்திப்பில் என்ன விடயங்கள் ஆராயப்பட்டன என்று வடக்கு முதலமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளித்த வடக்கு முதல்வர்,

முதலில் எங்களின் தேவைகள் என்ன என்பதனை அறிய வேண்டும். அந்தத் தேவைகளை அறிவதற்கு எங் களுக்குச் சிரமங்கள் இருக்கின்றன. அரச திணைக்களங்கள் இதுவரை காலமும் வடக்கில் திரட்டிய தகவல்களை எங்களுக்குத் தர மறுக்கின்றன. அது எங்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. அந்தத் தரவுகளை தருவதற்கு அவர்கள் ஒத்துழைக்கின்றார்கள் இல்லை என்று ஐ.நா பிரதிச் செயலருக்கு எடுத்துரைத்தோம்.

இனிமேல் அவ்வாறு இருக்காது. அவர்கள் உங்களுக்கு எல்லாத் தரவுகளையும் தருவார்கள். நல்லதே நடக்கும் என்று ஐ.நா உதவிச் செயலர் பதிலளித்தார்.

இதேவேளை, மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்புடன்தான் தமிழர்கள் முன்னேறமுடியும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளதாக முதலமைச்சர் குறிப்பிட்டார். (த-5)

### காணாமற் போனோரின்

நிலையத்துக்கு அழைக்கப்பட்டுத் தொடர்ந்தும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று தெரிய வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதம் காணாமற்போனோரின் உறவுகளின் வீடுகளுக்குச் சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், காணாமற் போனோர் தொடர்பிலான விவரங்களைப் பெற்றுள்ளனர். அத்துடன் பல்வேறு கேள்விகளையும் உறவினர்களிடம் கேட்டுள்ளனர்.

இறுதியில் தனிச் சிங்கள மொழியிலான படிவத்தைப் பூரணப்படுத்திக் கொடுத்து, காணாமற்போனோரின் உறவினர்களிடம் கையெழுத்து வாங்கிச் சென்றுள்ளனர். காணாமற்போனோரின் உறவுகள் தமக்கு ஏதாவது நடந்து விடலாம் என்ற அச்சம் காரணமாக என்ன, ஏது என்ற கேள்வி இன்றிச் சிங்களப் படிவத்தில் கையெழுத்து இட்டதாகத் தெரிவித்தனர்.

இதன் பின்னர் இந்த வருடம் தைப்பொங்கலன்று, இவ்வாறு பதிவுகள் மேற்கொண்ட வீடுகளுக்குத் தொலை பேசியூடாகத் தொடர்பு கொண்ட கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், கிளிநொச்சியில் இடம்பெறும் தமது உதவி வழங்கும் நிகழ்வுக்கு வருமாறு கூரியுள்ளனர். கடந்த ஜனவரி 17 ஆம், 18 ஆம் திகதிகளில் காணாமற்போனோரின் உறவுகளின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்ற அவர்கள், சிறு துண்டு ஒன்றைக் கொடுத்து குறித்த உதவி வழங்கும் நிகழ்வுக்கு வருமாறு வற்புறுத்தியுள்ளனர் என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

அவ்வாறு குறித்த நிகழ்வுக்குச் செல்லாதவர்களைக் கடந்த 3 ஆம், 4 ஆம் திகதிகளில் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்ட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு வருமாறு அழைத்துள்ளனர். அங்கு காணாமற்போனவர் தொடர்பிலான தகவல்களை மீண்டும் கேட்டுப் பதிவு செய்துள்ளனர் எனவும் ,அதன் பின்னர் படிவம் ஒன்றைத் தமிழில் நிரப்பிக் கையொப்பத்தை வாங்கிவிட்டு விசாரணை முடிந்தது என்று கூறித் திருப்பியனுப்பியுள்ளனர் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழு அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றநிலையில், அதற்குச் சமாந்தரமாக மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் இந்த நடவடிக்கைகள் காணாமற்போனோரின் உறவுகளை குழப்பமடையச் செய்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-5-426)

### தெல்லிப்பழையில்

வர்த்தகர்கள் முடிவெடுத்துள்ளதாகத் தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.நந்தகுமார் நேற்று தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தெல்லிப்பழை சுகாதார வைத் திய அதிகாரி பணிமனையில் 75 க்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் இந்த முடிவை எடுத்ததாக அவர் மேலும் கூறினார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் புகைத்தல் பொருள்கள் விற் பனை செய்வதை நிறுத்தும் செயற்பாட்டை சமூக நன்மை கருதிச் சில வர்த்தகர்கள் நிரந்தரமாக நிறுத்துவதற்கு முடிவு செய்துள்ளதாக வும் வைத்திய அதிகாரி எஸ்.நந்தகுமார் குறிப்பிட்டார்.

புகைத்தல் நடவடிக்கையில் யாழ்.மாவட்டம் முதலாம் இடத்தில் உள்ளதாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கைத் தேசிய போதைப் பொருள் புகைத்தலுக்கு எதிரான அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பைத் தொடர்ந்து இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. இதனடிப்படையில் முதலாம் இடத்தில் யாழ்.மாவட்டமும் இரண்டாம் இடத்தில் கொழும்பு மாவட்டமும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இங்கு புகைத்தல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே வர்த்தகர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-86)

### புலிச்

மான அஜித் ரோஹண தெரிவிக்கையில்,

குறித்த சந்தேகநபர் மலேசியாவுக்குச் செல்லமுற்பட்ட போதே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவித்தார்.

சிவராசா சுதாகரன் என்ற நபரே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

இதேவேளை, கனடாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக வெளிநாடுகளில் பணம் சேகரிப்பில் ஈடுபட்டவர் என்ற சந்தேகத்திலேயே குறித்த நபர் கைது செய் யப்பட்டுள்ளார். ஜெயகுமரன் முனீஸ்வரகுமாரன் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவரும் பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரங்கன் ஹட்ரிக் கோல் வென்றது பருத்தித்துறை லீக்

யாழ்ப்பாணம், பெப்.12
சாரங்கன் ஹட்ரிக் கோல் போட கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி.



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் லீக் அணிகளுக்கு இடையில் நடத்தும் சீனியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்அணியை எதிர்த்து கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு மோதிக் கொண்டனர்.

இதன்போது பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வீரன் சாரங்கன் 10 ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார்.

பதிலுக்குக் கிளிநொச்சி அணியும் கோல் போட முயற்சிகளை மேற்கொண்டது.

38 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணிக்குத் தண்டனை உதை கிடைத்தது. அதனை சாரங்கன் சரியான முறையில் கோலாக்கி தனது அணிக்கான இரண்டாவது கோலைப் போட்டார்.

முதற்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணியினர் கோல் போடுவதற்காக எதிரணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியின் பின்கள வீரர்கள் அந்த முயற்சிகளைத் தடுத்தனர்.

இதன்போது 18 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வீரன் காண்டீபன் மூன்றாவது கோலைப் போட்டார்.

ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடம் இருக்கையில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வீரன் சாரங்கன் மீண்டும் தனது ஹட்ரிக் கோலைப் போட்டார்.

ஆட்ட நேர முடிவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்




யாழ்ப்பாணம், பெப்.12
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வல்வைறெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை 'ஏ' விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலிவிண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

வலி.வடக்கு, பெப்.12
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக் கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம்.

மாதகல் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகம். (த-86)

## கரப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம், பெப்.12
பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூநகரி 4 ஆம் கட்டை அண்ணா வி.க. மைதானத்திலும் உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (த-23)




கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் கலந்து கொண்ட 7 கிலோ மீற்றர் தூர வீதியோட்டப் போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள். (த-51)

# ஆண்களில் துர்க்கா அணி பெண்களில் சென்.பீற்றர்ஸ்

## பளை பிரதேச எல்லேயில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.12
பளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் துர்க்கா விளையாட்டுக் கழக அணியும், பெண்கள் பிரிவில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பளை பொது விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் துர்க்கா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதிய இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (த-23)

# நவஜீவன்ஸ், கருணாகரன் வி.க இறுதி ஆட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், பெப்.12
கரவெட்டி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டங்களில் நவஜீவன்ஸ் இளைஞர் கழக அணி, கருணாகரன் இளைஞர் கழக அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.



முதலாவது அரை இறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து வாலிபர் வட்டம் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நவஜீவன்ஸ் இளைஞர் கழக அணி 2:0 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் கருணாகரன் இளைஞர் கழக அணியை எதிர்த்து சிவகுமாரன் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் 2:1 என்ற செற்கணக்கில் கருணாகரன் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# கிண்ணத்தை வென்றது சங்கானை வை.எம்.எச்.ஏ.

யாழ்ப்பாணம், பெப்.11
சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சங்கானை வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணி சம்பியன் ஆனது.



நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சங்கானை வை.எம்.எச்.ஏ.விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அது 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அ.வேந்திரன் 20 ஓட்டங்களையும் சோபன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சங்கானை வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜெயந்தன் 4 இலக்குகளையும், யோகசாந்தன் 2 இலக்குகளையும் கபில், டிலக்சன், சாந்தன் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

71 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சங்கானை வை.எம்.எச்.ஏ.விளையாட்டுக் கழக அணி 9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

**நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.**

இதில் டிலக்சன் 19 ஓட்டங்களையும், தர்சன் 21 ஓட்டங்களையும், யோகசாந் 2 ஓட்டங்களையும், சாந்தன் 6 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர். உதிரிகளாக 13 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜோதி, சோபன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர். சங்கானை வை.எம்.எச். ஏ.விளையாட்டுக் கழக அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சென்னை அணி வீரர்களுடன் குருநாத் மெய்யப்பன்.

# சென்னை சுப்பர் கிங்ஸ் தடை செய்யப்படுமா?

இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நிர்வாகத் தலைவராக இருந்த குருநாத் மெய்யப்பன் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத சூதாட்டக்காரர்களுக்குத் தகவல்களை வழங்கியமை தொடர்பான சூதாட்ட விசாரணையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகத் தலைவர் என்.ஸ்ரீநிவாசனின் மருமகன் குருநாத் மெய்யப்பன் குற்றவாளி என விசாரணைக்குழு உறுதிசெய்துள்ளது.

170 பக்கங்களைக் கொண்ட விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள, இந்திய உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மூவரடங்கிய விசாரணைக் குழு, குருநாத் மெய்யப்பன் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேலும் விசார ணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

எனினும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை, குருநாத் மெய்யப்பன் மறுத்துள்ளார்.

குருநாத் மெய்யப்பன் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தடைசெய்யப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

சுப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் நிர்வாக அதிகாரி என்ற வகையில் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அணியிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவிக்கின்றர். ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்திய சூதாட்ட மோசடி விவகாரத்தை அடுத்து, கடந்த வருடம் இந்த விசாரணைக்குழு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மோர்கன் விலகினார்




இயன் மோர்கன்

7அவது ஐ.பி.எல் ஏலம் பெங்களூரில் இன்று நடைபெறவுள்ளது. ஏலத்தில் பங்கேற்கும் வீரர்கள் பட்டியலில் இங்கிலாந்தைச் சேர்ந்த இயன் மோர்கன் பெயரும் இடம்பெற்றிருந்தது. ஆனால், திடீரென அவர் ஐ.பி.எல் போட்டியிலிருந்து விலகுவ தாக அறிவித்தார். இதை டுவிட்டரில் அவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

சமீபத்தில் இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் அணியில் இருந்து நீக்கப்பட்டதால் ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. அந்த இடத்தைப் பிடிக்க மோர்கன் முயற்சிக்கிறார். எனவே ஐ.பி.எல் போட்டியைப் புறக்கணிக்க அவர் முடிவு செய்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல் ஏலத்தில் இருந்து விலக முடிவு செய்த எனது கோரிக்கையை ஏற்றதற்கு நன்றி. இந்தத் தொடர் சிறப்பாக நடைபெற வாழ்த்துகள்' என மோர்கன் டுவிட்டரில் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு அவர் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியில் இடம்பெற்று 14 ஆட்டங்களில் 307 ஓட்டங்கள் எடுத்திருந்தார். (நி)

# இந்தியா வருகிறது பங்களாதேஷ் அணி

இந்தியாவில் முதன் முதலாக டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது பங்களாதேஷ் அணி. கடந்த 1988 முதல் இந்திய அணி பங்களாதேஷுடன் ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இருப்பினும், 2000 ஆம் ஆண்டில் தான் முதன் முறையாக டெஸ்ட் தொடரில் பங் கேற்றது. இதுவரை நடந்த நான்கு தொடர்களிலும் (7 டெஸ்ட்களில், 6இல் இந்தியா வெற்றி, 1 சமநிலை) இந்திய அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டிகள் அனைத்தும் பங்களாதேஷில் தான் நடந்தன. இதனிடையே எதிர்வரும் ஜூன் மாதம் ஒருநாள் தொடரில் பங்கேற்க பங்களாதேஷ் செல்லும் இந்திய அணி 2015, ஜூனில் டெஸ்ட், ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இதனிடையே 2016 இல் முதன் முறையாக இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரில் பங்கேற்க வருகிறது பங்களாதேஷ் அணி. 2016 இல் இந்தியாவில் நடக்கும் 20/20 உலகக் கிண்ணம், சம்பியன்ஸ் லீக் தொடருக்கும் இடையில் கிடைக்கும் நாள்களில் இந்தத் தொடர் நடக்கும்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜ்முல் ஹசன் இது பற்றிக் கூறுகையில், பெரிய அணிகளுடன் அதிக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்பது தான் முக்கிய நோக்கம். அடுத்த 7 ஆண்டுகளில் குறைந்தது 50 டெஸ்டில் விளையாடத் திட்டமிட்டுள்ளோம். இவற்றில் வெற்றி பெறும் பட்சத்தில், தரவரிசையில் முன் னேற்றம் அடையலாம்," என்றார்.

சமீபத்தில் முடிந்த டுபாய் ஐ.சி.சி., கூட்டத் தில் புதிய திட்டத்தை இலங்கை, பாகிஸ் தான், தென் னாபிரிக்காவுடன் இணைந்து பங்களாதேஷும் எதிர்த்தது. அடுத்து சிங் கப்பூர் கூட்டத்தில் தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் அணிகள் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் திட்டத்துக்கு ஆத ரவு தெரிவித்தன. இதன் பயனாகத்தான், இந்திய அணியுடன் விளையாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (நி)




அணித் தலைவருடன் பங்களாதேஷ் வீரர்கள்

# ஷூமாக்கர் இறந்து விட்டாரா?



மைக்கல் ஷூமாக்கர்

பார்முலா-1 கார் பந்தய வீரர் மைக்கல் ஷூமாக்கர் இறந்து விட்டதாக வந்த தகவலில் உண்மையில்லை என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பார்முலா -1 கார் பந்தய வீரரான மைக்கேல் ஷூமாக்கர், கடந்தாண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி பிரான்சில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாராதவிதமாக விபத்து ஏற்பட்டது.

இதில் அவரது தலையில் பலத்த காயமேற்பட்டதால், தற்போது பிரான்சில் உள்ள கிர னோபல் பல்கலைக்கழக மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோமா நிலையில் இருக்கும் ஷூமாக்கருக்கு, மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்ற னர். இந்நிலையில் இவர் இறந்துவிட்டதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியானதால், ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதையடுத்து ஷூமாக்கர் இறக்கவில்லை என்றும், அவ்வாறு பரவிய தகவல் வெறும் வதந்தி என்றும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (நி)

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் அதிரடிப் பதவி நீக்கம்

நிதி மோசடி தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸகா அஷ்ரவ் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். கிரிக்கெட் தொடர்பில் பாகிஸ்தானின் நிலைப்பாடுகளை தவறாக புரிந்து கொண்டமை மற்றும் நிதியைத் தவறாகக் கையாண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து ஸகா அஷ்ரவை உடனடியாக தலைவர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்த நாட்டுப் பிரதமர் நவாஸ் ஷெரிப் உத்தரவிட்டுள்ளார். இதேவேளை சர்வதேச கிரிக்கெட் சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பில் நவாஷ் ஷெரீப்புடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே ஸகா அஷ்ரப் நீக்கப் பட்டிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)



ஸகா அஷ்ரவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின் தடை நீங்கியது

இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் மீதான தடையை சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் விலக்கியுள்ளது. இதன் மூலம் ஒலிம்பிக் சம்மேளனத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் இந்தியா பங்குபெற மீண்டும் வழி ஏற்பட்டுள்ளது

கடந்த 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதை அடுத்து, தற்போது சோச்சியில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டி அரங்குகளில் இந்தியக் கொடி மீண்டும் பறக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் இந்திய வீரர்கள் இதுவரை ஒலிம்பிக் கொடியின் கீழேயே பங்குபெற்றனர்.

அதேபோல சோச்சிப் போட்டிகளிலும் இந்தியக் குழுவினர் பதக்கம் வெல்வார்களாயின் அரங்கில் இந்திய தேசியக் கொடி ஏற்றப்படும்.

நிறைவு விழாவிலும் இந்தியர்கள் தமது தேசியக் கொடியை ஏந்திவர முடியும்.

ஊழல் புரிந்தார்கள் எனும் குற்றச் சாட்டுக்கு ஆளாகியுள்ளவர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கப் பொறுப்புகளில் இருக்கிறார்கள், இந்திய அரசு ஒலிம்பிக் சங்கச் செயற்பாடுகளில் தலையிடுகிறது என்று கூறி இந்திய ஒலிம்பிக் சங்கத்தை சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் இடைநீக்கியிருந்தது.

எனினும் கடந்த ஞாயிறன்று, சர்வதேச ஒலிம்பிக் சங்கப் பார்வையாளர்கள் முன்னிலையில், இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கு தேர்தல் நடைபெற்று, தலைவர் மற்றும் பொதுச் செயலர் போட்டியின்றி தேர்தெடுக்கப்பட்டனர்.

இதையடுத்து அத்தேர்தல் முடிவுகள் சோச்சியில் இருந்த ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, ஒரு நாட்டின் ஒலிம்பிக் சங்கத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை

எனினும் இந்திய விளையாட்டு அமைச்சகம் விதித்திருந்த சில நெறிமுறைகள் குறித்து இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பது இதுவரை வெளியாகவில்லை.

(த-400)




PEPSI IPL

## திட்டமிட்டபடி ஐ.பி.எல் ஏலம்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் குருநாத் மெய்யப்பன் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாக நீதிபதி முகுல் குழு உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. இருப்பினும், திட்டமிட்டபடி 7ஆவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலம் நடைபெறும். இதில் எந்த மாற்றமும் இல்லை என, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்தார்.

இது குறித்து, ஐ.பி.எல் முன்னாள் தலைவரான சுக்லா மேலும் தெரிவித்ததாவது:

ஐ.பி.எல் ஏலம் நடைபெறுவதற்கு உயர் நீதிமன்றம் தடை விதிக்காதது நல்ல விடயம். திட்டமிட்டபடி பெங்களூரில் இன்றும் நாளையும் ஐ.பி.எல் ஏலம் நடைபெறும். உயர்நீதிமன்றம்தான் எல்லாவற்றுக்கும் மேலான நீதிமன்றம். இந்த ஏலம் குறித்து உயர் நீதிமன்றம் சில கருத்துகளைத் தெரிவிக்கும். அதுவரை காத்திருக்க வேண்டும் என்று ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார். (த)

## அடிதடியில் இறங்கிய நியூசிலாந்து வீரர்



ஒக்லாந்தில் நடந்த முதலாவது டெஸ்டில் நியூசிலாந்து அணி 40 ஓட்ட வித்தியாசத்தில் இந்தியாவை தோற்கடித்து தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த டெஸ்டுக்கான நியூசிலாந்து அணியில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் 29 வயதான ஜெஸ்சி ரைடர், 23 வயதான வேகப்பந்து வீச்சாளர் டக் பிரேஸ்வெல் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் ரைடரும், பிரேஸ்வெல்லும் அடிதடி சண்டையில் ஈடுபட்டது அம்பலமாகியுள்ளது. இவர்கள் இருவரும் ஒக்லாந்து டெஸ்ட் தொடங்குவதற்கு முதல் நாள் இரவில் அங்குள்ள மதுபானசாலை சென்று அதிகாலை மது அருந்தியதில் போதை உச்சிக்கு ஏற அவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, அது கைகலப்பில் முடிந்துள்ளது. இதில் ரைடருக்கு கையிலும், பிரேஸ்வெல்லுக்கு காலிலும் காயம் ஏற்பட்டுள்ளது இவர்களது நடத்தையை கண்டு கடும் கோபம் அடைந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் சபை இது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகிறது. விசாரணையின் போது, இருவரும் தங்களுக்குள் சண்டை போட்டதை ஒப்புக் கொண்டுள்ளனர். இதையடுத்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-400)

## ரெய்னா, இஷாந்த் சர்மா அதிரடி நீக்கம்



ஆசியக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியிலிருந்து சுரேஷ் ரெய்னா, இஷாந்த் சர்மா இரு வரும் நீக்கப்பட்டுள்ளனர்.

உலகக் கிண்ண 20/20 அணியிலும் இஷாந்த் இடம்பெறவில்லை. ஆனால் சுரேஷ் ரெய்னா இடம்பெற்றுள்ளார்.

ஆசியக் கிண்ண இந்திய அணி: டோனி, தவான், ரோகித் சர்மா, விராட் கோஹ்லி, புஜாரா, அம்பட்தி ராயுடு, அஜின்கியா ரஹானே, ஜடேஜா, அஸ்வின், புவனேஷ் குமார், மொகமட் ஷமி, வருண் ஆரோன், ஸ்டூவர்ட் பின்னி, அமித் மிஷ்ரா, ஈஷ்வர் பாண்டே.

20/20 உலகக் கிண்ண அணி: டோனி, தவான், ரோகித் சர்மா, கோஹ்லி, ரெய்னா, யுவ்ராஜ் சிங், ரஹானே, ஜடேஜா, அஸ்வின், புவனேஷ் குமார், மொகமட் ஷமி, ஸ்டூவர்ட் பின்னி, அமித் மிஷ்ரா, மோகித் ஷர்மா, வருண் ஆரோன்.

(த-400)

## சீனிவாசனுக்கு வாழ்நாள் தடை விதிக்க வேண்டும்

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சீனிவாசனுக்கு வாழ்நாள் தடை விதிக்க வேண்டும் என்று ஐ.பி.எல் முன்னாள் தலைவர் லலித் மோடி தெரிவித்துள்ளார்.

சூதாட்டத்தில் சென்னை அணியின் கௌரவ உறுப்பினரான குருநாத் மெய்யப்பனுக்கு தொடர்பிருப்பதாகத் தகவல் வெளியான பின் டுவிட்டரில் லலித் மோடி வெளியிட்ட பதிவுகளில் கூறப்பட்டுள்ளதாவது:-

சென்னை அணி தொடர்பாக நான் ஏற்கனவே தெரிவித்த கருத்தை நீதிபதி முகுல் தலைமையிலான விசாரணைக்குழுவின் அறிக்கை உறுதிப் படுத்தியிருப்பது மகிழ்ச்சி. அறிக்கையின் முழு வடிவத்தைப் படித்த பின்னரே கருத்து தெரிவிக்கப்படும். இருப்பினும், சென்னை அணியின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதிப்படுத்தப்பட்டால் சட்டப்படி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். சூதாட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்நாள் தடை விதிக்க வேண்டும்.

இந்த அறிக்கையின் மூலம் உலகக் கிரிக்கெட்டை ஆள நினைத்த சீனிவாசனின் 2 நாள் வெற்றிவிரைவிலேயே முடிவுக்கு வந்தது. கிரிக்கெட் ஸ்தாபனம் விழித்துக் கொள்ள வேண்டும். சர்வதேச கிரிக்கெட்டை ஆள நினைத்த இந்தியா சிமெண்ட் நிறுவனத்தின் அணிக்கு முடிவு கட்டவேண்டிய நேரம் இது.

**தென்னிந்திய யாத்திரை**
**ஆரம்பம்:- 01.03.2014**
**நிறைவு :- 13.03.2014**

திருச்சி, திருப்பதி, மதுரை, இராமேஸ்வரம், 9 நவக்கிரகக் கோயில், மேல்மருவத்தூர், கும்பகோணம், தஞ்சாவூர், பஞ்சபூதத் தலங்கள் உட்பட 40 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம் மேலதிக விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்க

தொடர்பு:- கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
077 7680102

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

GCE (O/L) தகைமையுடன்... edexcel




BTEC National Diploma in
**Engineering**

International Engineering Foundation (IEF)

- GCE (A/L) இல் கணிதப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு தகைமை இன்றி GCE (O/L) தகைமையுடன் Engineering பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அவசியமான தகைமையினை இப்பாடநெறி வழங்குகின்றது.
- Engineering துறையில் அதிகரித்து வரும் உயர் தொழில் வாய்ப்புகளை விரைவாக அடைந்து கொள்வதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி.
- 10 மாதகால துரித பாடநெறியை BCAS Campus இன் யாழ் வளாகத்தில் பூர்த்தி செய்து இலங்கையில் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் நீங்கள் விரும்பும் துறைகளில் Engineering பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அனுமதிகளை இப்பாடநெறி உத்தரவாதப்படுத்துகிறது.

Enroll now and fast track your career in Engineering.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
15 YEARS
ISO 9001:2008 CERTIFIED
Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

**வீட்டுடன் கடைகள் விற்பனைக்கு**

மூளாய் பிரதான வீதி,
வட்டுக்கோட்டையில் மாடி வீட்டுடன்
கூடிய இரண்டு கடைகள் விற்பனைக்கு
தொடர்பு:-
021 320 1605, 077 1729712

**கட்டார் நாட்டில்**
**உடனடி வேலை வாய்ப்பு**

கட்டார் நாட்டிலுள்ள முன்னணி பல்கலைக்கழகத்தில்
Office boy 10 பேர் உடன் தேவை.
தகைமை: ஆங்கிலம் ஓரளவு பேசக்கூடிய ஆற்றல். (ஆங்கிலம் பேச முடியாதவர் களுக்கு Skype Interview இற்கு ஏற்ற வகையில் Two days பயிற்சி அளிக்கப்படும்)
வயது: 18-35 கைவசம் வீசா உள்ளதால் ஒரு வாரத்தில் பயணமாகலாம். அதிஉயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம்.
தொடர்புகளுக்கு: Lanka Voice
077 058 4658 (43153)(7.8.3)

**டுபாய் நாட்டில்**
**உடனடி வேலை வாய்ப்பு**

டுபாய் நாட்டிலுள்ள முன்னணி Company ஒன்றில் Mechine Operator 10 பேர் (சவர்க்காரம் / சம்போ) Tap தயாரிக்கும் நிறுவனத்தில் 5 பேர், Aluminium Factory- 5பேர், Hotel waiter 3பேர் உடன் தேவை. அதிஉயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். நாளை 13ஆம் திகதி டுபாய் நாட்டவர்களால் காலை 9.00-2.00 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும். பதிவுகளுக்கு முந்துங்கள். (43152) (7.8.3)
தொடர்புகளுக்கு: LankaVoice
077 058 4658, 077 666 0250

**புறொயிலர் விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக் கோழி
மொத்தமாகவும், சில்லறையாகவும்
விற்பனைக்குண்டு. வேண்டிய
நிறைகளில் சுத்தம் செய்து
பெற்றுக்கொள்ளலாம்.
வீனஸ் பாம்
முத்துத்தம்பி மகாவித்தியாலயம் வடக்குலேன்,
திருநெல்வேலி 077 844 8300

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய சொந்த வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படுகின்ற அனுபவங்களால் மட்டுமல்ல பிறருடைய அனுபவங்களாலும் பாடம் கற்கும் பிராணி மனிதன் ஒருவனே
-டெனிக்லான்.

# புதன் பொய்கை A

உதயன் | பெப்ரவரி 12 2014 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# பிறருக்கு உதவுவது உயர்ந்த குணம்

ராஜராஜன்




பிறருக்கு உதவி செய்யும் பண்பு மனிதர்களிடையே மெல்ல மெல்ல அருகி வருவதைக் காண முடிகின்றது. சிலர் இதையொரு உபத்திரவமாகவே பார்க்கின்றனர். மற்றவர்கள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும். எமக்கு அவர்களுக்கு உதவுவதில் என்ன இலாபம் கிடைக்கும் என இலாப நட்டக் கணக்குப் பார்ப்பவர்களும் எம்மிடையே உண்டு. தனது குடும்பம், தனது சுகம் என ஒரு குறுகிய வட்டத்தை அமைத்து அதனுள் வாழ்கின்ற சுயநலப் போக்குத்தான் இன்றைய மனிதர்களிடத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை இல்லாமற் போய்விட்டது. இந்த நிலை நீடிக்குமானால் மனிதர்கள் தனிமைப்படுத்தப்படும் அவல நிலை உருவாகி விடும்.

முற்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் கல்வி அறிவு குறைந்தவர்களாகவும், பண்பாடுகளைக் கொண்டிராதவர்களாகவும் காணப்பட்ட போதிலும் அவர்களிடத்தில் மனிதாபிமானம் நிறையவே காணப்பட்டது. மிருகத்தை ஒத்த குணவியல்புகளும் அவர்களிடத்தில் காணப்பட்டன. கொடிய மிருகங்களை எதிர்த்து நிற்கக் கூடிய உடற் பலமும், மனோதிடமும் நிறையவே அவர்களிடத்தில் நிறைந்திருந்தன. ஆனால் கடினமான அவர்களின் இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் மனிதாபிமானம் செத்து விடாமல் இருந்து வந்தது. காடுகளையே தமது வசிப்பிடங்களாகக் கொண்டிருந்த அவர்கள் அடிக்கடி கொடிய மிருகங்களை எதிர்கொண்டனர். அவற்றினால் யாரோ ஒருவன் தாக்குண்டு அவலக் குரல் எழுப்பும்



போது ஏனையவர்கள் அங்கு விரைந்து சென்று அந்த மிருகங்களுடன் போராடுவார்கள், சிலர் சாவைத் தழுவவும் கூடும். ஆனால் தமது செயலிலிருந்து அவர்கள் பின்வாங்கவே மாட்டார்கள். இது அன்று வாழ்ந்த மனிதனின் மனிதாபிமானத்தை துலாம்பரமாக எடுத்துக் காட்ட வல்ல உதாரணமாகும். ஆனால் இன்றைய மனிதர்கள் இந்த உயர்ந்த குணத்தை இழந்து நிற்கின்றனர். ஒரு சிலரிடம் இது நிறைந்து காணப்பட்டாலும் மற்றவர்கள் என்ன கூறுவார்களோ என்ற அச்சத்தில் ஒதுங்கி நிற்கின்றனர். இன்று வீதிகள் நவீன முறையில் புனரமைக்கப்பட்டுக் காணப்படுகின்றன. அவற்றில் பயணிக்கும் வாகனங்களுக்கும் குறைவில்லை. மனிதர்களை விட வாகனங்கள் அதிகம் என்று கூடக் கூறலாம். இவற்றின் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப விபத்துக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. தினமும் ஏதோ ஒரு வீதியில் விபத்து ஏற்படுவ தாக அறிகின்றோம். இதில் சிக்குண்டு அதிகளவில் இரத்தம் வெளியேறுவதன் காரணமாகவே பலர் சாவைத் தழுவிக் கொள்கின்றனர். இவர்கள் விபத்து ஏற்பட்ட உடனேயே மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படுவார்களாயின் தப்பிப் பிழைப்பதற்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால் இது நடைபெறுவதில்லை. விபத்து ஏற்படும் இடத்தில் குழுமி நிற்பவர்கள் சம்பவத்தை வேடிக்கை பார்ப்பதில் தமது கவனத்தைச் செலுத்தும் அளவுக்கு விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடுபவர்களைக் காப்பாற்றுவதில் அக்கறை காண்பிப்பதில்லை. நமக்கு ஏன் வீண் வம்பு என அவர்கள் நினைப்பதால் வேடிக்கை பார்த்து விட்டு அந்த இடத்தை விட்டுச் சென்று விடுகின்றனர். இதனால் அநியாயமான வகையில் உயிரிழப்புக்கள் நிகழ்ந்து வருகின்றன.

தமது இனத்தைச் சேர்ந்த ஒருவன் சாவைத் தழுவும் போது கூட இரங்காத இத்தகையவர்களின் இதயங்கள் கற்பாறைக்குச் சமனானவை. இவற்றிலிருந்து சிறியதொரு நீர்க் கசிவைக் கூட நாம் எதிர்பார்க்க முடியாது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் சிக்குண்ட மக்கள் அனுபவித்த கொடுமைகளையும் எதிர்கொண்ட அழிவுகளையும் வார்த்தைகளில் சொல்ல முடியாது. ஆயிரக் கணக்கான மக்கள் சிதைக்கப்பட்ட அந்தக் கொடிய நாள்கள் தமிழர்களால் மறக்க முடியாதவை. ஆனால் இந்த அழிவுகளிலும் சுகம் கண்ட பலர் எம்மிடையே காணப்படுகின்றமைதான் இரத்தக் கண்ணீரை வரவழைக்கின்றது. அழிந்தவன் அழிந்து போக தப்பி நின்றவர்கள் காயப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெறுமதி மிக்க பொருள்களைக் கவர்ந்து கொள்வதில் குறியாக நின்றதாக நேரில் கண்ட பலர் தெரிவித்துள்ளனர். இத்தகையவர்கள், மனச்சாட்சியைக் கொன்ற இரக்கமில்லாத பிறவிகள் என்றே கூற வேண்டும். பாதிக்கப்படுபவர்களுக்கு உதவி செய்யாது விட்டாலும் பரவாயில்லை. இத்தகைய இழி செயலில் இவர்கள் ஈடுபட வேண்டுமா? நினைக்கவே இதயம் கூசுகின்றது.

தினமும் பஸ்களில் பயணம் மேற்கொள்பவர்கள் ஒரு விடயத்தைக் கவனிக்க முடியும். இளவயதினர் ஆசனங்களில் அமர்ந்திருக்க வயதானவர்களும், இயலாத நிலையில் உள்ளவர்களும் நின்றவாறு அவலப்படும் காட்சிதான் அது. முன்பெல்லாம் வயதில் பெரியவர்களைக் கண்டாலே சிறியவர்கள் எழுந்து நிற்பார்கள். இது எவரும் வற்புறுத்துவதால் நிகழ்வது அல்ல. இயற்கையாகவே இந்த உயர்ந்த குணம் இளையோரிடத்தில் காணப்படும். ஆனால் இன்று இந்த அரிய பண்பு இழக்கப்பட்டு விட்டது. வயதில் மூத்தவர்களுக்கு உதவுவது என்பது ஒருபுறம் இருக்க அவர்களுக்கு மதிப்பளிக்கவும் தெரியவில்லை. நாம் அமர்ந்திருக்கும்போது முதியவர்களும், இயலாதவர்களும் நின்றுகொண்டு அவலப்படுகின்றார்களே என்ற பரிதாப உணர்வுக்கும் எமது இளைஞர்களிடம் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இத்தகையவர்கள் எதிர்காலத்தில் மற்றவர்களை மதிக்கவும் அவர்களுக்கு உதவிசெய்யவும் முனைவார்களா என்பது சந்தேகத்துக்குரியது. "காலத்தில் செய்த உதவி ஞாலத்தில் மானப் பெரிது" என்ற சான்றோர் வாக்கு இன்று பலருக்குப் புரிவதில்லை. சான்றோர்கள் என்றால் யார், பெரியவர்கள் என்றால் யார் என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இன்றுள்ளவர்கள் காணப்படுவது வேதனையைக் கொடுக்கின்றது. இந்த நிலை தொடருமாயின் மரியாதை என்பதும், உதவும் மனப்பான்மையும் எம்மைவிட்டு வெகு தொலைவுக்குச் சென்றுவிடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் இன்று ஒருவருக்கு ஓர் உதவியைச் செய்வோமாயின் என்றோ ஒரு நாள் அதன் பிரதி பலன் எமக்குக் கிட்டியே ஆகும்.

இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும். கிருஷ்ண பரமாத்மாவுக்கு என்றோ ஒரு நாள் திரௌபதி செய்த உதவி கௌரவர் சபையிலே அவளது மானத்தைக் காத்தது. இதுவொரு கற்பனைச் சம்பவம் என்றும் சிலர் கூறலாம். ஆனால் அது மறக்க முடியாததொரு பாடமாக எமக்கு அமைந்துள்ளது. அதற்காகப் பிரதிபலன் பார்த்து உதவி செய்ய வேண்டுமென்ற அவசியம் கிடையாது. மனச்சாட்சியின் படி உதவி செய்வோம். மற்றவர்களின் துன்பத்தைப் போக்குவோம்.

சிலர் எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் வலிந்து உதவிகளைப் புரிவார்கள். இலங்கையில் இடம் பெற்ற இறுதிப் போரின்போது இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகள் இத்தகையவைதான். இதனை உதவி என்று கூடக் கூற முடியாது. மற்றவர்களை அழிப்பதற்கு உதவி செய்வது என்பதை உதவி என்ற வார்த்தைக்குள் அடங்கி விட முடியாது. ஆகவே தேவையான வேளைகளில் மற்றவர்களுக்கு நாம் புரிகின்ற உதவிகளே உயர்ந்தது. இதனை மேற்கொள்பவர்களும் உயர்வாக எண்ணுவதற்கு உரியவர்கள்.

ஆகவே எமது இயல்புக்கு ஏற்ற விதத்தில் பிறரின் துன்பங்களில் நாமும் பங்குகொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்வதற்கு முயற்சியாவது செய்ய வேண்டும். பிறரின் துன்பங்களைப் பார்த்துக் கண்டும் காணாமல் இருக்கும் இழிநிலை ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு உரியது அல்ல என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே பிறருக்கு உதவிடுவோம், உயர்வு பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கையில் வெற்றி பெற

அறிவாளி,வாய்ப்புகளை
பயன்படுத்திக் கொள்வான்.
புத்திசாலி வாய்ப்புகளை
உருவாக்கிக் கொள்வான்!
கடவுளை நம்பு!
ஆனால்,
கடவுளை மட்டுமே
நம்பிக்கொண்டு இருக்காதே!

நாளை வரப்போகும்
இன்ப துன்பம் அனைத்தும்
நேற்றில் அடங்கியது!
நாளை நமக்காக
காத்து இருக்கிறது!
சோர்வை அகற்றி
நம்பிக்கை வளர்ப்போம்!

விரும்பியதைச் செய்வது
சுதந்திரம்!
செய்வதை விரும்புவது
சந்தோசம்!
நமது தோற்றம் எதிரே
இருப்பவரின்
கண்களைக் கவரும்;
நடத்தை இதயத்தையே கவரும்.

வழியைக் கண்டுபிடி!
அல்லது
உருவாக்கு!
நாளை, நாளை என்று
எந்த ஒரு செயலையும்
ஒத்திப் போடுவது
வெற்றிக்குத் தடையாகும்!

கவலை
நாளைய துயரங்களை
அழிப்பதில்லை!
இன்றைய வலிமையை
அழித்துவிடும்!


சொர்க்கமோ, நரகமோ
நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய
இடங்கள் அல்ல;
நாமே உருவாக்கி
கொள்கிற இடங்கள்!
வீழ்வது வெட்கமல்ல....
ஆனால்,
வீழ்ந்தே கிடப்பது தான்
வெட்கம்.

துணிவுடன் வாழ்க்கையில்
எதையும் செய்-அதன்
தன்மையில் புது அர்த்தங்கள்
மலரும்!
நம்பிக்கையுள்ளவர்
ஒவ்வொரு சிரமத்திலும்
ஒரு வாய்ப்பைக் காண்கிறார்!
நம்பிக்கை இல்லாதவர்
ஒவ்வொரு வாய்ப்பிலும்
ஒரு சிரமத்தைக் காண்கின்றார்!

யாரும் உன்னைக்
குறை கூறினால்
அது உண்மையாயின்
திருத்திக் கொள்!
பொய்யாயின் நகைத்து விடு!
முயற்சிகள் தவறலாம்!
ஆனால்,
முயற்சிக்கத் தவறாதே!

முடியும் வரை முயற்சி செய்!
உன்னால் முடியும்
வரை அல்ல!
நீ நினைத்த செயல்
முடியும் வரை!

வாழ்க்கையில் நீ சந்திக்கும்
ஒவ்வெரு மனிதனும்
உனக்கு ஆசான்!
அவர்களிடம் நீ கற்றுக்கொள்
ஏதேனும் ஒன்று இருக்கும்!
முயல் வெல்லும்!
ஆமையும் வெல்லும்!
முயலாமை வெல்லாது!




# மில்லியன் கணக்கான பணத்துக்கு சொந்தக்காரனான 11 வயது ஓவியன்





பிரிட்டனின் நோர்போல்க் பகுதியைச் சேர்ந்த சிறுவனொருவன் ஓவியம் வரைவதில் திறமை படைத்தவனாகத் திகழ்கின்றான்.

11 வயதே ஆன அந்தச் சிறுவன் கடந்த வருடத்தில் தான் வரைந்த சில ஓவியங்களை 35,000 யூரோக்கள் வீதம் விற்று மில்லியன் கணக்கான பணத்துக்குச் சொந்தக்காரன் ஆகியுள்ளான்.

# கத்தரிக்காய் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது



பொதுவாகவே கத்தரிக்காயைக் குழந்தைகளும், பெரியவர்களும் விரும்புவதில்லை.

ஆனால் அதன் நன்மைகளோ அதிகம். கத்தரிக்காய் குறித்த ஆய்வு ஒன்றுக்கு அமைய அதில் நிக்கோட்டின் என்ற நச்சுப் பொருள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. ஆனால் இது உடலைப் பாதிக்கும் அளவுக்கு அதிகமாக இல்லை. அப்படியிருந்தும் ஏன் இதனை நன்மை தரும் உணவு என்று கூறுகிறோம் என்பதை ஆராய்வோம்.

ஆரோக்கியமான இதயம், உடலில் அதிகமாக சேர்ந்துள்ள கொழுப்புக்களைக் கரைக்க வல்லதாக கத்தரிக்காய் உள்ளது.

தினசரி சிறிதளவு சாப்பிடுவது கொழுப்பை மட்டுமல்ல உடலில் உள்ள இரத்த அழுத்தத்தையும் சம அளவுக்குக் கொண்டு வருகிறது. இதனால் இதய சம்பந்தமான நோய்கள் வர விடாமல் தடுக்கின்றது.

கத்தரிக்காய் சாப்பிட்டால் மூளையின் செயல் திறன் அதிகரிக்கும்.

தினசரி கத்தரிக்காயை உணவில் சேர்த்துக் கொண்டால், அது நமது உடலில் அதிகமாகச் சேர்ந்துள்ள இரும்புச்சத்தைக் குறைக்க உதவுகிறது.

பக்டீரியாவைத் தடுக்க வல்லதுடன் எந்த ஒரு தொற்று நோயிலிருந்தும் நம்மைக் காக்கும் சக்தி கத்தரிக்காய்க்கு உண்டு.

விற்றமின் 'சி' அதிகம் உள்ள இந்தக் காயில் பக்டீரியாவை எதிர்த்துப் போராடும் சக்தியும் உள்ளது. இதைத் தினசரி உணவில் சேர்த்துக் கொண்டால் இத்தகைய கிருமிகளால் வரும் நோயிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள முடியும்.

கனிமங்கள் மற்றும் விற்றமின்கள் நிறைந்த காயான கத்தரிக்காய் அதிக நார்ச்சத்து நிறைந்த உணவாகும். இது நமது சருமத்தில் உள்ள நச்சுத் தன்மையை நீக்கி சருமத்தை ஒளிர வைக்கிறது.

கத்தரிக்காயின் தோலில் உள்ள அன்தோசையனின் என்ற பொருள் நமது சருமத்தை இளமையாக வைத்துக் கொள்ள உதவுகின்றது.


கத்தரிக்காயைத் தினமும் சாப்பிடுவது நமது தலைப் பகுதியை எப்போதும் ஈரப்பதத்துடன் வைத்திருக்க உதவும்.

இதனால் முடியின் வேர்ப் பகுதி ஊக்குவிக்கப்பட்டு முடி நன்கு வளருகிறது. இதனால் முடி வளர்ச்சி அதிகரிப்பதுடன் முடியும் ஆரோக்கியமாக வளரும்.



# கொழுப்பைக் குறைக்கும் வாழைத்தண்டு

**வயிற்றுப் புண்களைக் குணப்படுத்தும். சிறுநீர் எரிச்சலைப் போக்கும். ஊளைச் சதையைக் கரைத்து, உடல் பருமனைக் குறைக்கும்.**



அதிக நீர்ச்சத்தும், நார்ச்சத்தும் கொண்ட வாழைத்தண்டு பல்வேறு மருத்துவ குணங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

வாழைத்தண்டு கொழுப்பைக் குறைத்து வயிற்றுப் புண்களைக் குணப்படுத்தும். சிறுநீர் எரிச்சலைப் போக்கும். ஊளைச் சதையைக் கரைத்து, உடற் பருமனைக் குறைக்கும்.


அதிக உடல் பருமன் கொண்டவர்கள், தொப்பை உள்ளவர்கள் அடிக்கடி வாழைத்தண்டை உணவில் சேர்த்துக் கொண்டால் நல்லது.

வாழைத்தண்டு அதிக குளிர்ச்சி கொண்டது என்பதால் அதை உண்ணும் நாள்களில் தயிர், மோரைத் தவிர்க்கவும்.

'வாழைத்தண்டை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி மிளகு, சீரகம், பூண்டு, எலுமிச்சைச் சாறு கலந்து உப்புப் போட்டுக் கொதிக்க வைத்து காலை உணவுக்கு முன் குடித்து வந்தால், உடல் கனம் குறைவதோடு ரத்த அழுத்தமும் குறையும்.

நுளம்பு கடித்து தடிப்பு ஏற்பட்டால் வாழைத்தண்டை இரண்டாக வெட்டி, வெட்டிய பகுதியை நுளம்பு கடித்த இடங்களில் சில நிமிடங்கள் தேய்த்தால் குணமாகும்.

முகப்பருவுக்கு வாழைத் தண்டைப் பாதியாகப் பிளந்து முகப்பருவுள்ள இடங்களில் தினமும் 2 நிமிடங்கள் தேய்த்தால் பருக்கள் நீங்கி முகம் அழகாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12.02.2014



வலையவன்

# நாசாவை அதிரவைத்த திருநள்ளாறு கோவில்

இன்று பல நாடுகள் செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு அனுப்பி வருகின்றன. அவை செல்போன் பயன்பாடு, இராணுவ பயன்பாடு, உளவு என பல்வேறு காரணங் களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்கா அனுப்பிவைத்த செயற்கைக்கோள் ஒன்று பூமியின் குறிப்பிட்ட பகுதியைக் கடக்கும் போது மட்டும் 3 விநாடிகள் ஸ்தம்பித்து விடுகிறது. 3 விநாடிகளுக்குப் பின்னர் வழக்கம்போல் வானில் பறக்க ஆரம்பித்து விடுகிறது. எந்தவித பழுதும் அந்த செயற்கைக்கோளின் கருவிகளில் ஏற்படுவதில்லை.
இந்தச் சம்பவம் நாசாவுக்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தை அளித்தது. இது எப்படிச் சாத்தியம்? என்பதை ஆராய்ந்து, கிடைத்த முடிவு நாசாவை மட்டுமல்ல உலகையே மிரள வைத்தது.
எந்த ஒரு செயற்கைக்கோளும் பூமியில் இந்தியாவின்-தமிழ்நாடு அருகில் உள்ள புதுச்சேரி-திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண் யேசுவரர் கோயிலுக்கு மேல் நேர் உள்ள வான்பகுதியைக் கடக்கும் 3 விநாடிகள் மட்டும் ஸ்தம்பித்துவிடுகின்றன.

**அப்படி நிகழ்வதற்கு என்ன காரணம் ?**

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் கண்ணுக்குத் தெரியாத கருநீலக்கதிர்கள் அந்தக் கோயிலின் மீது விழுந்து கொண்டே இருக்கின்றன. இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சனிப்பெயர்ச்சியின் போது இந்த கருநீலக் கதிர்களின் அடர்த்தி மிகவும் அதிகமாக இருக்கும். விண் வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக்கோள்கள் இந்தக் கருநீலக்கதிர்கள் பாயும் பகுதிக்குள் நுழையும்போது ஸ்தம்பித்து விடுகின்றன. அதே நேரத்தில் செயற்கைக் கோள்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.
இதில்குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இந்தக் கோயில்தான் 'இந்துக்களால் சனிபகவான்' தலம் என்று போற்றப்படுகிறது. இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் நாசாவிலிருந்து பல முறை திருநள்ளாறு வந்து ஆராய்ச்சி செய்து விட்டனர். முடிவில் மனிதனை மீறிய சக்தி ஒன்று உண்டு என்பதை உணர்ந்தனர். அவர்களும் சனிபகவானைக் கையெடுத்து கும்பிட்டு வணங்கினர். இன்று வரை விண்ணில்

> 'இந்துக்களால் சனிபகவான்' தலம் என்று போற்றப்படுகிறது. இந்த சம்பவத்துக்கு பின்னர் நாசா விலிருந்து பல முறை திருநள்ளாறு வந்து ஆராய்ச்சி செய்து விட்டனர். முடிவில் மனிதனை மீறிய ஒரு சக்தி உண்டு என்பதை உணர்ந்தனர். அவர்களும் சனிபகவானை கையெடுத்து கும்பிட்டு வணங்கினர். இன்று வரை விண்ணில் செயற்கைகோள்கள் திருநள்ளாறு பகுதியைக் கடக்கும் போது ஸ்தம்பித்து கொண்டே இருக்கின்றன.

செயற்கைக்கோள்கள் திருநள்ளாறுப் பகுதியைக் கடக்கும்போது ஸ்தம்பித்துக் கொண்டே இருக்கின்றன.
இந்தச் செய்தியைக் கேட்டு பிரமிக்காதவர்கள் நம்முடைய முன்னோர்களை நினைத்து கட்டாயம் பிரமிக்கவேண்டும். நாம் பல செயற்கைக்கோள்கள் மூலம் கண்டறியும் சனிக்கோளின் கதிர்வீச்சு விழும் பகுதியைக் கண்டு பிடித்து அதற்கென ஒரு கோயிலையும் கட்டி, கதிர்வீச்சுகள் அதில் விழும் நாள்களையும் கணக்கிட்டு அதற்கான நாளை சனிபெயர்ச்சி என்று அறிவிக்கும் திறமையை, எம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு தொலைநோக்குப் பார்வைகொண்ட எம் முன்னோர்களை நினைத்து என்னால் பிரமிக்காமல் இருக்க முடியவில்லை.
இதை மிஞ்சும் வகையில் ஒரு விடயம் கேள்விப்பட்டேன்.
நீங்கள் ஏதாவது சிவன் கோயிலுக்குச் சென்றால் அங்கே நவக்கிரகங்களை நன்றாகக் கவனியுங்கள். அந்தச் சிலைகளின் மேல் கட்டப்பட்டுள்ள துணிகளையும் நன்றாக உற்றுப் பாருங்கள். உங்கள் அறிவியல் அறிவையும் கொஞ்சம் தட்டிவிடுங்கள்! எந்தக் கோள் எந்த நிறத்தில் இருக்கும் என்பதை எம் முன்னோர்கள் கட்டிவைத்திருக்கும் அந்தத் துணிகளில் கண்டறியுங்கள். அறிவாற்றலை நினைத்துப் பிரமித்துப் போவீர்கள். பெரியோர்களின் இந்த அறிவியலின் அதிசயத்தை அனைத்துத் தலைமுறையும் அறியவேண்டும்.



# கடலில் 14 மாதங்கள் உயிர் வாழ்ந்த அதிசய மனிதன்

கடலில் 14 மாதங்களாக தத்தளித்த எல் சல்வடோரைச் சேர்ந்த ஜோஸ் என்ற நபர் பசுபிக் சமுத்திரத்தின் மார்ஷல் தீவுக் கூட்டத்திலுள்ள ஒரு சிறிய தீவிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டுச் செய்திச் சேவைகள் அவரது புகைப்படங்களுடன் செய்த வெளியிட்டுள்ளன. இவ்வாறு மீட்கப்பட்ட ஜோஸ் என்ற மனிதர் 'பசுபிக்கின் மெராக்கள் மேன்' என வர்ணிக் கப்பட்டுள்ளார். அதாவது பசுபிக்கின் அதிசய மனிதன் என்பது அதன் பொருள்.
அந்த நபரிடம் பயணத்தைப் பற்றிக்கேட்டபோது, அதைப்பற்றி எனக்கு அதிகம் ஞாபகம் இல்லை. எனது சிந்தனையிலும் இல்லை என்று கூறியுள்ளார். அவர் மீட்கப்பட்டவுடன் நான் உயிரோடு இருக்கிறேன் என்பதை நம்ப முடியவில்லை எனத்



தெரிவித்துள்ளார். ஜோஸ் இவ்வாறு இருந்த காலத்தில் ஆமைகளின் இரத்தத்தைக் குடித்தும் மீன் களின் சதைகளை உண்டுமே உயிர் வாழ்ந் துள்ளார்.


# தொடர்ந்து விலங்குகள் இறப்பு; நீடிக்கின்றது மர்மம்



இந்தோனேஷியாவில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில் விலங்குகள் தொடர்ந்து இறந்து கொண்டிருப்பதால் மர்மம் நீடிக்கின்றது.
இந்தோனேசியாவிலுள்ள மிகப்பெரிய 'சுரபாயா' மிருகக்காட்சிச் சாலையில் தொடர்ந்து விலங்குகள் இறந்து வருகின்றன.
கடந்த 8 மாதங்களில் மட்டும் சுமார் 105 விலங்குகள் இறந் துள்ளன. கடந்த இரண்டு நாள்களுக்கு முன்புதான் மான் ஒன்றும், அதற்கு முன் ஒன்றரை வயது ஆபிரிக்கச் சிங்கமும் இறந்தன. இந்நிலையில் தற்போது ஊர்வன இனமான பல்லியினத்தைச் சோந்த சுமார் மூன்று வயது மதிக்கத்தக்க கோமாடோ டிராகன் மர்மமான முறையில் இறந்துள்ளது. இந்த மிருகக்காட்சிச் சாலையின் ஊழியர் சுராஜி, வழக்கம்போல் சனிக்கிழமை காலையில் விலங்குகளுக்கு உணவு வைக்க வந்தார்.
அப்போது டிராகன் இறந்து கிடப்பதைப் பார்த்த அவர் நிர்வாகத்துக்குத் தகவல் அளித்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறுகையில், டிராகனின் வாலை லேசாக அசைத்துப் பார்த்தேன். ஆனால் எவ்வித அசைவும் இல்லாமல் கிடந்தது. சோதித்துப் பார்த்தபோது அதனுடைய கண்கள் ஏற் கெனவே மூடப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.
டிராகன் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிய அதன் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பியிருப்பதாக மிருகக்காட்சிச் சாலையின் செய்தித் தொடர்பாளர் சுபன்காட் தெரிவித்துள்ளார்.
இவ்வாறு விலங்குகள் தொடர்ந்து இறந்து வருவதால் மிருகக்காட்சிச் சாலையை மூடக்கோரி விலங்கின பாதுகாப்பு ஆர்வலர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணில் ஊசலாடும் இரும்புக் குண்டு



புதன் சூரியனில் இருந்து பிரிந்து உருவான கோள் அல்ல. இதற்கான முக்கிய காரணம் பிற கோள்களுக்கும் புதனுக்கும் மிகப்பெரும் இயற்பியல் வேறுபாடு உள்ளது. புதன் கோளின் கட்டமைப்பு முழுவதுமே இரும்பால் ஆனது. கோள்கள் அனைத்தும் பல வித வேதிப்பொருள்களின் கலவையாகும்.

காரணம், பல்லாயிரம் ஆண்டுகளாக சூரியனில் இருந்து பிரிந்து அவை திடமாகி விண்வெளியில் உள்ள தூசுகள் கலந்து இதர இயற்பியல் மாற்றங்களுக்கு உட்பட்டு சூரியனை வலம் வருகின்றன. ஆனால், புதன் மட்டும் இந்த இயற்பியல் மாற்றங்களுக்கு உட்படாமல் மிகப் பெரிய காந்த கோளமாக சூரியனை வலம் வந்து கொண்டு இருக்கிறது. இதனடிப்படையில் புதன் சூரியக்கோளின் குடும்பத்தைச் சேர்ந்த ஒன்று அல்ல. விண்வெளியில் சுற்றிக் கொண்டு இருந்த ஏதோ இரு பெரிய விண்கல் ஒன்று சூரியனின் ஈர்ப்பால் சூரிய மண்டலத்தில் உள் இழுக்கப்பட்டு சூரியனை நெருங்க நெருங்க அதன் அனைத்து உபரிப்பொருள்களும் ஆவியாகி இறுதியில் இரும்புக் குழம்பு மிஞ்சியது.

சூரிய வெப்பத்தில் உருகிய நிலையில் உருகிய இரும்புக் குண்டில் காந்தப்புலன் தோன்றியது. இதன் காரணமாக நாம் சாதாரணமாகப் பரிசோதனை செய்யும் ஒரே துருவ மையங்கள் ஒன்றை ஒன்று விலக்கும் என்ற கொள்கையின்படி, புதனின் எதிர் முனையும் சூரியனின் எதிர் காந்த முனையும் எதிர் வினைகொண்டு புதனைத் தள்ளியே வைத்து விட்டது. நாளடைவில் புதன் இறுகி எமது நிலவின் அளவில் உள்ள மிகப்பெரிய இரும்புக் கோளமாக மாறிவிட்டது.

இன்றும் புதன் எமது இதர கோள்களைப்போல் தன்னைத் தானே சுழலுவதில்லை, சூரியனை மட்டும் சுற்றிவருகிறது. ஆகையால், இங்கு இரவு பகல் கிடையாது. ஒருவேளை நமது பூமியைப்போல் புதனும் தன்னைத் தானே சுழல ஆரம்பித்தால் இந்நேரம் சூரியனில் புதைந்து காணாமல் போயிருக்கும்.

### புதனின் குறுக்குவட்டப் பாதை

ஆரம்ப காலத்தில் கோள்களை அவற்றின் குணாதிசயங்கள் மூலம் அடையாளம் கண்டு கொண்ட எம் முன்னோர்கள் புதனையும் கோள் வரிசையில் சேர்த்தனர். ஆனால், மற்ற கோள்களைப்போல் புதன் அவ்வளவு எளிதில் கண்களுக்குப் புலப்படுவதில்லை. சூரிய ஒளிக்கற்றையின் தீவிரம் காரணமாக அவ்வளவு எளிதில் நாம் புதனைக் காணமுடியாது. மிகவும் அரியவகையில் அதிகாலையில் புதன் சில வினாடிகளுக்குத் தென்படும். இதன் காரணமாகத்தான் எம் முன்னோர்கள் பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்றார்கள். புதனின் தரைத்தளம் கடுமையான கொதி நிலையில் இருந்தாலும் உருகாததற்குக் காரணம், இரும்பு மற்றும் சிலிகன்



கொண்ட தரைத்தளம் மிகவும் விரைவாக வெப்பத்தை மையப்பகுதிக்கு அனுப்பி விடுகிறது. இதனால் இதன் மையப்பகுதி உருகிய குழம்பு நிலையில் இருக்கிறது. மற்ற அனைத்துக் கோள்களையும்விட இதன் மையப்பகுதி கடுமையான வெப்பநிலையில் உள்ளது.

**வாயுக்கள்:**

புதனைப் பொறுத்தவரை சூரியனுக்கு அருகில் இருப்பதால் மெல்லிய வாயுக்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இங்கும் வெள்ளிக் கோள்களைப்போல் அதிகளவில் ஒட்சிசன், நைதரசன் மற்றும் மிகவும் குறைந்த அளவில் காபனும் இருக்கின்றன.

புதனின் தரைத்தளத்தில் காபன் இரும்புத் தாதுவுடன் கலந்து இருந்தாலும் தரைப்பகுதியில் காபன் படிமாங்கள் வாயு நிலையில் இருப்பதாகத் தெரிகிறது.

இதுவும் ஓர் இயற்கையின் பாதுகாப்புத்தான்.


சூரியனின் வெப்ப அலைகள் திடீரென மேலெழும்பும் போது ஏற்படும் வெப்பம் புதனின் தரைத்தளத்தைத் தாக்க வரும். தரையில் பெருகி இருக்கும் கார்பன் அணுக்கள் அதைவாங்கி புதனின் மையப்பகுதிக்கு அனுப்பி விடும். இதன் காரணமாக புதனின் மையக்கரு எப்போதும் வெப்பமாகவே உள்ளது. இந்த வெப்பம்தான் புதனின் காந்த விசை என்றும் குறையாமல் இருக்க முக்கிய காரணமாக உள்ளது.

**புதனில் நீர்:**

புதன் கோளிலும் நீர் உள்ளது. சூரியனுக்கு மிகவும் அருகில் உள்ள ஒரு கோளில் நீர் உள்ளது என்பது வியப்பான தகவலாக இருக்கிறது அல்லவா! ஆம், தன்னத்தானே சுழலாத கோளான புதனின் ஒரு பகுதி எப்போதும் இருளிலேயே இருக்கும். ஆகையால் நமது புவியைப்போலவே புதனின் துருவங்களில் கடுமையான குளிர் சூழ்ந்துள்ளது. சனிக் கோளின் வளையங்களில் பனிக்கட்டிகள் உருவாகிய காலகட்டத்தில்தான் புதன் கோளிலும் பனிக்கட்டிகள் சிதறியிருக்க வேண்டும். அப்போது சிதறிய பனிக்கட்டிகள் புதனின் துருவப்பகுதிகளில் உறைநிலைக்கு மாறி இன்று வரை புதன் கிரகத்தில் நீர் பனிக்கட்டிகளாக அதன் துருவங்களில் உள்ளன.

இவை பல கோடி ஆண்டுகளாக சூரிய வெளிச்சம் இல்லாத இடங்களாக இருந்ததால் இன்றும் ஆவியாகாமல் உள்ளன. புதன் கிரகத்தின் இரு துருவங்களிலும் ஆழமான பள்ளங்களில் ஏராளமான அளவில் பனிக்கட்டிகள் காணப்படுகின்றன. இந்தப் பனிக்கட்டிகள் பல கோடி ஆண்டுகளுக்கு முன் வந்து விழுந்தவை எனக் கருதப்படுகிறது. சூரியனைச் சமமான வட்டப்பாதையில் சுற்றாமல் நீள்வட்டப்பாதையில் சுற்றிவரும் புதன், மனிதன் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை வெள்ளிக்கோள் போலவே தன்னுடைய மேல் பகுதிகளில் கொண்டுள்ளது. தூரக்கோள்களில் உயிரினம் தேடும் எமக்கு சூரியனுக்கு அருகில் உள்ள ஒரு கோளில் பக்ரீரியங்கள் உள்ள செய்தி வியப்பளிக்கும் ஒன்றுதானே. பக்ரீரியாங்கள் உண்மையில் அங்கு பல்கிப் பெருகி இருக்கும் பட்சத்தில் கரிமப் பொருள்களான கச்சா எண்ணெய் இருப்பதற்கான வாய்ப்பையும் மறுப்பதற்கில்லை. இதன்படி எதிர்கால உயிரினத்திற்குத் தேவையான எரிபொருள் அடங்கிய மாபெரும் பெட்டகமாக புதன் திகழும். புதனில் மனித இனம் அறிவியல் முறைப்படி பாதுகாப்பாக வாழத் தகுந்த சூழலை உருவாக்க முடியும்.

முக்கியமாக வெள்ளியில் உள்ளது போல் மிதக்கும் நகரங்களை சூரிய வெப்பம் படும் விளிம்புகளில் அமைக்கும் திட்டம் ஒன்றை நாசாவின் மெசஞ்சர் விண்கலம் மூலம் செயற்படுத்தும் திட்டம் கடந்த 2011-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




# இணையப் பாவனையில் முதலிடத்தில் சுவீடன்



இணையத்தைப் பயன்படுத்துவதில் முதலிடம் வகிக்கும் நாடு எது தெரியுமா? வைய விரிவு வலை அமைப்பு (world wide web foundation) நடத்திய ஆய்வின்படி இந்தப் பெருமையை சுவீடன் தட்டிச்சென்றுள்ளது. சுவீடனின் அயல் நாடான நோர்வே இரண்டாவது இடத்தில் உள்ளது.

இணையம் மற்றும் சமூக ஊடகம், மக்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொள்ளவும், போராடவும், அநியாயங்களைத் தட்டிக்கேட்கவும் பயன்பட்டு வருவது ஊக்கம் தரும் விடயம் என்று இந்த ஆய்வு அறிக்கையை வெளியிட்ட அமைப்பின் நிறுவுநரும், வைய விரிவு வலையைக் கண்டு பிடித்தவருமான டிம் பெர்னார்ஸ் லீ தெரிவித்துள்ளார்.

இணையப் பயன்பாடு தொடர்பான கருத்துக் கணிப்புகள் பெரும்பாலும் இணையவாசிகளின் எண்ணிக்கை, இணையத்தின் வேகம், இணையத் தணிக்கை போன்ற அம்சங்களைக் கொண்டே நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கு மாறாக டிம் பெர்னார்ஸ் லீயின் வைய விரிவு வலை அமைப்பு, வளர்ச்சி மற்றும் மனித உரிமை ஆகியவற்றை மேம்படுத்துவதில் இணையத்தின் பங்கை கணக்கில் கொள்ளும் வகையில் ஆய்வு நடத்தி வலை அட்டவணையை (Web Index) வெளியிட்டு வருகிறது.

கடந்த 2012 ஆம் ஆண்டு இந்த அறிக்கை முதலில் வெளியிடப்பட்டது. அப்போது மொத்தம் 61 நாடுகள் பரிசீலிக்கப்பட்டு வெளியிடப்பட்ட பட்டியலில் ஸ்கண்டினேவிய தேசமான சுவீடன் முதலிடத்தை பிடித்திருந்தது. இந்த ஆண்டு மேலும் 20 நாடுகளோடு விரிவாக்கப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான பட்டியலிலும் சுவீடன் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது. சுவீடனின் அயல் நாடான நோர்வே இரண் டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

எல்லோருக்கும் இணைய வசதி, கருத்து சுதந்திரம், தணிக்கையின்மை, பயனுள்ள தகவல்கள் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் சுவீடன் ஒன்றும் முதலிடத்தை பெற்றுவிடவில்லை. அந்நாட்டில் கிட்டத்தட்ட எல்லோருக்கும் அதிவேக இணைய வசதி சாத்தியமாகியுள்ளது. எல்லோருக்கும் இணைய வசதியை அளிக்கும் வகையில் 2000 ம் ஆண்டு வாக்கில் கொண்டு வரப்பட்ட அனைவருக்குமான தகவல் சமூகம் சட்டத்தின் மூலம் சுவீடன் இதை சாத்தியமாக்கி இருப்பதாக லீ பாராட்டியுள்ளார். அதே நேரத்தில் இணையத் தணிக்கை ஜனநாயகத்தின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கும் என்றும் இது தொடர்பாக துணிச்சலான நடவடிக்கைகள் தேவை என்றும் அவர் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி

பள்ளிக்கூடம் போகலாம்
பாடங்கள் பல படிக்கலாம்
நல்லாசிரியர் துணையுடன்
தினமும் அறிவைக் கூட்டுவோம்
திங்கள் முதல் வெள்ளி வரை
பாங்குடன் பள்ளி சென்றிடுவோம்
சனியும் ஞாயிறும் ஓய்வு நாள்
தனியே வீட்டினில் தங்கும் நாள்
அம்மா அப்பா நற்சொல் கேட்டு
தீய செயலினைத் தவிர்த்திடுவோம்
காலை உதயன் புதினம் படித்து
உலக அறிவைப் பெருக்குவோம்
அறிஞர் தம் பெருமை உணர்ந்து
நம்மை நாமே பகுத்தறிவோம்
மேலும் பல கலைகள் கற்று
நாடு போற்றும் நல் மேதைகளாவோம்

வாகினி கிருபாகரன்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## பொது அறிவு

1. 'ஆற்றிடைக்குறை' என்பது எது?
   இலங்கை
2. இலங்கையின் வரலாறு தொடர்பான நூல் எழுதியவர் யார்?
   றோபேட் நொக்ஸ்
3. சிங்களம் மட்டும் சட்டமாக்கப்பட்ட ஆண்டு எது?
   1956
4. சேர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர்?
   ஆனந்தகுமாரசாமி
5. சொத்துரிமை தொடர்பான டச்சுக்காரர் புகுத்திய சட்டத்தின் பெயர்?
   தேச வழமை
6. இலங்கை எப்போது குடியேற்ற நாடாக்கப்பட்டது?
   1802 இல்

*செ. வேணுகா, தரம்-11 எம்,*
*யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.*

## இலங்கை நீதித்துறையின் சிறப்புச் செய்திகள்

1. பிரிவிடல் விடயமாக எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்?
   மாவட்ட நீதிமன்றம்
2. 1987 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தப்படி ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றம்?
   மாகாணமேல் நீதிமன்றம்
3. பராமரிப்பு சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்?
   நீதிவான் நீதிமன்றம்
4. மேல் முறையீடு செய்யக்கூடிய நீதிமன்றங்கள் எவை?
   உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு மன்றம்

கே. டயானா, ஆண்டு- 11,
கதிர் கல்வி நிலையம், புத்தூர்



# குட்டிப் பூனையின் கதை

குட்டிப் பூனை ஒன்று காட்டு வழியே போய்க் கொண்டிருந்தது. போகும் வழியில் ஒரு நரியைக் கண்டது.

நரி, பூனையிடம், உன் கால்கள் மிகவும் அழகாக இருக்கின்றன. எனக்கு அவற்றைத் தருவாயா? என்று கேட்டது. குட்டியாக இருந்தாலும் அந்தப் பூனைக்கு புத்திசாலித்தனம் அதிகம்.

அது நரியைப் பார்த்து, நான் மிகவும் மெல்லியதாக இருக்கிறேன்... அதனால் வீட்டுக்குச் சென்று நன்றாகச் சாப்பிட்டு கொழுகொழு என்று ஆன பிறகு வருகிறேன். அப்போது நீ கேட்டபடி எனது கால்களை உனக்குத் தருகிறேன் என்றது. நரியும் சரியென்று தலையாட்டவே, பூனை தன் வழியே சென்றது.

இதே போல, அந்தக் குட்டிப்பூனை போகும் வழியிலெல்லாம் நிறைய விலங்குகளைச் சந்தித்தது. அவையெல்லாம் பூனையின் உடம்பிலிருந்து ஒவ்வொரு பாகங்களைக் கேட்டன.

பூனை மீண்டும் மீண்டும், நான் வீடு சென்று கொழுகொழுவென்று வளர்ந்து, பிறகு வந்து நீங்கள் கேட்ட பாகங்களைத் தருகிறேன் என்ற பதிலைக் கூறிவிட்டுத் தன் வழியே தொடர்ந்து சென்றது.

> **பூனை வீட்டுக்குச் சென்றதும், முதல் வேலையாக சுரைக் காய் விதையைத் தேடியெடுத்து நிலத்தில் புதைத்து வைத்தது. அதற்கு நீரும் ஊற்றியது.**

பூனை வீட்டுக்குச் சென்றதும், முதல் வேலையாக சுரைக்காய் விதையைத் தேடியெடுத்து நிலத்தில் புதைத்து வைத்தது. அதற்கு நீரும் ஊற்றியது.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த தாய்ப் பூனை, என்னைக் கூடப் பார்க்காமல் அப்படி என்ன செய்கிறாய்? என்று கேட்டது.

குட்டிப் பூனை, எல்லாம் ஒரு காரணமாகத் தான்... என்று சொல்லிவிட்டு, வீட்டுக்கு வரும் வழியில் தனக்கு நிகழ்ந்தவற்றையெல்லாம் அம்மாவிடம் விவரமாகக் கூறியது.

ஒருமாதம், வீட்டிலிருந்து நன்றாகச் சாப்பிட்டு கொழுகொழுவென்று வளர்ந்தது.

அதே போல பூனை விதைத்த சுரைக்காய் விதையும் முளைத்து பெரிய கொடியாக மாறி நிறையச் சுரைக்காய்கள் காய்த்தன. அதில் பெரிதாக ஒரு சுரைக்காயை பிடுங்கி எடுத்து, அதைப் பாதியாக வெட்டி அதற்குள் தன்னை வைத்து உருட்டி விடுமாறு தாய்ப்பூனையிடம் கேட்டுக் கொண்டது.

அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லையென்றாலும், குட்டி சொன்னபடி சுரைக்காய்க்குள் அதை வைத்து உருட்டி விட்டது.

காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் பூனைக் குட்டி ஒருமாதமாகியும் வராததைக் கண்டு கோபத்திலிருந்தன.

அப்போது, உருண்டு கொண்டே வந்த சுரைக்காயை அவை கண்டன.

ஏற்கெனவே, கோபத்திலிருந்த விலங்குகள் அந்தச் சுரைக்காயை எட்டி எட்டி உதைத்தன.

இப்படியே உருண்டு கொண்டே வந்த சுரைக்காய் இறுதியில் நரியிடம் வந்து சேர்ந்தது.

பயங்கரக் கோபத்திலிருந்த நரி, அந்தச் சுரைக்காயை ஓங்கி ஓர் உதை விட்டது.

வேகமாக உருண்டோடிய சுரைக்காய், ஒரு பாறையின் மீது மோதி இரண்டாகப் பிளந்தது. பூனைக்குட்டி வெளியே வந்தது.

பூனையைப் பார்த்த, நரி, இப்போதுதான் நன்றாக வளர்ந்து விட்டாயே, உனது கால்களை நானே எடுத்துக் கொள்கிறேன் என்றது. பூனைக்குட்டிக்குப் பயமாகப் போய்விட்டது.

இங்கே மண்ணாக இருக்கிறது. புல்வெளிப் பக்கமாகச் சென்றுவிடலாம். அங்கே சென்ற பிறகு எனது கால்களை நீ எடுத்துக் கொள்ளலாம்... என்று சொல்லி நரியைக் கூட்டிக் கொண்டு சென்றது.


வீடுகள் நிறைந்த பகுதிக்கு வந்ததும், பூனைக்குட்டி, நரியண்ணே, நீதான் என் கால்களைச் சாப்பிடப் போகிறாயே, எனக்காக ஒரு பாட்டுப் பாடேன்... என்று கெஞ்சியது.

நரியும், ஊ..ஊ..வென்று பாட ஆரம்பித்தது. நரியின் ஊளைச் சத்தத்தைக் கேட்ட ஊர் மக்கள், அனைவரும் ஓடி வந்தனர். நரியை விரட்டியடித்தனர்.


பூனைக்குட்டி தன்னுடைய அறிவுத் திறனால் தன்னைக் காப்பாற்றிக் கொண்டது.


# வண்ணநிறப் புத்தகங்கள்









உலகில் பல நாடுகளில் அலுவலகக் குறிப்புப் புத்தகங்கள் சில குறிப்பிட்ட வண்ண நிறத்தில் உள்ளன.

பிரான்ஸ்- மஞ்சள் நிறப் புத்தகம்
பிரிட்டன்- நீல நிறப் புத்தகம்
நெதர்லாந்து- ஒரேஞ் நிறப் புத்தகம்
சீனா, ஜேர்மனி, போர்த்துக்கல்- வெள்ளை நிறப் புத்தகம்
இத்தாலி, பெர்ஸியா- பச்சை நிறப் புத்தகம்
ஜப்பான், பெல்ஜியம்- சாம்பல் நிறப் புத்தகம்

சிந்து சிவதாஸ்
ஐங்கரன் வீதி

# ஆர்ட்டிக் பிரதேசத்தில் கூடுகட்டும் பறவை



ஆர்ட்டிக் பிரதேசத்தில் கோடை காலங்களில் 100 விதமான பறவைக் கூடுகளைக் காணலாம். ஒரு சில பறவைக் கூடுகளை குளிர் காலங்களிலும் காணலாம். கோடை காலங்களில் பெண் வாத்துக்கள், நீண்ட வால் முளைத்த வாத்துக்கள், தாராக்கள், அன்னப் பறவைகள் ஆர்ட்டிக் பிரதேசத்துக்கு வந்து போகும். அங்கே கூடுகள் கட்டும். கோடை காலம் முடிந்ததும், குளிரின் கொடுமை தாங்காமல் பல திரும்பி விடும். சில பறவைகள் அங்கே தங்கும். அப்படி அங்கு தங்கும் பறவை களின் இறக்கைகள் வெள்ளை நிறமாக ஆகிவிடும்.

ஸ்ரீ. சுகிர்தன், தரம்-10,
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுவிட்டரில் கதை சொன்ன நைஜீரிய எழுத்தாளர்

இணையவன்

நைஜீரிய எழுத்தாளரான டேஜு கோலேவை (Teju Cole) உங்களுக்குத் தெரியுமா? இதுவரை தெரியாவிட்டால் இப்போது தெரிந்து கொள்ளுங்கள். அப்படி அவர் என்ன தான் செய்துவிட்டார் என்று நீங்கள் கேட்கலாம். புதுயுக எழுத்தாளரான கோலே டுவிட்டர் வழியே கதை சொல்வதில் புதுமையை உண்டாக்கி புதிய இலக்கிய வடிவத்தை உண்டாக்கியிருக்கிறார்.

அதாவது கோலே குறும் பதிவுகள் மூலமாகவே கதை ஒன்றைச் சொல்லியிருக்கிறார். டுவிட்டரை நன்கறிந்தவர்கள், குறும்பதிவுகளாகவே கதை சொல்வது ஏற்கனவே முயற்சிக்கப்பட்டுள்ள விடயம்தான் என்று வாதிடலாம். உண்மை தான், 140 எழுத்துக்கள் கொண்ட குறும்பதிவுகளாகவே கதை எழுதுவதை ஒரு சில எழுத்தாளர்கள் ஏற்கனவே ஒரு புதிய இலக்கிய வடிவமாகக் கையாண்டுள்ளனர். ஆனால் கோலே என்ன செய்திருக்கிறார் என்றால், மற்றவர்களின் குறும்பதிவுகளைத் திரட்டிக் கதைகளாக மாற்றியுள்ளார். அதாவது மற்றவர்கள் எழுதிய குறும்பதிவுகளை ஒவ்வொன்றாக தனது ட்விட்டர் பக்கத்தில் மறுகுறும் பதிவு செய்து (ரிடிவீட்) முழுக் கதையையும் உருவாக்கியுள் ளார்.

இவ்வாறு மற்றவர்களையும் பங்கேற்க வைத்து மறு குறும் பதிவுகளாக யாரும் இதற்கு முன்னர் டுவிட்டரில் கதை சொன்னதில்லை. கோலே தான் முதன்முதலாக இவ்வாறு செய்துள்ளார். டுவிட்டர் இலக்கியத்தில் இது ஒரு ஆச்சரியமான பயன்பாடுதான். பொதுவாக 'ரிடிவீட்' என்ற மறு குறும்பதிவுகள் ஒருவர் வெளியிட்ட குறும்பதிவுகளை டுவிட்டர் பயனாளிகள் தங்கள் டுவிட்டர் பயனாளிகளோடு பகிர்ந்து கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது.

அந்தக் குறும்பதிவின் கருத்தை ஆதரிக்கும் வகையில் இவ்வாறு செய்யப்படுவதாகவும் கொள்ளலாம். விதிவிலக்காக சில நேரங்களில் சிலர் மறுகுறும்பதிவு செய்தாலும், அதன் கருத்தைத் தாங்கள் ஆதரிக்கவில்லை என்றும் குறிப்பிடுவதுண்டு. ஒரு குறும்பதிவு எந்தளவுக்கு மறுமுறை குறும்பதிவு செய்யப்படுகிறதோ, அந்த அளவுக்கு அது அதிகமானோரைச் சென்றடைய வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது.

எது எப்படியோ, ஒரு கதையை மறு குறும்பதிவுகளாகவே சொல்லலாம் என்று இதுவரை ஒருவருக்கும் தோன்றவில்லை. டேஜு கோலேவுக்குத் தோன்றியிருக்கிறது.


பொது இடத்தில் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படும் நிகழ்வை மையமாகக் கொண்டு ஒரு கதையை முழுவதும் மறு குறும்பதிவுகளாகவே உருவாக்கியிருக்கிறார்.

அந்தக் குறும் பதிவுகள் ஒவ்வொன்றும் ஒருவரது டுவிட்டர் பக்கத்தில் பகிரப்பட்டவை. அவற்றை எல்லாம் கோலே தனது பக்கத்தில் எடுத்து மறுகுறும்பதிவுகளாக வெளியிட்டிருக்கிறார். இவற்றைத் தொடர்ச்சியாக படிக்கும்போது மெல்ல கதையின் நகர்வு புரியும். கடைசி குறும் பதிவைப் படித்ததும் ஒரு அருமையான சிறு கதையைப் படித்த உணர்வு உண்டாகும்.

பொதுவாக டுவிட்டர் பக்கத்தில் வெவ்வேறு டுவிட்டர் முகவரிகளின் குறும் பதிவுகளைப் பார்க்கும்போது அவற்றில் அங்கும் இங்கும் அலைபாயும் ஒருவித தொடர்பில்லாத தன்மை இருக்கும். இதற்கு மாறாகப் பல முகவரிகளின் குறும்பதிவுகளை ஒரு ஒத்திசைவோடு படிப்பது புதுமையான அனுபவம் தான். நவீன கதை சொல்லி கோலே இந்த அனுபவத்தைக் கொடுத்து ஒரு சிறுகதையையும் படிக்க வைத்திருக்கிறார்.

'நான் ஒரு கதை எழுதினேன், நாம் அதை இணைந்து சொன்னோம். இதில் பங்கேற்ற தாராள மனம் கொண்ட சுயநலமில்லாதவர்கள் அனைவருக்கும் நன்றி' என்று கதையின் முடிவு மறுகுறும்பதிவுக்கு பின் கேலோ தெரிவித்திருந்தார். டுவிட்டர் வழியிலான இந்த இலக்கியக் கூட்டு முயற்சியில் பங்கேற்றவர்களை கோலே முன்கூட்டியே தொடர்புகொண்டு கதைக்கான குறும்பதிவுகளைக் கோரியிருக்கிறார். ஒரு மறுகுறும்பதிவு எத்தனை தூய்மையானதாக இருக்கக்கூடும் என்ற எண்ணமும் மற்றவர்களை எப்படி உங்கள் ட்விட்டர் பக்கத்தில் இடம்பெற வைக்க முடியும் என்ற எண்ணமும் என்னை வசீகரித்தன' என்று கோலே இது தொடர்பான பேட்டியில் கூறியிருக்கிறார். மறுகுறும்பதிவு செய்வது உண்டாக்கக் கூடிய தயக்கத்திற்கு மாறாக, பலரும் இணைந்து செயற்படுவதற்கான ஒரு நிகழ்வாக இருந்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்து இந்த முயற்சியில் ஈடுபட்டதாக கோலே கூறியிருக்கிறார்.

இந்த டுவிட்டர் கூட்டுக் கதையில் என்ன விசேடம் என்றால் இந்தத் தனி குறும்பதிவுகள் படிக்கும்போது துண்டு துண்டாக இருந்தாலும், அவற்றை மறுகுறும்பதிவுகளாக ஒருசேர படிக்கும் போது அவற்றை இணைக்கும் மையச் சரடு விளங்கிவிடும். இது கதை சொல்வதில் புதிய அனுபவம் தான்.



நைஜீரியாவில் பிறந்து வளர்ந்து அமெரிக்காவின் நியூயோர்க்கில் வசிக்கும், டேஜு கோலே , நவீன தொழில்நுட்பம் சார்ந்த இதுபோன்ற புதிய இலக்கிய முயற்சிக்காக அறியப் படுபவர்.

இதற்கு முன்பாக அவர் ஆளில்லா விமானங்களின் பாதிப்புப் பற்றி குறும் பதிவுக் கதைகளை எழுதியிருக்கிறார். ட்ரோன்ஸ் என்று சொல்லப்படும் ஆளில்லா விமானங்கள், சூடான், யேமன், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அமெரிக்க இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டு அதன் பயனாக யாரேனும் கொல்லப்படுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ட்ரோன் சிறுகதைகள் என்ற தலைப்பில் குறும்பதிவுகளாக குறுங் கதைகளை வெளியிட்டார். புகழ்பெற்ற நாவல்களின் ஆரம்ப வரிகள் ட்ரோன்களின் தாக்குதலால் இடைமறிக்கப் படுவது போல இந்த குறுங்கதைகள் அமைந்திருந்தன.

> **அந்தக் குறும் பதிவுகள் ஒவ்வொன்றும் ஒருவரது டுவிட்டர் பக்கத்தில் பகிரப்பட்டவை. அவற்றை எல்லாம் கோலே தனது பக்கத்தில் எடுத்து மறுகுறும்பதிவுகளாக வெளியிட்டிருக்கிறார்.**

கோலேவின் முதல் நாவல் 'ஓபன் சிட்டி' என்ற பெயரில் வெளியாகி வரவேற்பைப் பெற்றது. அமெரிக்காவின் முன்னணி இதழ்களில் எழுதிவரும் கோலே தேர்ந்த புகைப்பட கலைஞரும் கூட. இந்தியாவுடன் நெருக்கமான தொடர்பும் கொண்டவர். அடிக்கடி இந்தியா வந்து செல்கிறார்.

நவீன தொழில்நுட்பத்தை கோலே நன்றாகப் புரிந்து கொண்டுள்ளதன் அடையாளமாக அவரது இந்தப் புதிய இலக்கிய முயற்சிகள் அமைந்துள்ளன. பல முகவரிகளின் குறும்பதிவுகளை ஒரு ஒத்திசைவோடு படிப்பது புதுமையான அனுபவம் தான். நவீன கதைசொல்லி கோலே இந்த அனுபவத்தைக் கொடுத்து ஒரு சிறு கதையையும் படிக்க வைத்திருக்கிறார்.

# கூகுளை நம்பலாமா?

வலையவன்

சந்தேகமும் கேள்வியுமே உலகின் மாபெரும் கண்டுபிடிப்புகள் தோன்றக் காரணங்கள். முன்பெல்லாம் ஒரு கேள்விக்கு, சந்தேகத்துக்கு விடை தேடி நாள்கணக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. பல இடங் களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இப்போது ஒரு சொடுக்கில் எல்லாவற்றுக்கும் பதில் கிடைக்கிறது. சந்தேகங்கள் தெளிவாகின்றன. ஒருவர் பல ஆண்டுகளாக உழைத்துப் பெறும் பட்டறிவை ஒரே ஒரு சொடுக்கில் இப்போது பெற்றுவிடுகிறோம்.

'இணையம்' பல்வேறு வகையில் எம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகியிருக்கிறது. அதுபோல் இன்று கல்வி, ஆய்வுத் துறையில் இணையத்தின் பங்களிப்பு முக்கியமானதாக உள்ளது. முன்பெல்லாம் ஆய்வு என்றாலே கள ஆய்வுகள்தாம். இருந்த இடத்திலிருந்து ஆய்வுகள் அப்போது சாத்தியம் அல்ல. ஒரு சிறு தகவல் என்றாலும் நாம் அந்த இடத்துக்குச் சென்றுதான் பெற முடியும். குறைந்த பட்சம் தகவல் வேண்டி நூலகங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும். உதாரணமாக யானைகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்ள இருக்கும் மாணவனுக்காகத் தகவல்கள் பலவும் இன்று இணையத்திலேயே கிடைத்து விடுகின்றன.

யானைகளின் வழித்தடங்கள், வலசை போகும் அதன் வாழ்நிலை பற்றியும் ஆழமான பல கட்டுரைகள் இணையத்தில் படிக்கக் கிடைக்கின்றன. இதனால் ஆய்வு இன்று சுலபமாகியுள்ளது. தகவல்களுக்காகப் பல மைல் தூரம் அலைய வேண்டியதில்லை. கூகுள் போன்ற தேடுதல் பொறிகள் நம் அன்றாடத் தேடுதலுக்கு ஏற்ப இணையத்தில் எமக்கான முடிவுகளை எளிதாக வழங்குகின்றன.

இன்று உலகம் முழுவதும் கூகுள் தேடு பொறி மேற்படிப்புகளைத் தீர்மானிப்பதில் இருந்து கல்விக்கான பாடங்களை வழங்குவது, இறுதிப் படிப்பு ஆய்வுகள் முடிப்பது எனப் பல்வேறுவிதமாகப் பயன்பட்டு வருகிறது.

**கூகுள் ஆய்வுகள்**

2008இல் வெளிவந்த அறிக்கை யின்படி கல்வி தொடர்பான தேடுதலுக்காக 79 லட்சம் பேர் கூகுள் தேடுதல் பொறியைப் பயன்படுத்துகிறார்கள். உலக அளவிலும் இந்தப் பயன்பாடு ஆண்டுக்கு ஆண்டு அதி கரித்து வருகிறது. Pew Research Centre என்னும் அமெரிக்க ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் 94 சத வீதமான மாணவர்கள் தங்கள் ஆய்வுக்காக கூகுளைப் பயன்படுத்துகிறார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

ஆய்வுக்காகப் புத்தகங்கள், கள ஆய்வு போன்ற பாரம்பரி யமான ஆய்வுகளைப் பின்பற்றுவோர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளார்கள் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இதன் அடிப்படையில் கூகுள் பலவகையான ஆய்வுக்கு ஆதாரமாக இருப்பது தெளிவு. ஆனால் கூகுள் தேடு பொறிகளை நம்பியே ஆய்வு மேற்கொள்ளப்படுவது சமீபகாலமாகப் அதிகரித்துள்ளது. இது மேற்கண்ட ஆய்வில் தெளிவாகிறது. அதுபோல ஏற்கெனவே வெளிவந்த ஆய்வுகளின் முடிவுகளை, கூகுள் வழியாகக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் சிலர் தங்கள் ஆய்வுகளை 'பயிற்சி வேலையாக' நிறைவுசெய்வதும் உண்டு. இந்த இடத்தில்தான் கூகுள் இணையத் தேடல் ஒரு அபாயகரமான விடயமாகிறது.




ஆய்வுகளுக்காக கூகுள் தேடல்களைப் பயன்படுத்துவது ஆரோக்கியமான விடயம் தான். முன்பு உங்களுக்குத் தேவையான விடயத்தைத் தேட நீங்கள் அந்தப் புத்தகம் முழுவதையும் படிக்க வேண்டியிருக்கும். கூகுள் தேடலில் எமக்கு வேண்டிய சொல்லை எழுதிச் சொடுக்கினால் தேடல் முடிவுகள் வந்து விடுகின்றன. ஆனால் ஒரு சிக்கல் என்ன வென்றால் கூகுள் தேடல் முடிவுகள் அனைத்தையும் நாம் ஆதாரமாகக் கொள்ள முடியாது. புத்தகப் பிரதிகளிலும் இதுபோன்ற தவறுகள் நிகழ்வது உண்டு. ஆனால் இணையத்தின் கட்டற்ற சுதந்திரத்தால் இங்கு அதிக தகவல்கள் ஆதாரமில்லாமல் பகிரப்படுகின்றன. முற்றுமுழுதாக இணையத்தை நம்பி இருந்தால் இதுபோன்ற ஆபத்துகள் நிகழும். சரியான தகவல்களை அடைய தேடுவோருக்கு அந்தத் துறை பற்றிய அடிப்படையான அறிவு இருக்க வேண்டியது அவசியம். அப்படியானவர்களுக்குத்தான் கூகுள் தேடல் உபயோகமாக இருக்கும் என்கிறார் பேராசிரியர் ரெங்கசாமி.

> **ஆய்வுக்காகப் புத்தகங்கள், கள ஆய்வு போன்ற பாரம்பரியமான ஆய்வுகளைப் பின்பற்றுவோர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளார்கள் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இதன் அடிப்படையில் கூகுள் பலவகையான ஆய்வுக்கு ஆதாரமாக இருப்பது தெளிவு.**

**ஆதாரமில்லாத தகவல்கள்**

கூகுள் தேடல் அடிப்படை யில் ஒரு தெளிவை எம்மால் உருவாக்கிக் கொள்ள முடியாது. கூகுள் தேடுதல் பொறியில் தரப்படும் முடி வுகள், எவ்விதமான தணிக்கையும் செய்யப் படாதவை. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் பெயரை 'தேசிய' விநாயகம்பிள்ளை என்று தேடினாலும் கூகுள் தேடல் முடிவுகளை அளிக்கிறது. இதுபோன்று இடங்களின் பெயர்கள், சில வரலாற்றுத் தலைவர்களின் வாழ்க்கைச் சம்பவங்கள், தலைவர்களின் பொன்மொழிகள் ஆகியவை பெரும் பிழைகளுடன் இணையத்தில் பதிவேற்றம் செய்யப் படுகின்றன. இதற்கு எந்த வரையறைகளும் இல்லை.

'கூகுள் ப்ளாக்' சேவையைப் பயன்படுத்திப் பலர் எழுத வந்தனர். அது ஒரு சாதகமான அம்சம். ஆனால் அவர்கள் செவிவழிச் செய்திகளை அடிப்படை ஆதாரமின்றிப் பகிரத்தொடங்கினர். உதாரணமாக மகாத்மா காந்தி தொடர்பாகப் பல்வேறு விதமான கதைகள் இணையத்தில் கிடைக்கின்றன. அவை புராணக் கதைத் தன்மையிலான கதைகள். அவற்றுக்கு எவ்வித ஆதாரமும் இருக்காது. இதன் அடிப்படையில் ஒரு மாணவன் காந்தியின் வரலாற்றை ஆராய்ந்தால் அது மோசமான வரலாற்றை உருவாக்கிவிடும் அபாயம் இருக்கிறது.

இணைய இதழ் நடத்திய அனுபவம் உள்ளவரான பத்ரி, கூகுள் தேடல் பயன்படக்கூடியது என்றாலும் அது குறித்த புரிதல் இருந்தால்தான் அதைப் பயன்படுத்துவது சாத்தியமாகும் என்கிறார்.


தேடுதல் என்ற சொல்லுக்கான மாற்றாகவே 'கூகிளிங்' என்னும் சொல் புழங்கத் தொடங்கி விட்டது. என்ன ஆடை வாங்கலாம்? என்ன படிக்கலாம்? சமையல் செய்வது எப்படி? இந்தச் சொல்லுக்குப் பொருள் என்ன? இது போன்ற அன்றாடத் தேவைகளுக்காக கூகுள் பயன்படத் தொடங்கியுள்ளது. ஆனால் கல்வி, ஆய்வு இவற்றுக்காகப் பயன்படுத்தும்போது கூடுதல் விழிப்புணர்வு அவசியம் ஆகிறது. கூகுள் என்பது எம் தேடலுக்கான முடிவு அல்ல. அது ஓர் ஆரம்பம் மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12.02.2014

● மிது

# கடிகாரம் கடந்து வந்த பாதை



ஒரு காலத்தில் கடிகாரம் என்றால் என்னவென்றே தெரியாமல் இருந்தான் மனிதன். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நேரத்தை அளக்கவும், கண்காணிக்கவும் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தற்போதைய அறுபதற்குரிய முறை நேர அளவீடானது ஏறத்தாழ கி.மு 2000 ஆண்டு காலத்தைச் சேர்ந்ததாகும்.

புராதன எகிப்தியர்கள் ஒரு நாளை இரண்டு 12மணிநேர காலங்களாகப் பிரித்து, சூரியனின் நகர்வைத் தடமறிவதற்கு பெரிய சதுரத்தூபிகளைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் நீர்க் கடிகாரங்களையும் உருவாக்கினார்கள். இது முதன் முதலில் அநேகமாக அமுன்-ரி எல்லைப்பகுதியில் (Precinct of AmundRe) பயன்படுத்தப்பட்டு, பின்னர் எகிப்துக்கு வெளியேயும் பயன்படுத்தப்பட்டது. புராதன கிரேக்கர்கள் அவற்றைப் பெரும்பாலும் பயன்படுத்தினார்கள்.

இன்று கடிகாரம் என்பதை நேரம் பார்ப்பதற்காக என்பதை மறந்து அதை ஒரு அழகுப் பொருளாகக் கருதி அணிந்து கொள்ளத் தொடங்கிவிட்டனர் மக்கள். காலையில் உதிக்கும் சூரியனின் ஒவ்வொரு அசைவிலும் நேரத்தை துல்லியமாகக் கணக்கிட்டு தினமும் தங்களின் வேலைகளைச் செய்து வந்த மனிதர்கள், இன்று ஆயிரம் அதிநவீன வசதிகள் இருந்தும் தங்களின் நேரங்களை சரியாகப் பயன்படுத்த மறந்து தடுமாறும் நிலையில் இருக்கிறார்கள் என்பது மட்டும் யாரும் மறுக்க இயலாத உண்மை.

இவ்வாறுதான் ஒரு முறை ஷாங் மன்னர் பரம்பரையினர் நீர் வழிந்தோடும் கடிகாரத்தைப் பயன்படுத்தியதாக நம்பப்படுகிறது. இக்கடிகாரங்கள் கி.மு 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் மெசபோடோமியாவிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட கருவிகளாகும்.

இந்தச் சாதனத்தில், தண்ணீர் ஒவ்வொரு துளியாக ஒரு கற்பாத்திரத்தில் விழுமாறு அமைக்கப்பட்டது. திரட்டபட்ட தண்ணிரின் அளவை அடிப்படையாகக் கொண்டு நேரம் அளவிடப்பட்டது.

பிற புராதன காலங்காட்டும் கருவிகளில் சீனா, ஜப்பான், பிரிட்டன் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்பட்ட மெழுகுவர்த்திக் கடிகாரம், இந்தியா மற்றும் திபெத் ஆகிய நாடுகளிலும், ஐரோப்பாவின் சில பகுதிகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட டைம்ஸ்டிக் (Timestick) மற்றும் நீர்க் கடிகாரம் போல இயங்கிய மணல் சொரிந்து காலங்காட்டும் கருவி ஆகியவை உள்ளடங்கும்.

அந்தக் காலத்தில் சூரியனின் தோற்றம் மற்றும் சூரியனின் மறைவை வைத்து மட்டும்தான் நேரத்தைக் கணித்தார்களா எமது முன்னோர்கள் என்று பார்த்தால் அதையும் கடந்து பல பறவை இனங்கள் எழுப்பும் ஒலிகளைப் பயன்படுத்தியும் நேரத்தைத் துல்லியமாகக் கணித்திருக்கிறார்கள். எமது முன்னோர்கள் சேவல் கூவும் சத்தத்தை வைத்து விடியலின் நேரத்தைக் கணக்கிட்டார்கள் அதனை இன்றும் கிராமப் புறங்களில் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் இந்த சேவல் மட்டுமல்லாது மற்றைய சில பறவைகளும் மனிதனின் நேரக் கணக்கீட்டுக்கு உதவியமை வரலாற்றுச் செய்தி.

கடிகாரம் பயன்படுத்தத் தொடங்கிய போது ஆரம்ப காலக் கடிகாரங்கள் சூரியன் ஏற்படுத்துகின்ற நிழல்களைச் சார்ந்திருந்தன. ஆகவே மேக மூட்டமான வானிலையில் அல்லது இரவில் அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. மேலும் பருவகாலம் மாறும் போது மீண்டும் அளவுத்திருத்தம் செய்ய வேண்டியும் இருந்தது. சுழற்சி ஆற்றலை விட்டு விட்டு நிகழும் அசைவுகளாக மாற்றிய, நீரினால் இயங்கும் ஒழுங்படுத்தும் இயந்திர அமைப்பு பொறி முறையுடன் ஆரம்பகாலத்திலிருந்த கடிகாரமானது, கி.மு மூன்றாம் நூற்றாண்டு புராதன கிரீஸ் காலத்துக்குரியதாகும்.

பின்னர் சீனப்பொறியியலாளர்கள் பாதரசத்தால் இயங்கும், ஒழுங்குபடுத்தும் இயந்திர அமைப்பு பொறிமுறைகள் ஒன்றாய் சேர்ந்திருக்கின்ற கடிகாரங்களைப் பத்தாம் நூற்றாண் டில் கண்டுபிடித்தனர். அதையடுத்து 11 ஆம் நூற்றாண்டில் பற்சக்கர அமைப்புகள் மற்றும் பாரங்கள் ஆகியவற்றால் இயக்கப்படும் நீர்க் கடிகாரங்களை அராபிய பொறியியலாளர்கள் கண்டுபிடித்தனர். கி.பி.1510 ஆம் ஆண்டுப் பகுதியில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பூட்டுச் செய்யும் தொழிலாளியான பீட்டர் ஹென்கின் என்பவர், நேரத்தைக் காட்டும் நின்ற நிலையிலான கடிகாரம் ஒன்றை உருவாக்கினார்.


பின்னர் 1656 ஆம் ஆண்டு வாக்கில் டச்சு நாட்டுத் தொழில்நுட்ப வல்லுநர் ஹியூஜன்ஸ் என்பவர் ஊசல் (Pendulum) அசைவில் இயங்கும் கடிகாரம் ஒன்றை உருவாக்கி நேரத்தை அளவிடும் முயற்சியில் வெற்றி பெற்றார். இவர் ஒரு நாளை 24 மணிகளாகவும் ஒரு மணியை 60 நிமிடங்களாகவும், ஒரு நிமிடத்தை 60 நொடிகளாகவும் பாகுபாடு செய்தார். புதிய முறைகளைப் பயன்படுத்திக் கடிகாரத்தையும் மேம்படுத்தினார். இப்போதுள்ள கடிகாரங்களெல்லாம் இதன் முன்னேறிய வடிவங்களேயாகும். தொடக்கத்தில் இந்தக் கடிகாரத்தின் பகுதிகளெல்லாம் மரத்தில் செய்யப்பட்டவைகளாகவே இருந்தன. பின்னாளில் இப்பகுதிகள் உலோகத்தாலும், கண்ணாடியாலும் செய்யப்பட்டன. கி.பி.1927 இல் கனடா நாட்டுத் தொலைத் தொடர்புத் துறையைச் சேர்ந்த தொழில்நுட்ப நிபுணர் வாரன் மோரிசன் என்பவரால் கண்ணாடியாலான கடிகாரம் ஒன்று உருவாக்கப்பட்டது. இது மிகக்குறைந்த காலத்திலேயே பெரிய வரவேற்பைப் பெற்றது. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை, ஊசல்களைப் பயன்படுத்தி இயங்கும் கடிகாரங்களே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தன. சமச்சீராக அசையும் ஊசல், கடிகாரத்தின் இரு முள்களை இயக்கிச் சரியான நேரத்தைக் காட்டுவதற்குப் பயன்பட்டது. இவ்வகைக் கடிகாரங்களை இன்றும் ஆங்காங்கே காணலாம். ஆனால் மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், ஊசல் கடிகாரங்கள் மாற்றமடைந்தன.

> 1656 ஆம் ஆண்டு வாக்கில் டச்சு நாட்டுத் தொழில்நுட்ப வல்லுநர் ஹியூஜன்ஸ் என்பவர் ஊசல் (Pendulum) அசைவில் இயங்கும் கடிகாரம் ஒன்றை உருவாக்கி நேரத்தை அளவிடும் முயற்சியில் வெற்றி பெற்றார்.

அலெக்சாண்டர் பெயின் என்பவர் 1840 ஆம் ஆண்டில் பற்றரி (Battery) என்னும் மின்கலத்தைப் பயன்படுத்தி இயங்கும் கடிகாரத்தைக் கண்டுபிடித்தார். பின்னர் பல அறிவியல் அறிஞர்கள் இவ்வகைக் கடிகாரத்தை மேம்படுத்தினர். பெரிய மின்கலங்களுக்குப் பதிலாகச் சின்னஞ்சிறு மின்கலங்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் எனப்படும் எச்.எம்.டி தொழிலகம் இந்தியாவின் பழைய கடிகாரத் தொழிற்சாலைகளுள் ஒன்றாகும். இத்தொழிலகம் கடிகாரங்களைத் தயாரிப்பதற்கு முன்பு பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட கடிகாரங்களே எமது நாட்டில் பயன்படுத்தப்பட்டன.

# உணர்ச்சியுள்ள செயற்கைக் கைகள்! விஞ்ஞானிகள் சாதனை!




இன்றைய கால கட்டத்தில் அதிகரிக்கும் விபத்துகளால் ஏராளமான வர்கள் உடல் உறுப்புகளை இழக்கிறார்கள். மற்றும் சில பயங்கர வியாதிகளாலும் உடல் உறுப்புகள் செயலிழக்கலாம். இது போல திடீர் சம்பவங்களால் கை, கால்களை இழந்தவர்கள் வாழ்வே திசைமாறிவிடும்.

இந்நிலையில் செயற்கைக் கை, கால்கள் பொருத்திக் கொள்ளும் வசதி இருக்கிறது. ஆனாலும் அவை இயற்கையான கை, கால்கள்போல செயற்படாது. பெயரளவில் ஒரு அங்கமாகவே இருக்கும். இந்தக் குறையைக் களைந்து விபத்தில் கைகளை இழந்தவர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு அளிக்கும் விதத்தில் நவீன வசதிகள் நிறைந்த செயற்கைக் கை உருவாக்கப்பட்டுள்ளது. அதிலும் இத்தாலி, சுவிற்சர்லாந்து, ஜெர்மனி, பிரிட்டன், டென்மார்க் ஆகிய நாடுகளை சேர்ந்த ஆய்வாளர்கள் இணைந்து செயற்கைக் கைக்கு உணர்ச்சி அளிக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டறிந்து அசத்தியுள்ளனர்.

தொடுதல் உணர்வை செயற்கைக் கைகள் உணரும் வகையிலான கண்டுபிடிப்பு தொடர்பான ஆய்வுக் கட்டுரை அமெரிக்காவிலிருந்து வெளியாகும் அறிவியல் இதழ் ஒன்றில்தான் முதலில் பிரசுரமாகியது. இப்படி இத்தாலி, சுவிற்சர்லாந்து, ஜெர்மனி, பிரிட்டன், டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இணைந்து செயற்கைக் கைக்கு உணர்ச்சி அளிக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவீன செயற்கைக் கைகளில் பொருத்தப்படும் சென்சா[illegible] கப்பட்டுள்ள எலக்ட்ரோடுகள், துண்டிக்கப்பட்ட கை[illegible] இருக்கும் நரம்புகளுடன் இணைக் கப்பட்டு உணர்ச்சிகளை உணரச் செய்கின்றன. இந்தச் செயற்கை உணர்ச்சிக்கருவி பொருத்தப்பட்ட கைகளின் மூலம் ஒரு பொருளை எடுக்கும்போது அது மென்மையாக இருக்கிறதா, கடினமானதாக இருக்கிறதா என்பதை உணர முடியுமாம். இனி விபத்து உள்ளிட்டவைகளில் கைகால்களை [illegible]சாதமாக இந்தப் புதிய [illegible] அமைந்துள்ளது.

இன்னமும் ஆய்வு நிலையில் இருக்கும் இந்த செயற்கைக் கை தொடர்பான கண்டுபிடிப்பு, பரவலான பயன்பாட்டுக்கு வர இன்னமும் சிறிது காலமாகலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். தீ விபத்து ஒன்றில் தனது கையை இழந்த டென்மார்க்கைச் சேர்ந்த டென்னிஸ் அபோ சோரென்சென் என்பவருக்கு இந்தச் செயற்கைக் கையை விஞ்ஞானிகள் பொருத்தி ஆய்வு செய்து வருகின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவையே நடுங்க வைக்கும் பத்திரிகை ஆசிரியர்

● நரேன்

ஜோர்ஜ் புஷ் வெள்ளை மாளிகையில் பெரும் சிந்தனையோடு உலாவிக் கொண்டிருந்தார். அவரது கைகள் காற்றில் கோலம் போட்டுக் கொண்டிருந்தன. உடனிருந்த அத்தனை பேரும் ஒன்றும் செய்யாது மௌன சாட்சிகளாக, சிலைகளாக தலை குனிந்து நின்று கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாமல் புஷ் பேச ஆரம்பித்தார்.

"நான் இந்த நாட்டின் தலைவர். ஆனால், அவ என்னையே கேள்வி கேட்டு, நான் கேட்கிறதை மறுக்கிறா. நான் இனிமேல் யாரிடம் போக முடியும்? இதை எதிர்க் கட்சியின் சதி என்றுகூடச் சொல்லித் தப்பிக்க முடியாது. எதையாவது செய்யுங்கள், ஆனா, அந்தச் செய்தி வெளியே வரக்கூடாது..."

மீண்டும் மௌனம் நிலவியது. தேசிய பாதுகாப்புச் சபையில் ஜெனரல் மெதுவாக வாய் திறந்தார்.

"மிஸ்டர் பிரசிடெண்ட், அவர்களிடம் இருக்கிற ஆதாரம் அத்தனையும் நிஜம். எங்களின் இராணு வத்தினரை வைத்தே முழு நேர்காணலுக்கும் போட்டோக்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதை எங்களால் எதைக் காரணம் காட்டியும் மறுக்க முடியாது. ஊடகங்களிடம் தொடர்ச்சியாகப் பேச வேண்டும் என்று நீங்கள்தான் போன தடவை கூறினீர் கள். அது இப்போது வினையாக முடிந்து விட்டது. செய்தியைத் தடுக்க முடியாது. ஐம் சொரி சேர்.."

மறுநாள் காலை நாளிதழில் தலைப்புச் செய்தி. "ஈராக்கில் அமெரிக்க வீரர்களின் அட்டூழியம்." ஒரே நாளில் புஷ்ஷின் நன்மதிப்பு ஒட்டுமொத்தமாக காணாமற்போனது. போருக்கு எதிரான குரல் பலமாக ஒலிக்க ஆரம்பித்தது. இதை அடிப்படையாகக் கொண்டு ஒபாமா வந்ததுதான் பின்னாளின் வரலாறு. அமெரிக்க அரசே எதிர்த்த போதும் துணிச்சலுடன் அமெரிக்காவில் இருந்தே அமெரிக்காவின் முகத் திரையைக் கிழித்த இந்த நாளிதழ் 'நியூயோர்க் டைம்ஸ்'. கிழித்தவர், ஜில் ஆப் ரம்சன் என்ற பெண்.




ஜில் ஆப்ரம்சன், புஷ்ஷை நார் நாராகக் கிழித்த போது அவர் 'நியூயோர்க் டைம்'ஸின் வொஷிங்டன் நகர்ப் பொறுப்பில் இருந்தார். 'நியூயோர்க் டைம்ஸ்' மேலதிகாரிகளிடமிருந்து வந்த அழுத்தத்தையும் தாண்டி செய்தியை வெளியிட்டார். ரிப்பளிக்கன் அரசு கவிழ்ந்த பல காரணங்களில் ஒரு காரணம் ஜில். 2011இல் 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகைக் குழு அவரை 'நியூயோர்க் டைம்' ஸின் பிரதம ஆசிரியராக நியமித்தது. 60 வயதாகும் ஜில், ஹார்வேர்ட் பல்கலைக் கழகத்தில் இளங்கலை வரலாறும் இலக்கியமும் படித்தவர்.

170 வருட பாரம்பரியம் மிக்க நாளிதழ். அமெரிக்கர்களுக்கு காலையில் தேநீரும், 'நியூயோர்க் டைம்'ஸும் இல்லாமல் பொழுது விடியாது. இந்தத் துணிச்சலும் தைரியமும்தான் பின்னாளில் விக்கி லீக்ஸ் இரகசியமாகப் பெற்ற அரசு ஆவணங்களை முதல் பக்கத்தில் போட வைத்தது. உலகிலேயே இரண்டே நாளிதழ்கள்தான் விக்கி லீக்ஸோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தன.

ஜில் ஆசிரியராக இருக்கும் 'நியூயோர்க் டைம்ஸ்' லண்டனிலிருந்து வரும் 'கார்ட்டியன்'. என்பவையே அவை. விக்கி லீக்ஸின் ஜூலியன் அசாஞ்கே ஒரு பேட்டியில் சொன்னது: "நாங்கள் வெளியிட்டது அத்தனையும் உண்மை. ஆனால் இந்த உண்மையை வெளியிட நெஞ்சுரமும், நேர்மையும் இருக்கிற நாளிதழ்களே தகுதியானவை. அதனாலேயே நாங்கள் 'நியூயோர்க் டைம்'ஸிலும், 'கார்ட்டிய'னிலும் வெளியிட்டோம். இந்த அசாத்திய தீரத்துக்குப் பின்னிருந்துதான் ஜில் ஆப்ரம்சனின் சாதனைகளை நாம் கண்டறிய வேண்டியுள்ளது. டைம்ஸ் குழுமம் என்பது ஒரு சாதாரண பத்திரிகை இல்லை. அமெரிக்கா தாண்டி, இணையம் வழியாக மட்டும் சுமார் 50 மில்லியன் வாசகர்கள் இருக்கிறார்கள். ஒரு செய்தி தவறானால் கூட கிழித்து தோரணம் கட்டி தொங்க விட்டு விடுவார்கள். ஒவ்வொரு செய்தி, தகவல் என எல்லா இடங்களிலும் கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு பார்க்க வேண்டிய வேலை. ஜில் இதைச் சர்வசாதாரணமாகச் சாதித்திருக்கிறார். பதவியேற்ற மூன்றாண்டுகளில் 'நியூயோர்க் டைம்ஸ்' வெவ்வேறு பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதன் பயன்கள் தெரிய ஆரம்பிக்கின்றன. மொத்த விநியோகம் அதிகரித்திருக்கிறது. ஜில்லால் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள் உலகெங்கிலும் நடக்கக்கூடிய நிகழ்வுகளின் ஆதாரத்தைத் தேடிப் பிடிக்கிறார்கள். அரசாங்கங்கள் ஜில்லின் ஆசிரியர் தலையங்கத்தை உன்னிப்பாகக் கவனிக்கின்றன. அவர் எழுதும் தலையங்கங்களில் தான் பல தேசங்களின் தலையெழுத்து நிர்ணயிக்கப்படுகிறது. இந்தப் பொறுப்பு சாதாரணமானதல்ல. ட்ரக் வைத்தெல்லாம் ஜில்லைக் கொல்ல முயற்சிகள் நடைபெற்றுள்ளன. வாழ்வின் உச்சமென்பது ஒரு நாளும் ஜால்ரா அடிப்பதால் வராது. அதற்கான உழைப்பும் விடாமுயற்சி யும் அதை சாதித்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

'பாரீன் பொலிஸி' பத்திரிகை உலகின் 500 முக்கியமான நபர்கள் என்று போட்ட பட்டியலில் ஜில் இடம்பெற்றிருக்கிறார். யூத இனத்திலிருந்து பத்திரிகைத்துறையை ஆளும் ஒரே பெண் என்கிற பெருமையும் ஜில்லுக்கு உண்டு. போர்ப்ஸ் பத்திரிகையின் உலகின் மிகப் பலமான பெண்கள் பட்டியலில் ஜில்லுக்கு எட்டாவது இடம். ஜில்லைத் தவிர ரொப் 10 இல் இருப்பவர்கள் அத்தனை பேரும் அரசியல், ஐக்கிய நாடுகள் சபை மாதிரியான அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள். ஜில் ஒருவர்தான் பத்திரிகையாளர்.

ஒரு பேட்டியில் அவர் சொன்னது: "நான் பெண்ணாக இருப்பதனாலேயே இந்தப் பொறுப்பு எனக்குக் கிடைத்தது என்று சொல்ல முடியாது. நான் இதற்குத் தகுதியானவள். தகுதியைச் சார்ந்தே உயர்வு நிர்ணயிக்கப்படுகிறது. ஆனாலும், ஒரு பெண்ணாக 'நியூயோர்க் டைம்'ஸினை வழிநடத்துவது என்பது பெரிய போட்டி. இதை நான் நடத்துகிறேன் என்பதைவிட மக்கள் வழி நடத்து கிறார்கள் என்றே கூற வேண்டும். நான் அவர்களின் குரலுக்கான வாயிலாக மட்டுமே இருக்க விரும்புகிறேன்..."



# அழகாக இல்லையே என்ற கவலை இனிமேல் வேண்டாம்

அழகாக இல்லையே என கவலைப்பட்டு கொண்டிருக்கும் நபர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. ஜேர்மனி நாட்டின் ஜெனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனநல ஆய்வாளர்கள் ஹோல்ஜர் வீஸ், கரோலின் ஆல்ட்மேன் மற்றும் ஸ்டெபான் ஸ்க்வெய்ன்பொர்ஜர் ஆகியோர் தலைமையில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. இதில் அழகான முகங்களைக் கொண்டவர்களை விட அழகற்ற முகங்களைக் கொண்டவர்களே அதிகள வில் நினைவில் இருப்பார்கள் என்று கண்டறியப்பட்டது.

ஆய்வில் கலந்து கொண்டவர்களில் அரைப்பங்கினர் வசீகர முகத்துடனும், மீதமுள்ள அரைப்பங்கினர் வசீகரம் குறைந்த முகத்துடனும் இருந்தனர். எனினும், அனைவரும் தாங்கள் தனித்துவமான தோற்றத்தைக் கொண்டவர்கள் என்று கருதினர். அழகான நபர்களை விட அழகற்ற முகம் கொண்டவர்களின் புகைப்படங்கள் எளிதில் அடையாளம் காணப்பட்டன. எனினும், ஏஞ்சலினா ஜோலீ போன்ற தனித்தன்மை வாய்ந்த முக அமைப்பைக் கொண்டவர்களை மக்கள் எளிதில் அடையாளம் கண்டு கொள்கின்றனர்.

மேலும் உணர்வு ரீதியிலான பாதிப்பு காரணமாக, அழகான முகத்தை கொண்டவர்களை நினைவில் வைப்பதற்கு கடினமாக உள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

இதற்கு ஆதாரமாக விஞ்ஞானிகள் தங்களது ஆய்வில் பயன்படுத்திய ஈ.ஈ.ஜி. பதிவுகள் அதனை வெளிப்படுத்தும் விதமாக அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதில் மூளையின் மின் செயற்பாடுகள் அதற்கேற்ப செயற்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து எஸ்செக்ஸ் பல்கலைக்கழகத்தின் சமூக மற்றும் பொருளாதார ஆய்வு அமைப்பின் ஆராய்ச்சியாளரான கண்டி நைஸ் கூறுகையில், நல்ல தோற்றம் கொண்டவர்கள் தங்கள் அழகினால் ஆதாயம் பெறுகின்றனர். முக வசீகரம் ஆனது ஒருவரது தொழிலில் அவரது கௌரவம் குறித்த தீர்மானத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

# ஆதரவற்ற சிறுவர்களுக்கு அரும்பணி ஆற்றிய பெருந்தகை



போரின் வடுக்களைச் சுமக்கின்ற ஏழைத் தமிழ்ச் சிறுவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய கருணைத் தீபம் கடந்த 2013 மார்கழி மாதம் 29 ஆம் திகதி லண்டனில் அணைந்துவிட்டது. லண்டன் தமிழ் அநாதைகள் அறக்கட்டளையின் ஸ்தாபகர் பொன். தெய்வேந்திரம் காலமாகிவிட்டார் என்ற செய்தி தமிழ் நெஞ்சங்களைத் தடுமாற வைத்துவிட்டது. அமரர் பொன் தெய்வேந்திரம் தன்னலமற்ற சமூக சேவையாளர். மனிதநேயமும் தூர நோக்கும் கொண்டு செயற்பட்டவர். பொன்னம்பலம்-மாசிலாமணி யின் அருந்தவப் புதல்வனாய் 1938 இல் உரும்பிராய் கிழக்கில் அவதரித்தார். சிறந்த முன்மாதிரியான நடத்தை கொண்டவர். 1983 ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த இனப்படுகொலையில் பெற்றோரை இழந்து பரிதவிக்கும் சிறார்களின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்தவர். லண்டனில் வாழ்ந்த தமிழ் அன்பர்கள் சிலரை ஒன்றிணைத்து தமிழ்ச் சிறுவர், சிறுமியர்களின் நலன் காக்கவென 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே லண்டன் தமிழ் அநாதைகள் அறக்கட்டளை நிறுவனம் ஆகும். அதன் ஸ்தாபகத் தலைவராகவிருந்து இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு சமூக சமயப் பணிகள் பல புரிந்தவர்.

இந்த அமைப்பு இன, மத, அரசியல் சார்பற்ற வகையில் பணிகளை முன்னெடுத்தது. தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டையும் விடிவையும் கருதிச் செயற்பட்டது. அமரர் தெய்வேந்திரம் போர்க் காலக் கெடுபிடிகளின் மத்தியிலும் இலங்கைக்கு பல தடவைகள் பயணம் மேற் கொண்டார். வடக்கு, கிழக்குப் பிரதேசம் எங்கும் சென்றார். தமிழ்ச் சிறார்களின் சோகங்களை, மன வடுக்களைக் கேட்டறிந்தார். லண்டன் சென்று தனது அனுபவங்களை அறக்கட்டளையின் ஏனைய அங்கத்தவர்களுடன் பகிர்ந்து கொண்டார். இந்த வகையில் தமிழ் அநாதைகள் அறக் கட்டளையின் உதவிக்கரங்கள் உணர்வோடு பணி செய்தன. ஆதரவற்ற சிறுவர் களுக்காக காணிகள் கொள்வனவு செய்யப்பட்டன. சிறுவர் இல்லங்கள் அமைக்கப்பட்டன. சிறுவர்களுக்கான உணவு, உடை,வசிப்பிடம், கல்வி, தொழிற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டன. கணினி நிலையங்கள், மர வேலைப் பட்டறைகள், தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. ஊனமுற்ற சிறுவர் களுக்கு உதவ முச்சக்கர வண்டிகள், பிரயாண வண்டிகள் வழங்கப்பட்டன. 2004 ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை,

## நீத்தார் நயப்புரை

பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் உரும்பிராயில் 2002. 11.02. ஆம் திகதி ஆதரவற்ற சிறுவர் களுக்காக "கருணை இல்லம்" என்ற இல்லம் உயர்ந்த நோக்கோடு இவரால் ஆரம்பிக்கப்பட்டது. லண்டன் தமிழ் அநாதைகள் அறக்கட்டளையின் சேவை தமிழர் தாயகமெங் கும் பரந்து விரிந்தது. அந்த வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கிய பல உள்ளூர் பொது நலனோக்கு நிலையங்களுக்கு லண்டன் தமிழ் அநாதைகள் அறக்கட்டளையின் பலதரப்பட்ட உதவிகள் வழங்கப்பட்டன. வறிய மாணவர்களுக்கான உடைகளும் ஏனைய பொருள்களும் மலையகத்திலும் வழங்கப்பட்டன. இந்தவகையில் ஊருணியாய் உதவிய பொன். தெய்வேந்திரம் அவர்களின் இழப்பு காலத்தால் ஈடுசெய்ய முடியாததொன்று.

*இரா. ஜெயக்குமார், அதிபர், யா/மயிலணி சைவ ம. வி.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org